தமிழ் அச்சுத்தந்தை
அண்ட்ரிக் அடிகளார்



ஆ. சிவசுப்பிரமணியன்

UG6026
R007H03
u.G.6026

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

தமிழ் அச்சுத்தந்தை அண்ட்ரிக் அடிகளார்

ஆ. சிவசுப்பிரமணியன்
பேராசிரியர் (ஓய்வு)
வ.உ.சி. கல்லூரி
தூத்துக்குடி

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர்-சென்னைப் பேராயர் இரா. அருளப்பர்
வரிசை எண் : 7 நாள்: 25.7.2003

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamil Acchu Thanthai Antrick Adikalar
Author	:	A. Sivasubramanian Professor (Rtd.,) V.O.C. College, Thoothukudi
Publisher	:	International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
General Editor	:	Dr. S. Nirmaladevi Research Assistant, IITS
Publication No.	:	453
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	2003
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	viii + 96
No. of Copies	:	1200
Price	:	Rs. 30/- (Rupees Thirty Only)
Printed by	:	Powerman Printers 89, Coral Merchant Street Mannady, Chennai - 600 001 PH. 25248342
Subject	:	Tamilology

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

கி.பி. *1439*இல் ஜெர்மனியைச் சேர்ந்த ஜான் கூட்டன்பர்கு என்பவர் சிறிய மரத்துண்டுகளில் தனித்தனி எழுத்துகளைச் செதுக்கி அச்சுத் தொழிலுக்கு முதன்முதலில் அடிகோலினார். கூட்டன்பர்க்கின் ஏற்பாட்டுடனும் பாஸ்ட்டின் ஒத்துழைப்புடனும் ஸ்கோபரின் கைவண்ணம் பட்டும் கி.பி. *1455*இல் அச்சுக்கலை செம்மையாக உருவாகியது.

கிறித்தவச் சமய ஊழியத்திற்காகப் போர்ச்சுகலிலிருந்து ஆப்பிரிக்காவிலுள்ள அபிசீனியாவுக்குக் கப்பலில் அனுப்பப்பட இருந்த அச்சுகளும் அச்சியந்திரமும் அச்சடிப்பாளரும் பாதிரிமாரும் காலநிலை சரியில்லாததால் இந்தியாவிலுள்ள கோவாவில் வந்து இறங்கும்படி நேரிட்டது. இந்த வகையில் அச்சுக் கலை *6-9-1556*ஆம் ஆண்டு இந்தியாவிற்குள் வந்தது. புதிதாகக் கிறித்தவ மதத்திற்கு மாறியவர்களுக்குப் பயன்படக் கூடிய அளவில் துண்டு வெளியீடுகளையும் நூல்களையும் அச்சிடத் திட்டமிட்டனர் பாதிரிமார்கள். ஆனால் அச்சுக் கருவிகளுடன் வந்திறங்கிய மதபோதகர் திடீரென இறந்து விட்டதால் அச்சுக் கருவிகளைக் கையாள்வதற்குப் பல நாட்கள் பிடித்தது.

*20-2-1557*இல் ஹென்றி ஹென்றி குவிஸ் பாதிரியார் என்ற அண்ட்ரிக் அடிகளார் 'தம்பிரான் வணக்கம்' என்ற *16* பக்கங்கள் கொண்ட துண்டு வெளியீட்டைக் கொல்லத்தில் அச்சடித்து வெளியிட்டார். தமிழ் எழுத்து அச்சுகளில் வெளிவந்த முதல் நூலாக இது அமைந்து, "தமிழ் அச்சுத்தந்தை அண்ட்ரிக் அடிகளார்" என்ற பெயரை இவருக்குப் பெற்றுத் தந்தது.

கிறித்தவத் தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவாக நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பெறும், 'தமிழ் அச்சுத்தந்தை அண்ட்ரிக் அடிகளார்' என்ற இந்நூல் அண்ட்ரிக் அடிகளாரைப் பற்றிய முழு வரலாற்றை அறியப் பயன்படும் முறையில் அமைந்துள்ளது. அடிகளார்

தமிழ் நாட்டுக்கு வந்த பொழுது, தமிழ் நாட்டில் இருந்த சமய, சமூகச் சூழலையும் அவர் ஆற்றிய சமயத் தொண்டு, சமூகத் தொண்டு, தமிழ்த் தொண்டையும் பற்றிய விரிவான ஆய்வு நூலாக இந்நூல் அமைந்துள்ளது. அடிகளாரின் நூல்கள் குறித்தும் புன்னைக்காயல் அச்சகம் குறித்தும் சிறப்பான விளக்கங்களை இந்நூல் அளித்துள்ளது. அடிகளார் பயன்படுத்திய சில சொற்களின் ஆழ்ந்தகன்ற விளக்கங்களையும், 'தமிழ் அச்சுத்தந்தை' என்ற அடைமொழிக்குரியவராக அண்ட்ரிக் அடிகளார் உயர்ந்த தன்மையையும் நூல் தெளிவுபடுத்தியுள்ளது.

அண்ட்ரிக் அடிகளார் காலத்திய தென்தமிழகத்தின் வரைபடங்கள், கார்ட்டிலா நூலின் *(1554)* முகப்புத் தோற்றப்படம், கிரீசித்தியானி வணக்கத்தின் முகவுரை, தொடக்கப்பக்க வடிவம் ஆகியன இடம் பெற்று இந்நூலுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளன. அக்கால உரைநடையின் தன்மையைப்பற்றி ஆய்வு செய்வாருக்குப் பயன்படும் முறையில் நூலின் பல இடங்களில் மேற்கோள் வடிவங்கள் ஆளப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலின் ஆசிரியர் திரு. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பாகவும் கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளை அமைப்பாளர் சார்பாகவும் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளை நிறுவிய, சென்னைப் பேராயர் இரா. அருளப்பர் அவர்களுக்கும், இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை பவர்மேன் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
25-6-2003

இயக்குநர்

நன்றியுரை

தமிழ்மொழியின் அச்சுத் தந்தை என்றழைக்கப்படும் அண்ட்ரிக் அடிகளார் (Henrique Henriques) குறித்து நான் சேகரித்து வைத்த செய்திகளைத் தொகுத்து, நூலாக எழுதும் வாய்ப்பில்லாமல் இருந்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு அழைத்ததன் வாயிலாக, இன்று அச்செய்திகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. இதற்கு உறுதுணையாக இருந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அறக்கட்டளைச் சொற் பொழிவின் பொறுப்பாளர் முனைவர் சூ. நிர்மலா தேவி அவர்களுக்கும் என் நன்றி உரியது.

சகோதரி டெக்லா (புனித மரியன்னை கல்லூரி), திருவாளர்கள் அரி. சூரியகுமார், ஜெரார்டு ராயன், முனைவர் அ. பிரான்சிஸ் (வ.உ.சி. கல்லூரி), பணி. ச. தே. செல்வராசு அடிகளார், பணி. ஆரோக்கியதாஸ் சே.ச. (அருள்கடல், சென்னை) ஆகியோர் தரவுகள் சேகரிப்பில் உறுதுணையாய் இருந்தனர். ஏதாவது ஒருவகையில் எனது நூலாக்க முயற்சிகளுக்குத் துணை நிற்கும் அன்புத் தோழர் முனைவர் மே. து. ராசுக்குமார், முனைவர். ந. முத்துமோகன், முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி (Madras Institute of Development Studies, Chennai), பணி. பிரான்சிஸ் செயபதி சே.ச. ஆகியோருக்கும் என் நன்றி உரியது.

பேராசிரியர் ரகு அந்தோணி, ஆங்கில மொழிபெயர்ப்பு களைச் செழுமைப்படுத்த உதவினார். கையெழுத்துப் படி எடுக்க திரு. ஜெரார்டு ராயன், திரு. சே. மாரிமுத்து ஆகிய இருவரும் உதவினர். முனைவர் நா. இராமச்சந்திரன் மெய்ப்புத் திருத்தியும், நூலின் முதல் வாசகராக இருந்து விமர்சனம் செய்தும் உதவினார்.

நூலைக் கணினியாக்கம் செய்யவும், இந்நூலில் இடம் பெற்றுள்ள இரு வரைபடங்களை இணைத்துக் கொள்ளவும்

பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தின் இயக்குநர் பணி. பிரிட்டோ வின்சென்ட் சே.ச அனுமதி வழங்கினார். கணினியாக்கத்தில் திருமதி உமாவைத்தி, திருமதி டெய்சி, செல்வி அருள்மேரி ஆகியோர் உதவினர். இவர்களனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி உரியது.

அண்ட்ரிக் அடிகளாரின் நூல்களை அன்பளிப்பாகத் தந்து அவரை முதன் முதலாக எனக்கு அறிமுகப்படுத்திய அருட்திரு. அ. மிக்கேல் அடிகளார் (தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி - திருச்சி), இந்நூலுக்கான செய்திகள் சேகரிப்பில் ஈடுபட்டபோது பேராசிரியர் ரம்போலா மஸ்கரனாஸ், வ.உ.சி. கல்லூரி நூலகரா யிருந்த ஜே. முத்தையா பர்னாந்து ஆகிய இருவரும் துணை நின்றனர். தற்போது இந்நூல் உருவாவதைக் காண இம்மூவரும் இவ்வுலகில் இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது. இவர்கள் மூவரது நினைவிற்கும் இந்நூலைக் காணிக்கையாக வழங்கி நிறைவடைகிறேன்.

ஆ. சிவசுப்பிரமணியன்
'பாரதி'
2/36அ, மூன்றாம் குறுக்குத் தெரு
தபால் தந்தி குடியிருப்பு (மேற்கு)
தூத்துக்குடி *628 008*

பொருளடக்கம்

1. பரதவர் 1
2. தமிழ்நாட்டில் இஸ்லாம் 9
3. பரதவர்களின் சமயமாற்றம் 16
4. அண்ட்ரிக் அடிகளார் 21
5. அண்ட்ரிக் அடிகளாரின் நூல்கள் 34
6. புன்னைக்காயல் அச்சகம் 56
7. அடிகளார் பயன்படுத்திய சில சொற்கள் 74
8. தமிழ் அச்சுத் தந்தை 85

துணை நூற்பட்டியல் 90

பின்னிணைப்பு 95

ஆசிரியரைப் பற்றி . . .

இந்நூலின் ஆசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் (1943 -) தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் கல்லூரியின் தமிழ்த் துறையில் தமிழாசிரியராகப் பணியாற்றி 2001-ல் ஓய்வு பெற்றவர். மார்க்சியத்தின் மீது நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவர். பேராசிரியர் நா. வானமாமலையின் மாணவர் என்று தம்மைக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்பவர். நாட்டார் வழக்காற்றியல், அடித்தள மக்கள் ஆய்வு என்ற அறிவுத் துறைகளில் ஈடுபாடு கொண்டு தொடர்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதி வருகிறார். ஜீவா தோற்றுவித்த **தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்**, பேராசிரியர் நா. வானமாமலை உருவாக்கிய **நெல்லை ஆய்வுக் குழு**, பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் செயல்படும் நாட்டார் **வழக்காற்றியல் ஆய்வு மையம்** ஆகிய அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறார்.

1. பரதவர்

சைவம், வைணவம் என்ற இரு நிறுவனச் சமயங்களும், தொல் பழஞ் சமயத்தின் பல்வேறு கூறுகளை உள்வாங்கிக் கொண்ட நாட்டார் சமயமும் தமிழகத்தின் பாரம்பரியச் சமய நெறிகளாக இருந்தன. வடபுலத்தில் உருவாகிய வைதீகச் சமயம் தமிழ் நாட்டிலும் பரவியது. இதனையடுத்து வைதீகச் சமயத்தை எதிர்த்து உருவாகிய பௌத்தம், சமணம், ஆஜீவகம் ஆகிய சமய நெறிகளும் தமிழகத்தில் பரவின. இவ்வாறு பல்வேறு சமயநெறிகள் வழக்கிலிருந்த நாடாகத் தமிழகம் விளங்கியது.

இதன் வளர்ச்சி நிலையாக அரேபியாவிலிருந்து இஸ்லாம் தமிழ்நாட்டில் பரவியது. இதன் பின்னர் தமிழ்நாட்டில் பரவிய ஒரு முக்கியச் சமயம் கத்தோலிக்கக் கிறித்தவம் ஆகும். தமிழின் அச்சுத்தந்தை என்று போற்றப்படும் அண்டிரிக் அடிகளார், தமிழ்நாட்டில் கத்தோலிக்கம் பரவிய தொடக்கக் காலமான 16ஆம் நூற்றாண்டில் சமயப் பணி புரிந்தவர் என்பதால் அவரது தமிழ்ப் பணியை வரலாற்றுப் பின்புலத்தில் ஆராய்வது அவசியமாகிறது. எனவே தமிழ்நாட்டில் கத்தோலிக்கம் பரவிய வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம். இதன் முதற்படியாக இச்சமயத்தை ஒரு குழுமமாகத் தமிழ்நாட்டில் முதலில் தழுவிய பரதவர் என்ற சாதியினரைக் குறித்துச் சில செய்திகளை அறிந்து கொள்வது அவசியம்.

பரதவர்

தமிழகத்தின் நெய்தல் நில மக்களாகப் பரதவர்கள் என்ற குலத்தினரைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பாண்டிய நாட்டின் தென் பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் ‘தென் பரதவர்’ என்று குறிப்பிடப்படுகிறார்கள். சங்க காலத்தில் பாண்டிய மன்னருக்கு அடங்காது தன்னிச்சையான ஆட்சி முறையைக்

கொண்ட மக்களாகப் பரதவர் வாழ்ந்துள்ளார்கள். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் இவர்களிடம் போரிட்டு வென்றதை,

> செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
> அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பிற்
> கோழூஉன்குறைக் கொழுவல்சிப்
> புலவுவிற் பொலிகூவை
> யொன்றுமொழி ஒலியிருப்பில்
> தென்பரதவர் போரேறே

என்ற மதுரைக் காஞ்சி (139-144) அடிகளால் உணரலாம். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பரதவர்களை வென்ற செய்தியினை இவ்வாறு குறிப்பிடும் மதுரைக்காஞ்சி, 'தென் பரதவர் போரேறு' என்று அவனை அழைப்பதன் மூலம் பரதவர்களின் வலிமையையும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. சோழன் செருப்பொழியெறிந்த இளஞ்சேட்சென்னி இப்பரதவர்களை வென்றதனை,

> தென் பரதவர் மிடல் சாய

என்று புறநானூற்றுப் பாடல் (378:1) குறிப்பிடுகின்றது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் பரதவர்களை வென்றான். இச்செய்தியினை,

> "விரவிவந் தடையாத பரவரைப் பாழ்படுத்தும்"

என்ற வேள்விக்குடிச் சாசன வரி தெரிவிக்கிறது (பாண்டியர் செப்பேடு, 1967).

பரதவர்களின் பாரம்பரியத் தொழிலாக மீன்பிடித்தல் அமைந்தது. இதனால் "மீன்விலைப் பரதவர்" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடும். தமிழ்நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் மீன்பிடித்தல் மட்டுமின்றி சங்குக் குளித்தல், முத்துக் குளித்தல் என்ற தொழில்களையும் மேற்கொண்டு வந்தனர்.

பாண்டிய நாட்டுக் கடல்பகுதியில் கிடைக்கும் முத்துக்கள் சிறப்புடையதாக மதிக்கப்பட்டன. "பாண்டியக் கவாடம்", "தாம்பிர வருணிகம்" என்று அர்த்தசாஸ்திரம் தமிழ்நாட்டு

முத்துக்களைக் குறிப்பிடுகிறது. சந்திரகுப்த மௌரியன் தென்கடல் முத்தை அணிந்திருந்ததாக மெகஸ்தனிஸ் (கி.மு. 302-296) குறிப்பிட்டுள்ளார் (இராகவன் 1977 :294-95). தென்பாண்டி நாட்டின் துறைமுகமாக விளங்கிய கொற்கையிலிருந்து ரோமாபுரிக்கு முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்று பெரிப்புளுஸ் (கி.பி. 50-80) குறிப்பிட்டுள்ளார். தாலமி (கி.பி. 119-161) கொற்கையில் நிகழ்ந்த முத்துக்குளித்தலைக் குறிப்பிட்டுள்ளார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த மார்க்கோபோலோ முத்துக்குளித்தலைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார். தெற்கே கன்னியாகுமரி தொடங்கி வடக்கே இராமேஸ்வரம் வரையிலான கடற்கரைப் பகுதியில் முத்துக்கள் மிகுதியாகக் கிடைத்தமையால் இக்கடற்கரைப் பகுதி "முத்துக்குளித்துறை" எனப் பெயர் பெற்றது. முத்துக்குளித்தலில் பரதவர்களே ஈடுபட்டனர்.

மேற்கூறிய செய்திகள் பரதவர்களின் தொன்மையையும் அவர்களின் போர்க்குணத்தையும் அறிவிக்கின்றன. இத்தகைய பரதவர்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலம் போர்ச்சுக்கீசியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தனர். பரதவர்கள் போர்ச்சுக்கீசியர்கள் ஆட்சியின் கீழ் எவ்வாறு வந்தனர் என்பதனையும், அதனால் அவர்கள் வாழ்வில் அடைந்த மாற்றங்களையும் அறியும் முன்னர் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் விளங்கிய அரசியல் நிலையை அறிய வேண்டும்.

16ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நாட்டின் அரசியல் நிலை

குலசேகர பாண்டியனின் பட்டத்தரசிக்குப் பிறந்த மகன், சடையவர்மன் சுந்தர பாண்டியன். குலசேகர பாண்டியனின் காமக்கிழத்திக்குப் பிறந்தவன் சடையவர்மன் வீரபாண்டியன். கி.பி. 1296இல் சடையவர்மன் வீரபாண்டியனை இளவரசனாக்கினான் குலசேகர பாண்டியன். இதனால் சினம் கொண்ட சுந்தர பாண்டியன் தந்தையைக் கொன்று கி.பி. 1310இல் ஆட்சியைக் கைப்பற்றினான். தந்தையின் மறைவிற்குப் பின் வீரபாண்டியன் மதுரையைத் தாக்கினான். தாக்குதலை எதிர்கொள்ள முடியாத

சுந்தரபாண்டியன் தலைநகர் மதுரையைக் கைவிட்டு ஓடி ஒழிந்தான்.

இக்காலத்தில்தான் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர் பெரும்படையுடன் தமிழ் நாட்டிற்குள் வந்தான். சுந்தரபாண்டியன் மாலிக்காபூரை அணுகித் தனக்கு உதவும்படி வேண்டினான். மாலிக்காபூர் மதுரையைத் தாக்க, வீரபாண்டியன் தலைநகரைக் கைவிட்டு ஓடினான். ஆயினும் அவ்வப்போது எதிர்பாராத வகையில் மாலிக்காபூரின் படைகளைத் தாக்கி அழித்து வந்தான். கி.பி. 1311இல் குலசேகர பாண்டியனின் இளவல் விக்கிரமப்பாண்டியன் மாலிக்காபூரைத் தாக்கி விரட்டினான். இதன்பின்னர் சுந்தரபாண்டியனும், வீரபாண்டியனும் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டுப் பாண்டிய நாட்டை ஆளத் தொடங்கினர்.

கி.பி. 1323இல் டில்லி சுல்தானாக இருந்த கியாசுதீன் துக்ளக் தன் மகன் உலுகானை (முகம்மது பின் துக்ளக்) பாண்டியன் மீது படையெடுக்க அனுப்பினான். இதன்பின்னர் பாண்டிய நாட்டின் பெரும்பகுதி டில்லி சுல்தானின் மாகாணங்களுள் ஒன்றாக மாறியது. என்றாலும் பாண்டியர் ஆட்சி முழுமையாக மறைந்து விடவில்லை. பாண்டிய மன்னர் பரம்பரையினர் குறுநில மன்னர்களாகத் தென்தமிழகத்தில், தென்காசி, கயத்தாறு, வள்ளியூர் ஆகிய பகுதிகளில் ஆட்சி புரிந்தனர். கி.பி. 1323 தொடங்கி 1371 வரை டில்லி சுல்தான்களின் ஆட்சியே மதுரையில் நிலவியது.

விஜயநகரப் பேரரசை நிறுவிய முதலாம் புக்கனனின் மகன் இரண்டாம் குமார கம்பண்ணன் 1371இல் மதுரையின் மீது படையெடுத்து, சுல்தான் பக்ருதீன் முப்ரக்ஷாவைத் தோற்கடித்து மதுரையைக் கைப்பற்றினான். இந்நிகழ்ச்சி 1371 ஏப்ரல் அல்லது மே திங்களில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கிருஷ்ணசாமி (1964 : 34) கருதுகிறார்.

இப்படையெடுப்பின் விளைவாக, விஜயநகரப் பேரரசின் மண்டலங்களுள் ஒன்றாக மதுரை மாறியது. மகா மண்டலேசு வரனாக குமார கம்பண்ணன் பதவி வகித்தான். இவனையடுத்து

மண்டலாதிபதியாக விளங்கிய விஜயநகர அதிகாரிகள் சுயஆட்சி கொண்டவர்களாக மாறத் தொடங்கினர். இந்த வகையில் மதுரையில் மண்டலேஸ்வரனாக இருந்த விஸ்வநாத நாயக்கர் (1529-1564) குறிப்பிடத்தகுந்த பணிகளை ஆற்றியுள்ளார். பாண்டியர் காலத்தில் இருந்த 'நாடு' என்ற பிரிவிற்கு மாறாக, 'பாளையப்பட்டு' முறையை ஏற்படுத்தினார். இதன்படி நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்பாளையங்களை ஆளுபவர்கள் 'பாளையக்காரர்' எனப்பட்டனர். குடிமக்களிடம் வரி வாங்கி அதில் மூன்றில் ஒரு பகுதியை நாயக்கருக்கும், மற்றொரு பகுதியைப் படை வீரர்களுக்கும் அளித்துவிட்டு, எஞ்சிய ஒரு பகுதியைப் பாளையக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். நீதி வழங்கும் அதிகாரமும் இவர்களிடம் இருந்தது. இம்முறையினால் மதுரையிலிருந்த மைய அரசு அன்றாட நிர்வாகப் பணியைக் குறைத்துக் கொண்டு, குடிமக்களின் நலனில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது. இதனால் பாளையக்காரர்களின் கொடூரங்களுக்கு அவ்வப் பகுதி மக்கள் ஆளானார்கள்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டின் கால்பகுதியில் வலிமை வாய்ந்த ஒரு மைய அரசு இல்லாததையும் ஆங்காங்கே குறுநில மன்னர்கள் எவ்வித வரைமுறையுமின்றி மக்களை ஆட்சிபுரிந்ததையும் மேற்கூறிய வரலாற்றுச் செய்திகள் உணர்த்துகின்றன. 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற பழமொழிக்குப் பொருத்தமான நிலை இக்காலத்தில் நிலவியது. விலைமதிப்பு மிக்க முத்து என்ற கடல்படுபொருளைச் சேகரித்து வாழ்ந்து வந்த பரதவர்கள் இத்தகைய அரசியல் சூழலில் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய முத்து வளம், அனைவரின் கண்களையும் உறுத்தியது. எனவே வாய்ப்பு நேரிடும் போதெல்லாம் வரி என்ற பெயரால் உள்நாட்டுப் பகுதியிலிருந்த குறுநில மன்னர்கள் அவர்களைக் கொள்ளையடித்தனர். குறிப்பாகக் கயத்தாறைத் தலைநகராகக் கொண்ட 'வெட்டும் பெருமாள்', பரமக்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த 'தும்பிச்சி நாயக்கர்' என்ற இரு குறுநில மன்னர்களைக் குறிப்பிடலாம். தற்போதையத் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி, தூத்துக்குடி

அண்ட்ரிக் அடிகளார் காலத்தியத் தென் தமிழகம்



நன்றி: Francis Xavier His Life, His Times Vol. II (உதவி : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை)



நன்றி: Francis Xavier His Life, His Times Vol. II (உதவி : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை)

வட்டங்களும் இன்றையத் திருநெல்வேலி வட்டமும் வெட்டும் பெருமாளின் ஆளுகையின் கீழ் இருந்தன.* கடலோரக் கிராமங்களான வைப்பாறு, வேம்பாறு, கீழக்கரை ஆகியன தெலுங்கரான தும்பிச்சி நாயக்கரின் ஆளுகையின் கீழ் இருந்தன. கன்னியாகுமரியிலிருந்து புன்னைக்காயல் வரையிலான கடற்கரைப் பகுதிகள் உன்னி கேரளவர்மன் என்ற திருவாங்கூர் மன்னனின் ஆளுகையின் கீழ் இருந்தன. விசுவநாத நாயக்கனும், கொல்லத்தைத் தலைநகராகக் கொண்ட உன்னி கேரளவர்மனும் தம் பங்கிற்குப் பரதவர்களைச் சுரண்டினர். வணிகர்களாக இருந்த அராபிய மூர்களும் தம் வாணிபச் சுரண்டலைப் பரதவர்கள் மீது நிகழ்த்தினர்.

அராபியர் ஆதிக்கம்

இவை ஒருபுறம் இருக்க அராபிய மூர்கள் முத்துக்குளித்துறையில் பொருளியல் ஆதிக்கம் செலுத்தினர். முத்தெடுக்கும் உரிமையைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு பரதவர்கள் சுயேட்சையாக முத்துக்குளிப்பதைத் தடுத்தனர். 1516ஆம் ஆண்டில் காயல் பட்டினம் இஸ்லாமியர்கள் உதயமார்த்தாண்ட வர்மனிடமிருந்து முத்துக்குளிக்கும் உரிமையைக் குத்தகையாகப் பெற்றனர். முத்து வணிகத்தில் பரதவர்கள் புறந்தள்ளப்பட்டு அராபிய மூர்களின் ஏகபோகம் உருவானது. கடல் பகுதியில் அராபியர்கள் ஆதிக்கம் நிலப்பகுதியில் குறுநில மன்னர்கள் ஆதிக்கம் என பரதவர்கள் இரண்டிற்குமிடையே சிக்கித் தவித்தனர்.

---

* வெங்கல ராசன் என்பவனை இவன் வென்றது தொடர்பான வீரக்கற்கள் இளவேலங்கால் என்ற கிராமத்தில் இருந்தன. தற்போது நெல்லை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

2. தமிழ்நாட்டில் இஸ்லாம்

கி.பி. 1311இல் நிகழ்ந்த மாலிக்காபூரின் படையெடுப்புத்தான் தமிழகத்தில் நடந்த முதல் இஸ்லாமியப் படையெடுப்பு என்றாலும் தமிழகத்தில் அதற்கு முன்பே இஸ்லாமியர்கள் செல்வாக்குடன் இருந்தனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டில் கேரளக் கடற்கரையில் குடியேறி, பின் அங்கிருந்து கிழக்கு நோக்கி வந்த இஸ்லாமியர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ள காயல்பட்டணத்தைத் தங்கள் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார்கள் என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

படையெடுப்புகளின் வாயிலாகத்தான் இஸ்லாம் தமிழ்நாட்டில் பரவியது என்ற கருத்து பரவலாக வழக்கிலுள்ளது. உண்மையில் வடஇந்தியாவிலிருந்து இஸ்லாமியப் படையெடுப்புகள் நிகழும் முன்பே, அராபிய வணிகர்கள், அவுலியாக்கள் எனப்படும் இஸ்லாமிய இறையடியார்கள் வாயிலாகத் தமிழ்நாட்டில் இஸ்லாம் பரவியிருந்தது. "இஸ்லாம் வட இந்தியாவிற் பரவிய முறைக்கும் தமிழ்நாட்டில் பரவிய முறைக்கும் வேறுபாடுண்டு" என்று சிவத்தம்பி (1994 : 38) கூறுவது முற்றிலும் சரியான கருத்து.

சோழர் காலத்தில் இஸ்லாம்

சோனகர் என்ற சொல் பிற்காலச் சோழர் காலத்தில் அராபிய முஸ்லீம்களைக் குறிக்கும் சொல்லாக வழக்கில் இருந்துள்ளது. முதலாம் இராஜ இராஜன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு வழங்கப்பட்ட அணிகலன் ஒன்று 'சோனகச் செடுக்கின் கூடு ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்பதும் மரகதம் ஒன்பதும் உட்பட' எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (S.I.I. Vol. II No. 93 :4). இதே கோயிலுக்குத் திருவிளக்குக்குக் காசு வழங்கிய ஒருவரது பெயர் 'ராஜ வித்தியாதரப் பெருந்தெரு சோனகன் சாவுர்

பரஞ்சோதி' எனக் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது (S.I.I Vol. II No. 95 : 86, 132). அராபிய வணிகரிடமிருந்து வாங்கிய வரியைச் 'சோனக வரி' என்று முதல் இராசராசனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது (S.I.I Vol. VIII No. 469 : 5).

பிற்காலச் சோழர் காலத்திய அரசப் பதவிகளில் 'மத்தியஸ்தன்' என்பதும் ஒன்று. இராசேந்திரச் சோழனது 11ஆம் நூற்றாண்டு 'ஆனைமங்கலச் செப்பேடு' நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்தப் பள்ளிக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறிப்பிடுகிறது. அச்செப்பேட்டில் மத்தியஸ்தன் (ஊர்ச்சபைக் கணக்கன்) ஆகிய அகமுதன் என்பவர் கையெழுத்திட்டுள்ளார். 'இவ்வூர் கரணத்தான், மத்தியஸ்தன் துருக்கன் அகமுதனேனிவை யென்னெழுத்து'. என்பது செப்பேட்டில் இடம்பெற்றுள்ள வாசகமாகும் (வேங்கடசாமி, 1964:229).

பாண்டியர் காலத்தில் இஸ்லாம்

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனது (1238-1251) கல்வெட்டு ஒன்று இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி என்ற ஊரில் உள்ள வைணவக் கோயிலில் இடம்பெற்றுள்ளது. அக்கல்வெட்டு 'பௌத்திர மாணிக்கப்பட்டின கீழ்ப்பால் சோனகச் சாமந்தப் பள்ளியான பிலால் பள்ளி'க்கு நிலம் வழங்கியதைக் குறிப்பிடுகிறது. 'இறையிலி'யாக (வரி நீக்கம் பெற்ற நிலம்) அந்நிலம் வழங்கப்பட்டதை ". . . . இவ்வாண்டு முதல் சோனகப் பள்ளிச் சந்தி இறையிலியாக இருப்பதாக" என்ற கல்வெட்டு வரி குறிப்பிடுகிறது (S.I.I. Vol. VIII No. 402). சைவ வைணவக் கோயில்களுக்கு மன்னர் களால் வழங்கப்பட்ட நிலம் 'தேவதானம்' என்றும், சமணப் பௌத்தப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிலம் 'பள்ளிச் சந்தம்' என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டு 'சோனகப் பள்ளிச்சந்தி' என்ற இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்திற்கு வழங்கிய நிலக் கொடையைக் குறிப்பிடுகிறது. இதனால் இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்தையும், பள்ளி என்றே அழைக்கும் பழக்கம் இருந்துள்ளமை தெரிய வருகிறது. இதன் தொடர்ச்சி யாகவே இன்றும் பள்ளிவாசல் என்ற சொல் வழக்கிலுள்ளது.

13ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த மார்க்கோபோலோ அராபியர்களோடு பாண்டிய மன்னன் நிகழ்த்திய குதிரை வாணிகத்தைக் குறிப்பிடுகின்றார். குலசேகரப் பாண்டிய மன்னனது அரசவையில் ஜமாலுதீன் என்ற இஸ்லாமியர் இடம் பெற்றிருந்ததாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பாண்டிய மன்னனின் அமைச்சரவையில் அரபு வணிகர்கள் இடம் பெற்றிருந்தனர். சுங்க அமைச்சராக அப்துர் ரஹிமான் என்ற இஸ்லாமியர் இருந்தார் (கே.கே. பிள்ளை, 1981:386). வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்த அராபிய மூர்கள் இங்கேயே மண உறவு கொண்டு நிரந்தரமாகத் தங்கினார்கள். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-38) காலத்திய கல்வெட்டு ஒன்றில் "துலுக்கராயன்குடி" என்று ஒரு விளைநிலம் குறிப்பிடப் பட்டுள்ளது. (கே.கே. பிள்ளை 1981:422).

சேரர் காலத்தில் இஸ்லாம்

உதய மார்த்தாண்டவர்மன் என்ற சேரமன்னன், இன்றைய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள காயல்பட்டினத்திற்கும் வீரபாண்டியன்பட்டினத்திற்கும் இடையே பள்ளிவாச லொன்றைக் கட்டியுள்ளான். காயல்பட்டினம் துறைமுகத் திலிருந்து ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்களுக்கு நாலு பணத்துக்குக் கால்பணம் என்ற வீதத்தில் மகமை வழங்கும்படி அக்கல்வெட்டில் கட்டளையிட்டுள்ளான். இச்செய்தியைக் கூறும் கல்வெட்டில், அப்பள்ளிவாசல் உதயமார்த்தாண்ட பெரும்பள்ளி என்றும், அதில் பணிபுரிந்த காஜியார் (மதக்குரு) உதய மார்த்தாண்ட காஜியார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்சந்தமாலை கூறும் செய்தி

கி.பி. பதினான்காம் நூற்றர்ண்டைச் சார்ந்த 'பல்சந்தமாலை' என்ற சிற்றிலக்கியத்தின் பாடல்கள் பல மறைந்துபோக, எட்டுப் பாடல்கள் மட்டும் 'களவியல் காரிகை' உரையில் மேற்கோளாக இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களில் 'வச்சிரநாடு', 'வகுதாபுரி', 'கலுலா', 'கலுபதி', 'வின்னன்', 'அஞ்சு வண்ணத்தவர்',

'அந்துபார்', யவனராசன்', 'யவனர் தொழும் அல்லா' என்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. இச்சொற்களின் அடிப்படையில் பின்வரும் விளக்கத்தை மு. அருணாசலம் (1969:332) தருகிறார்.

> "வச்சிர நாட்டில் வகுதாபுரியில் அந்நிய நாட்டிலிருந்து கலிபா மரபில் வந்த வின்னன் என்பவன் பெருந்தலைவனாக விளங்கினான்; இவன் அஞ்சு வண்ணத்தவன் குலத்தான்; இவன் யவன ராசன் எனவும் பெறுகிறான்; யவனர் அல்லாவைத் தொழுபவர்கள்; வகுதாபுரி, அந்துபார் என்றும் பெயர் பெறும். இங்கு சோனகர் வாழ்கிறார்கள் (சோனகராவார் அயல் நாட்டினர்; சிறப்பாக அராபியர்) ஏழ்பெறும் தேரங்கம் என்ற தொடர் வருகிறது. இதன் பொருள் விளக்கமாய் இல்லை. இது வின்னனுக்குரிய சிறப்புப் போலும். இவன் அயல்நாட்டிலிருந்து வந்தமையால் யவனன் எனப் பெறுகிறான். இவன் முகம்மதியன்."

பல்சந்தமாலை பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருவான நூல் என்று முகம்மது உவைஸ் (1986:88) கருதுகிறார்.

இந்நூல் குறிப்பிடும் வகுதாபுரி என்பது இன்றையக் காயல்பட்டினத்தைக் குறிக்கும் என்று மு. அருணாசலம் கருதுகிறார் (மேலது). ஆனால் முகம்மது உவைஸ் (மேலது) கீழக்கரையைக் குறிப்பதாகக் கூறுகிறார். எவ்வாறாயினும் முத்துக்குளித்துறைப் பகுதியிலுள்ள கடற்கரை ஊர்களுள் ஒன்றே வகுதாபுரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெளிவு. அராபியர்களைச் 'சோனகர்' என்று குறிப்பிட்ட தமிழர்கள் அவர்களின் குடியிருப்பு இருந்த பகுதியைச் 'சோனகன் விளை' (விளை - குடியிருப்பு) என்று அழைத்தனர். காயல்பட்டினத்திற்குத் தென்மேற்கே ஒரு சிற்றூராகச் சோனகன் விளை இன்றும் உள்ளது.

அஞ்சுவண்ணத்தார்:

சோழர் காலக் கல்வெட்டுக்களிலும் மேற்கூறிய பல்சந்தமாலை நூலிலும் அஞ்சுவண்ணத்தார் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. சோழர் காலத்தில் செயல்பட்ட வணிகக் குழுக்களில் (Guilds) ஒன்றாக அஞ்சுவண்ணம் குறிப்பிடப்படுகிறது. குழு என்ற பொருளைத் தரும் 'அஞ்சுமான்' (Anjunan) என்ற அரபிச்

சொல்லின் திரிபே அஞ்சுவண்ணம் என்று சில அறிஞர்களும், மேற்குக் கடற்கரையில் குடியேறிய யூத, கிறித்தவ வணிகர்களைக் குறிக்கும் சொல் என்று வேறு சிலரும் கருதுவதாகக் குறிப்பிடும் டி.வி. மகாலிங்கம் (1967:394-95) இச்சொல்லிற்கு வேறு ஒரு விளக்கத்தைத் தருகிறார். அவரது கருத்துப்படி கொல்லர், தட்டார், கன்னார், தச்சர், சிற்பிகள் என்ற ஐந்து கைவினைஞர்களையும் குறிக்கும் பஞ்சகர்மத்தார் என்ற சொல்லின் திரிபே அஞ்சு வண்ணம் ஆகும். தமது கருத்தை வலுப்படுத்தும் முகமாக நெல்லூர் மாவட்டத்திலுள்ள கல்வெட்டு ஒன்றில் 'அஞ்சுவண்ணத்தார் தெரு' என்ற சொல் இடம் பெற்றுள்ளதாகவும், ஆனால் அங்கு கிறித்தவர்கள் குடியிருப்பு எதுவுமில்லையென்றும் குறிப்பிடுகிறார். ஆயினும் இச்சொல் பஞ்சகர்மர்களைக் குறிப்பிடுவதை உறுதிப் படுத்தும் சான்றுகள் எதையும் அவர் குறிப்பிடவில்லை.

மேற்குக் கடற்கரையில் குறிப்பாகக் கேரளத்தில் 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அயல் நாட்டவர்களையே அஞ்சு வண்ணம் என்ற சொல் குறிப்பதாக சம்பக லட்சுமி (1999 : 313) கருதுகிறார். மேலும் அங்கிருந்து 16ஆவது நூற்றாண்டு வாக்கில் தென்னிந்தியாவின் இதர கடற்கரைப் பகுதிகளில் செயல்பட்டதாகவும் தொடக்கத்தில் யூத வணிகர்களைக் குறித்த இச்சொல் பின்னர் அராபிய முஸ்லீம் வணிகர்களைக் குறித்ததாகவும் குறிப்பிடுகிறார். பல்சந்தமாலைப் பாடலில் அஞ்சு வண்ணம் என்பது இஸ்லாமியர்களைக் குறிக்கும் சொல்லாகவே இடம்பெற்றுள்ளது. 'அஞ்சு வண்ணமும் தழைத்து அறத்தின் வண்ணமான ஊர்' என்று நாகப்பட்டினத்தின் சிறப்பைக் கூறும் பாடலொன்றை சதாசிவ பண்டாரத்தார் (1971 : 115) குறிப்பிடுகிறார். நாகப்பட்டிணம் ஒரு துறைமுக நகரம் என்பதையும் அதன் அருகிலுள்ள நாகூர், முத்துப்பேட்டை ஆகியன இஸ்லாமியர்கள் மிகுதியாக வாழும் பகுதி என்பதை நினைவில் கொண்டால் அஞ்சு வண்ணத்தார் என்பது இஸ்லாமிய வணிகர்களைக் குறிக்கும் சொல் என்று கருத இடமுள்ளது.

பாண்டியர் காலத் துறைமுகங்களுள் ஒன்றான குலசேகரன் பட்டினத்தில் இஸ்லாமியர் இன்றும் குறிப்பிடத்தக்க அளவில்

வாழுகின்றனர். அவர்கள் வாழும் தெரு ஒன்றின் பெயர் அஞ்சு வண்ணத்தார் தெரு என்று பெயர் பெற்றுள்ளது. குமரி மாவட்டத்திலுள்ள தக்கலையிலும் இஸ்லாமியர் மிகுதியாக வாழும் தெரு ஒன்றிற்கு அஞ்சு வண்ணத் தெரு என்ற பெயர் உள்ளது (தகவல் : ஹமீம் முஸ்தபா). எனவே தொடக்கத்தில் யூதர்களைக் குறித்த அஞ்சு வண்ணம் என்ற சொல் பின்னர் அராபிய வணிகர்களைக் குறித்துப் பின்னர் தமிழ்நாட்டு இஸ்லாமிய வணிகர்களையும் குறிக்கும் சொல்லாகவும் மாறியுள்ளது.

இச்செய்திக்ள் யாவும் தமிழ்நாட்டில் இஸ்லாத்தின் தொன்மையை உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு தமிழகத்தில் இஸ்லாமியத்தைத் தழுவியிருந்த தமிழர்கள் தவிர அரேபியா விலிருந்து வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்து தங்கியிருந்த அராபிய இஸ்லாமியர்களும் இருந்தனர். இவர்கள் ‘மூர்கள்’ என்று அழைக்கப்பட்டனர்.

பரதவர் – அராபியர் மனவேறுபாடு

இவ்வாறு தமிழ்நாட்டின் வாணிபத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்றிருந்த அராபிய மூர்களுக்கும் பரதவர்களுக்கும் கடல் ஆதிக்கம் குறித்து மனவேறுபாடு தோன்றியது. பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததும், பாண்டிய நாட்டின் வடபகுதியில் நிகழ்ந்த இஸ்லாமியர்களின் படையெடுப்பும், இப்பகுதியில் வாழ்ந்த அராபிய மூர்களுக்கு ஊக்கம் அளித்தன.

ஒரு நாள் பரதவகுலப் பெண் ஒருத்தி பணியாரம் விற்றுக் கொண்டிருந்தாள். அராபிய மூர் ஒருவன் அவளிடம் பாலியல் உறுப்பைக் குறிக்கும் வகையில் பேச, அப்பெண் தன் கணவனிடம் புகார் கூறினாள். கோபத்துடன் வந்த அப்பெண்ணின் கணவன் அவ்வராபியனிடம் இது குறித்துச் சண்டையிட்டான். சண்டையின் உச்சகட்டமாக அப்பெண்ணின் கணவனது காது அறுபட்டுக் காதில் அணிந்திருந்த கடுக்கன் விழுந்துவிட்டது. காதுக் கடுக்கனை அறுப்பதென்பது அவமானகரமான செயலாகக் கருதப்பட்ட மையால், இதற்குப் பழிவாங்கப் பரதவர்கள் முனைந்தனர்.

அராபிய மூர்களின் பண்டக சாலைகளுக்கும் மரக் கலங்களுக்கும் நெருப்பிட்டழித்தனர். சில அராபிய மூர்களைக் கொலை செய்தனர்.

இவ்வாறு தொடக்க நிலையில் தீவிரமான தாக்குதலை அராபிய மூர்களின்மீது தொடுத்த பரதவர்களால், அவர்களின் எதிர்த் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தூத்துக்குடியின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள பாளையக் காரர்களின் ஆதரவோடு பரதவர்களைக் கடுமையாகப் பழிவாங்க அராபிய மூர்கள் முனைந்தனர். பரதவரின் தலை ஒன்றுக்கு ஐந்து பணம்* கொடுப்பதாக அறிவித்தார்கள். பரதவர்களின் தலை ஏராளமாக வரத் தொடங்கியதால் ஐந்து பணம் என்பது இரண்டு பணமாகப் பின்னர் குறைக்கப்பட்டது.

---

* தென்னிந்தியாவில் புழக்கத்திலிருந்த குறைந்த மதிப்புள்ள தங்க நாணயம்

3. பரதவர்களின் சமய மாற்றம்

கள்ளிக்கோட்டையிலிருந்து வந்த ஜான் டெக்ருஸ் என்ற குதிரை வணிகன் இக்கொடுமையை நேரில் கண்டான். கள்ளிக் கோட்டையை ஆண்ட சாமரின் மன்னனின் அரசவையில் இருந்த அவன், வாணிபத்தின் பொருட்டு போர்ச்சுக்கல் நாட்டிற்கு அடிக்கடிச் சென்று வந்தான். அதன் விளைவாக அவன் கத்தோலிக்கனாக மதம் மாறினான். இம்மதமாற்றத்தை வெறுத்த சாமரின் தன் அரசவையில் இருந்து அவனை நீக்கினான். இவ்வாறு தன் சமய மாற்றத்திற்காக அரசவைப் பதவியை இழந்த ஜான் டெக்ருஸ், அராபிய மூர்களின் கொடூரமான தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள, கொச்சியிலிருந்த போர்ச்சுக் கீசியர்களின் உதவியை நாடும்படி பரதவர்களுக்கு அறிவுரை கூறினான்.

அதன்படி பரதவர்களின் ஊர்த்தலைவர்களைக் கொண்ட குழு ஒன்று கொச்சி சென்று போர்ச்சுக்கீசிய அதிகாரிகளைச் சந்தித்தது. பரதவர்கள் கத்தோலிக்க மறையைத் தழுவினால் அவர்களுக்கு உதவுவதாகப் போர்ச்சுக்கீசியர்கள் கூறவே, உதவி கேட்டுச் சென்ற பரதகுலத் தலைவர்கள் அங்கேயே கத்தோலிக்கர் களாக மாறினர். கடற்கரைக் கிராமங்களில் வாழும் பரதவர்களை மதம் மாற்றுவதற்காக மிக்கேல் வாஸ் என்ற விகார் ஜெனரலையும், மூர்களிடமிருந்து பரதவர்களைப் பாதுகாக்க, ஒரு படையையும் கப்பல் வாயிலாக அனுப்பி வைத்தனர்.

வலிமை வாய்ந்த போர்ச்சுக்கல் படையின் பாதுகாப்பைப் பரதவர்கள் பெற்றதால் அராபிய மூர்களின் தாக்குதல் மட்டுப்பட்டது. மிக்கேல்வாஸ் பரதகுல மக்களை முழுமையாகக் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றினார். தமிழ்நாட்டின் வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரிய குழும மதமாற்றம் இதுவேயாகும். இதன்

விளைவாக, இராஜாக்க மங்கலம், கோவளம், குமரிமுட்டம், பெருமணல், இடிந்தகரை, கூத்தங்குளி, உவரி, பெரியதாழை, புதுக்கரை, மணப்பாடு, ஆலந்தலை, திருச்செந்தூர், வீரபாண்டியன்பட்டணம், தாலம்புலி, புன்னைக்காயல், பழைய காயல், தூத்துக்குடி, வைப்பாறு, வேம்பாறு, முக்கூர் ஆகிய கடற்கரை ஊர்களில் வாழ்ந்த பரதவர்கள் அனைவரும் கத்தோலிக்கர்களாக மாறினர். மானுவல் டெக்ஷிலா அடிகள் (1536-1590), "நம் ஆண்டவர் ஒரு காதைக் கிழித்து ஆயிரம் ஆத்மாக்களை இரட்சித்தார்" என்று இந்நிகழ்ச்சியை மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார் (Ferroli, 1939 :118).

சமய மாற்றம் நிகழ்ந்த காலம்

கி.பி. 1532இல் இச்சமய மாற்றம் நிகழ்ந்ததாக ஹிராஸ் அடிகளும் கால்டுவெல்லும் கூறுகின்றார்கள். கி.பி. 1546இல் இங்கு வந்த அண்ட்ரிக் அடிகளார், 1586இல் அச்சிட்ட 'அடியார் வரலாறு' என்ற நூலில், "நம்முடைய நாயன் யேசு கிருஸ்த்து பிறந்த 1533ளு பரமென்ற சாதியில் உள்ளவர்கள் கிறிசித்தியானி மாற்கம் புகுந்தார்கள்" என்று குறிப்பிடுகிறார். பரதவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கிய போர்ச்சுக்கீசிய சேசு சபைக் குரு மிக்கேல்வாஸ் 1534ஆம் ஆண்டில்தான் விகார் ஜெனரலாகப் பொறுப்பேற்றார்(Antony D'Coasta, SJ. 1999). இதனால் 1534இல் தான் மதம் மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது. பரதவர்கள் வாழும் கடற்கரைக் கிராமங்களின் தலைவர்களாக விளங்கிய பட்டங்கட்டிகள் என்பவர்களும் பரதகுலப் பிரமுகர்களும் கொச்சியில் முதலில் திருமுழுக்குப் பெற்றனர். அதன் பின்னர் படிப்படியாகப் பரதவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். 1542இல் சேவியர் வந்தபின்னரும் கூடப் புதிதாக ஆயிரக்கணக்கான பரதவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டதை அவர் எழுதிய கடிதங்கள் உணர்த்துகின்றன. எனவே 1534 தொடங்கி, 1542 முடிய படிப்படியாக முத்துக்குளித் துறைப் பகுதியில் மதம் மாற்றம் நிகழ்ந்தது என்று கருதுவது பொருத்தமாக இருக்கும்.

சமயம் மாறிய பரதவர் நிலை

மதம் மாறிய பரதவர்கள் அனைவரும் போர்ச்சுக்கல் மன்னரின் குடிமக்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் பர்னாண்டஸ், வாஸ், கொரைரா, மஸ்கரனாஸ், கோமாஸ் என அறுபதுக்கு மேற்பட்ட போர்ச்சுக்கீசிய குடிப்பெயர்களைப் (Surnames) பெற்றனர். இவை அவர்களின் பெயர்களுக்குப் பின்னர் இடம் பெற்றன. கடற்கரைப் பகுதியில் அராபிய மூர்களின் செல்வாக்குக் குறைந்து, போர்ச்சுக்கீசியர்களின் ஆட்சி ஏற்பட்டது.

மதம் மாறிய பரதவர்கள் பெயரளவில் கத்தோலிக்கர்களாகவும், நடைமுறையில் இந்துக்களாகவும் இருந்தனர். கத்தோலிக்க மறையின் கோட்பாடுகள் எவையும் அவர்களுக்குத் தெரியாது. சிலர் மீண்டும் இந்துக்களாக மாறினர்.

புனித சவேரியார் வருகை

சேசு சபைக் குருவான புனித சவேரியார் கி.பி.1542இல் பரதகுல மக்களிடையே பணியாற்ற வந்தார். கத்தோலிக்கர்களாக மதம் மாறிய பரதவர்கள் அச்சமயத்தின் இறையியல் கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள் ஆகியன குறித்து எதுவும் தெரியாதவர்களாக இருந்தனர். 28, அக்டோபர் 1542ஆம் ஆண்டு தூத்துக்குடியிலிருந்து சவேரியார் எழுதிய கடிதம் ஒன்றில் இது குறித்து எழுதியுள்ளது வருமாறு:

> எட்டு ஆண்டுகளுக்கு முன் மனம் திருப்பப்பட்ட மக்களைக் கொண்ட கிறித்துவக் கிராமங்கள் வழிச் சென்றோம். நிலம் மிகக் குறைந்த பயன் தருவதாலும், வெகு மோசமாக இருப்பதாலும் இந்தக் கிராமங்களில் போர்ச்சுக்கீசியர் யாரும் வசிக்கவில்லை. இந்தக் கிராமங்களில் கிறித்துவர்களுக்கு மறைக்கல்வி அளிக்க யாரும் இல்லாததால் அவர்களுக்கும் கிறித்துவர்கள் என்று சொல்வது தவிர வேறு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. அவர்களுக்குத் திருப்பலி நிறைவேற்ற யாரும் இல்லை; விசுவாச அறிக்கை, யேசு கற்பித்த செபம், 'அருள்நிறைந்த மரியே' செபம், பத்துக் கட்டளைகள் ஆகியவற்றைக் கற்பிக்க யாரும் இல்லை.

இத்தகைய சூழ்நிலையில்தான் பரதவர்களுக்குச் சமய உண்மைகள் போதிக்கப்பட்டன. 'விசுவாச மந்திரம்' தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. கடற்கரைக் கிராமங்கள் தோறும் கால்நடையாகச் சென்று பரதவர்களைக் கத்தோலிக்கச் சமய வாழ்வில் நிலைப்படுத்தினார். தமது மொழிபெயர்ப்பு மற்றும் மந்திரங்களைக் கற்றுக் கொடுத்த முறை குறித்துச் சவேரியார் ரோமில் வாழும் தமது சக தோழர்களுக்கு 1544, சனவரி 15ஆம் நாள் எழுதிய கடிதத்தில்,

> நான் இங்கு வந்து சேர்ந்தவுடன் நம் கடவுளாம் கிறிஸ்துவைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என்று அறிய முற்பட்டேன். அவர்களுக்குக் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி என்ன தெரியும் என்றும் முன்பு புறச் சமயத்தினராக இருந்ததற்கும் இப்பொழுது கிறித்தவர்களாக இருப்பதற்கும் என்ன வேறுபாடு என்றும் கேட்டேன். அதற்கு அவர்கள் கிறித்தவர்களாக இருந்தாலும் நம்முடைய மொழி புரியாததால் நம்முடைய கோட்பாடுகளை அறியவில்லை என்றும் எதை விசுவசிக்க வேண்டும் என்று தெரியாது என்றும் கூறினார்கள். அவர்களுடைய மொழி தமிழ், என்னுடைய மொழி பாஸ்க். இதனால் ஒருவருக்கொருவர் பேசுவதைப் புரிந்து கொள்வது சிரமமாக இருந்தது. எனவே அவர்களுள் படித்தவர்களையும் அவர்களுடைய மொழிகளை அறிந்தவர்களையும் அழைத்தேன். அவர்களின் உதவியைக் கொண்டு தந்தை, மகன், தூய ஆவியை மூவொரு கடவுளாக அய்க்கிய நிலையில் வெளிப்படுத்தும் சிலுவை அடையாள செபத்தில் ஆரம்பித்து விசுவாச அறிக்கை, பத்துக் கட்டளைகள், யேசு கற்பித்த செபம், "அருள்நிறைந்த மரியே" செபம், ("மிகவும் இரக்கமுள்ள தாயே" எனத் தொடங்கும்), இராஜகன்னி செபம், ஒப்புரவு செபம் (உத்தம மனஸ்தாப மந்திரம்) ஆகியவற்றை லத்தீனில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து மனப்பாடம் செய்தேன். பின்னர் முடிந்தவரை சிறுவர்களையும், ஆண்களையும் திரட்ட கையில் ஒரு மணியுடன் கிராமம் முழுக்கச் சென்றேன். அவர்களைத் திரட்டிய பின்னர் தினமும் இரண்டு முறை இந்த செபங்களைக் கற்றுக் கொடுத்தேன். ஒரு மாதத்தில் இவற்றைக் கற்றுக் கொடுத்து அவர்களது பெற்றோருக்கும், வீட்டில்

உள்ளவர்க்கும், சுற்றி இருப்பவர்களுக்கும் இவர்கள் கற்றதைக் கற்றுக் கொடுக்கும்படிக் கட்டளை இட்டேன்.

என்று எழுதியுள்ளார் (பிரிட்டோ வின்செண்ட், 2002 : 7-8). சவேரியாருக்கு உதவியாக ஒன்றிரண்டு குருக்களே இருந்தனர். "அறுவடையோ மிகுதி, ஆட்களோ குறைவு" என்ற விவிலிய வாசகத்தை நினைவூட்டும் வகையில் மறைப்பணிச் சூழல் இருந்தது. எனவே முத்துக்குளித்துறையில் பணியாற்ற குருக்களை அனுப்பி உதவும்படி இக்னிஷியஸ் லயோலாவுக்கும், லிஸ்பனில் உள்ள சைமன் ரோட்ரிகோஸ் என்பவருக்கும் சேவியர் கடிதம் எழுதினார்.

இவ்வேண்டுகோளின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்ட குருக்களில் ஒருவர்தான் அண்ட்ரிக் அடிகளார்.

4. அண்ட்ரிக் அடிகளார்

போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள வில்லோவிகாசோ என்ற ஊரில் கி.பி. 1520இல் அண்ட்ரிக் அடிகளார் பிறந்தார். ஹென்றிக்கு ஹென்றிக்கஸ் (Henrique Henriquez) என்பது இவரது முழுப் பெயராகும். அவருடைய பெற்றோர்கள் செல்வந்தர்கள். புதிதாகக் கிறித்துவ மதத்தைத் தழுவிய யூதர்கள். வளம் மிக்க குடும்பத்தில் பிறந்தாலும் அவரது மனம் சமய வாழ்வில் ஈடுபட்டமையால் பிரான்சிஸ்கன் துறவறச் சபையில் சேர்ந்தார். அவருடைய பெற்றோர்கள் யூத மரபைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தவுடன் அவரைத் துறவறச் சபையிலிருந்து நீக்கினார்கள். ஏனெனில் யூதமரபைச் சார்ந்தவர்கள் பிரான்சிஸ்கன் சபையில் சேருவதை அச்சபையின் விதிகள் அனுமதிக்கவில்லை. கி.பி. 1545இல் போர்ச்சுக்கல் நாட்டின் கொம்பேரா நகரில் திருச்சபைச் சட்டத்தைப் பயின்றார். அங்கு சைமன் ரோட்ரிகோஸ் என்ற சேசு சபைத் துறவியைச் சந்தித்தார். பிரான்சிஸ்கன் துறவறச் சபையுடன் தாம் கொண்டிருந்த தொடர்பை மறைத்துவிட்டுத் தம்மை அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினார். கி.பி. 1548இல் அவரை இந்தியாவிலுள்ள சவேரியாரிடம் அனுப்பலாம் என்று ரோமாபுரிக்குக் கடிதம் எழுதினார். கி.பி. 1546இல் குருப் பட்டம் பெற்ற அண்ட்ரிக் அடிகளார் அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் இந்தியாவுக்கு ஏனைய குருக்களுடன் பயணமானார்.* அடிகளாரும்** அவருடன் புறப்பட்ட பன்னிரெண்டு சேசுசபைக் குருக்களும் 1546 செப்டம்பர் 17இல் கோவா வந்தடைந்தனர். அப்போது கோவாவில் இருந்து

---

* அண்ட்ரிக் அடிகளார் எங்குக் குருப்பட்டம் பெற்றார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்தியாவுக்குப் புறப்படும் முன்னர் கொம்பீரியா அல்லது லிஸ்பனில் அவர் குருப்பட்டம் பெற்றிருக்கலாம்.

** அடிகளார் என்பது இனி அண்ட்ரிக் அடிகளாரைக் குறிக்கும்.

பன்னிரண்டாயிரம் மைல் தொலைவில் உள்ள மலாக்காவில் சேவியர் இருந்தார்.

அடிகளாரையும் அவருடன் வந்த குருக்களையும் முத்துக்குளித்துறைக்குச் செல்லும்படி சேவியர் கட்டளையிட்டார். அதன்படி அவர்கள் முத்துக்குளித்துறைப் பகுதிக்கு வந்தனர். இத்தாலி நாட்டவரான அந்தோணி கிரிமினாலி என்பவர் முத்துக்குளித்துறையின் தலைமைக் குருவாக இருந்தார். மலாக்காவில் மறைப்பணியாற்ற சவேரியார் சென்றபோது இவரை இப்பதவியில் நியமித்திருந்தார். அடிகளாரிடம் புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பாறு, வேம்பாறு என்ற கடற்கரை ஊர்களின் மறைப்பணியை அந்தோணி கிரிமினாலி ஒப்படைத்தார். தாம் பணியாற்றிய பகுதியில் இளைஞர்களுக்கு மறைக்கல்வி போதிப்பதில் அடிகளார் ஆர்வம் காட்டினார்.

அந்தோணி கிரிமினாலியின் மறைவு

இராமேசுவரம் அருகிலுள்ள ஒரு சிற்றூர் வேதாளை. போர்ச்சுக்கீசியர்கள் மண்கோட்டை ஒன்றை இங்கு கட்டியிருந்தனர். 1549ஆம் ஆண்டில் நாற்பது பேர் கொண்ட போர்ச்சுக்கீசியப் படையொன்று இக்கோட்டையினுள் இருந்தது. ஜோவோ பெர்ணாண்டஸ் கொரைரா என்ற போர்ச்சுக்கீசியப் படைத்தளபதி இக்கோட்டையைச் சுற்றி அகழி வெட்டினார். இராமேஸ்வரம் செல்லும் பக்தர்கள் இவ்வகழியைக் கடந்துதான் செல்லவேண்டும். அகழியைக் கடப்பதற்கு அவர்களிடம் போர்ச்சுக்கீசியர்கள் கட்டணம் வாங்கினர். இராமேசுவரம் வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை இதனால் குறைய இராமேசுவரம் கோயில் குருக்களின் வருவாயும் குறைந்தது. எனவே இராமநாதபுரம் சேதுபதிமன்னர் வாயிலாக வித்தால ராயனிடம்* அவர்கள் முறையிட்டனர்.

---

* வித்தாலராயன் என்பவர் யார் என்பது குறித்து வரலாற்றாய்வாளர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது. தென் தமிழகத்தின் "மண்டலேசுவரன்" ஆகவும் விஜயநகரப் படையின் தளபதியாகவும் இவன் விளங்கினான் என்ற முடிவுக்குக் கிருஷ்ணசாமி (1964 - 221 - 222) வருகிறார். இது பொருத்தமானதாக உள்ளது.

போர்ச்சுக்கீசியர்களால் முத்துக்குளித்துறைப் பகுதியிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியர்களின் துணையுடன் ஆறாயிரம் வீரர் களைக் கொண்ட படை வேதாளை வந்தது. நாற்பதே வீரர்களைக் கொண்ட போர்ச்சுக்கீசியப் படையால் இப்பெரும் படையை எதிர்க்க முடியவில்லை. எனவே போர்ச்சுக்கீசியப் படைத்தளபதி சில பரதவர்களுடன் அருகிலுள்ள தீவுகளில் அடைக்கலம் புகுந்தார். அவ்வமயம் இராமேசுவரத்தில் வாழும் பரதவர்களுக்கு அந்தோணி கிரிமினாலி கிறித்தவ மறையைப் போதித்துக் கொண்டிருந்தார். வேதாளை மீது நிகழ்ந்த படையெடுப்பைக் கேள்விப்பட்டதும் அங்கு வாழும் பரதவர்களைக் காப்பாற்றும் பொருட்டு வேதாளைக்கு விரைந்தார். அங்கு பரதவர்களுக்கு உதவி புரியும்போது வித்தால ராயனின் படையால் கொல்லப்பட்டார் (கிருஷ்ணசாமி 1964 : 239-40).

தலைமைக் குரு

அந்தோணி கிரிமினாலியின் மறைவை அடுத்து, அடிகளாரைத் தலைமைக் குருவாக ஏனைய குருக்கள் 1549இல் தேர்ந்தெடுத்தனர். அவரைத் தேர்ந்தெடுப்பதற்கு,

i) இப்பதவிக்குத் தகுதியானவர்

ii) தாம் பணியாற்றும் பகுதியில் வாழும் கிறித்தவர் களின் மொழியை அறிந்துள்ளார்.

iii) அவர்களுடன் நல்லுறவு கொண்டுள்ளார்.

என்ற மூன்று காரணங்களைக் குறிப்பிட்டனர். ஆயினும் அந்தோணியா கோமஸ் என்ற குரு இத்தேர்வை எதிர்த்தார். பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து அவர் விலக்கப் பட்டதற்கான அதே காரணத்தையே (புதிய கிறித்தவர்) இவரும் கூறினார். சேசு சபையின் உறுப்பினராகச் சேருவதற்கே அவருக்குத் தகுதி இல்லை என்று வாதிட்டார். அவரது எதிர்ப்பு புறக்கணிக்கப் பட்டு அடிகளார் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார்.

தமிழில் தேர்ச்சி

முத்துக்குளித்துறைக்கு வந்தவுடன் மக்களிடம் கலந்து பழக அவர்களின் மொழியை அறிந்து கொள்வது அவசியம் என்பதை உணர்ந்து தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கினார். பேச்சு மொழியை மட்டுமன்றி எழுத்து மொழியையும் அவர் கற்றுக் கொண்டார்.

தாம் பணிபுரியும் மக்களின் தாய்மொழியைக் கற்றுக் கொள்வதில் அடிகளார் மிகுந்த ஆர்வம் காட்டினார். அடிகளாரும் ஏனைய குருக்களும் தங்களுக்குள் தமிழிலேயே பேசிக் கொள்வது என முடிவெடுத்தனர். அதை மீறுபவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. ஒருவருக்கொருவர் தமிழிலேயே கடிதம் எழுதுவதென்று ஒப்பந்தமும் செய்து கொண்டனர்.

தமிழ்மொழியில் நூல்களை எழுதும் திட்டம் அவருக்குத் தொடக்கத்திலேயே இருந்துள்ளது. சேசுசபையின் நிறுவனரான புனிதர் இக்னேசியஸ் லயோலாவிற்கு 31.10.1548இல் எழுதிய கடிதத்தில் அவர் தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ந்தது குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

> “வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டிருக்கிறேன். பிரான்சிஸ் அவர்கள் உங்களுக்கு ஒரு ஓலை எழுதக் கட்டளை இட்டிருக்கிறார். மூன்று நான்கு மாதங்களாக நான் மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துவது இல்லை. நான் அவர்களிடம் பேசுவதும் அவர்களுக்குப் போதிப்பதும் ஒரே மொழியில்தான். உச்சரிப்பு மிகவும் சிரமமாகவும் நம்முடையதைவிட மிகவும் மாறுபட்டும் இருப்பதால் எல்லாவற்றையும் எப்பொழுதும் அவர்கள் புரிந்து கொள்வது இல்லை. எனவே நான் கோயிலில் அறிவுரைகள் (instructions) அளிக்கும் போது நான் சொன்னதை எல்லோரும் நன்றாகப் புரிந்து கொள்வதற்காக நான் கூறியவற்றை யாரையாவது திரும்பச் சொல்லச் சொல்கிறேன். ஆனால் ஆண்டவரின் கிருபையால் இன்னும் சில மாதங்களில் இந்த உதவி தேவை இருக்காது; எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் பேசுவேன். நம்முடைய கோட்பாடுகளைத் தெளிவாகக் கூறக்கூடிய

மொழிபெயர்ப்பாளர் இங்கு இல்லை; குருவானவர் ஒன்றைக் கூறினால் மொழிபெயர்ப்பாளர் மற்றொன்றைக் கூறுகிறார்."

சவேரியாரின் பாராட்டு

அண்ட்ரிக் அடிகளாரின் பணிகளைப் பாராட்டி அவருக்குக் கடிதம் எழுதும்படி, சேசு சபைத் தலைவர் இஞ்ஞாசியாருக்கு 12, ஜனவரி 1549இல் சவேரியார் ஒரு கடிதம் எழுதியுள்ளார் (Joseph Costelloe/ S.J. 1992 : 221).

"போர்ச்சுக்கல் நாட்டு யேசு சபையைச் சார்ந்த குருவானவர் கன்னியாகுமரியில் இருக்கிறார். அவர் பெயர் ஹென்றி ஹென்றிகஸ். தமிழ் பேசவும், எழுதவும் தெரிந்த இவர் மிகவும் நல்லவர். முன் மாதிரியானவர். இந்த மொழியை அவர் நன்கு அறிந்திருப்பதால் இருவர் செய்யக்கூடிய நல்லதைவிட அதிகமாக இவர் ஒருவரே செய்கிறார். இந்தப் பகுதியில் உள்ள கிறித்தவர்கள் இவர்மேல் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய மொழியில் அவர் செய்யக்கூடிய பிரசங்கங்களையும் சொற்பொழிவுகளையும் போற்றுகின்றனர். அவர் மிகவும் நல்லவர் என்பதாலும் அதிக பலனை உருவாக்குவதாலும் நம் கடவுளாம் ஆண்டவரின் அன்பிற்காக அவருக்குக் கடிதம் எழுதி ஆறுதலையும் ஊக்கமும் வழங்குங்கள்!"

மருத்துவமனை

நலிந்தோருக்கு உதவுதல் என்பது கிறித்தவத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் சமயப் பணி புரிய வந்த அண்ட்ரிக் அடிகளார் அதனோடு சமூகப் பணியையும் இணைத்து நடத்தியுள்ளார். இதன் ஓரங்கமாக புன்னைக்காயலிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் வாழும் ஏழைகளுக்கு உதவும் வகையில் 1550ஆம் ஆண்டில் மருத்துவமனை ஒன்றைப் புன்னைக்காயலில் நிறுவினார். முத்துக்குளித்துறையிலிருந்த ரொட்ரிகோஸ் என்ற போர்ச்சுக்கீசிய கேப்டன் இதை நிறுவுவதற்கு உதவியாக இருந்தார். இம்மருத்துவமனை நிறுவ முத்துக்குளித்துறைவாழ் பரதவர்கள் நிதி வழங்கினர். புன்னைக்காயலில் வாழ்ந்த கத்தோலிக்கப் பரதவர்

ஒருவர் மருத்துவராகவும் அவர் மனைவி செவிலியாகவும் பணியாற்றினர். தொண்டுள்ளம் கொண்ட பரதவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஆண் செவிலியர்களாகப் பணியாற்றும் படி செய்தார். மருத்துவமனையில் தங்கும் நோயாளிகளுக்கு உணவும் உடையும் வழங்கப்பட்டது (Francis, 1989 : 137-138).

முத்துக்குளிக்கும்போது அதில் பங்கேற்கும் படகுகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒரு பகுதி வருவாய் மருத்துவனைக்குக் கொடுக்கப்பட்டது. குற்றம் செய்த பரதவரிடமிருந்து தண்டமாகப் பெறப்பட்ட பணத்தையும் சேசு சபையினர் இம்மருத்துவ மனைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இவையனைத்தும் போதாத நிலையில் ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவமனைக் கென்று சிறப்பு நிதி மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டது (மேலது).

1572ஆம் ஆண்டிற்கான மறைத்தளப் புள்ளி விவரங்களின்படி மணப்பாடு, வீரபாண்டியன்பட்டினம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பாறு ஆகிய கடற்கரை ஊர்களிலும், வேறு இரு கடற்கரை ஊர்களிலும் (பெயர் தெரியவில்லை) மொத்தம் ஏழு மருத்துவமனைகள் முத்துக்குளித்துறையில் செயல்பட்டு வந்துள்ளன. இவற்றுள் புன்னைக்காயல் தூத்துக்குடி மருத்துவ மனைகள் ஏனைய மருத்துவமனைகளை விடப் பெரிதாக இருந்தன (மேலது).

இங்கு மதவேறுபாடின்றி நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. 1575ஆம் ஆண்டில் அண்ட்ரிக் அடிகளார் எழுதிய கடிதமொன்றில் "கிறித்தவராக விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கிறித்தவரல்லாத நோயாளிக்கும் அங்கு இடமுண்டு" என்று குறிப்பிட்டுள்ளார் (அந்தோணி டி கோஸ்டா, 1999:25).

அராபியர் படையெடுப்பு

போர்ச்சுக்கீசியர்கள் ஆதிக்கத்தால் செல்வாக்கிழந்த அராபியர்கள் முத்துக்குளித்துறை, கள்ளிக்கோட்டை இஸ்லாமியர்களின் துணையுடன் 1553 ஏப்ரலில் முத்துக்குளித்துறைப் பகுதியில் படையெடுத்தனர். போர்ச்சுக்கீசியர்களின் பதினேழு கப்பல்களைக் கைப்பற்றியதுடன் போர்ச்சுக்கீசியப் படைத் தளபதியையும் அவன்

குடும்பத்தையும் மற்றும் ஐம்பது போர்ச்சுக்கீசியர்களையும் சிறைப் படுத்தினர். அவர்களுள் அடிகளாரும் ஒருவர். தேவாலயங்கள், அடிகளார் நிறுவிய மருத்துவமனை ஆகியவற்றிற்கு நெருப்பிட்டழித்தனர். கொச்சியிலிருந்த போர்ச்சுக்கீசிய படைத் தளபதி முத்துக்குளித்துறைக்குத் தன் படையுடன் வந்து அரேபியர் களை விரட்டினான். அரேபியர்களுக்குத் துணையாக வந்த வடுகர்களின் பிடியில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் இருந்தனர். ஒரு லட்சம் பணம் கொடுத்தால்தான் அவர்களை விடுவிக்க முடியும் என்று வடுகர்கள் கூறிவிட்டனர். அடிகளாரின் கழுத்தையும், பாதத்தையும் 36 செ.மீ நீளமுள்ள இரும்புச் சங்கிலியால் பிணைத்து வைத்தனர். இறுதியில் முத்துக் குளித்துறைப் பரதவர்கள் ஆயிரம் பர்தாக்கள்* கொடுத்துச் சிறைப் பட்டவர்களை மீட்டனர்.

தமிழ்க் கல்லூரி

1567இல் தமிழ்க் கல்லூரி ஒன்றை அடிகளார் புன்னைக்காயலில் நிறுவினார். அதன் இயக்குநராகவும் பேராசிரியராகவும் அவர் பணியாற்றினார். இக்கல்லூரி நிறுவ முத்துக்குளித்துறைப் பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் நிதி வழங்கினர். கத்தோலிக்கராக மதம் மாறிய பேதுரு லூயிஸ் என்று பெயர் சூட்டிக் கொண்ட கேரளப் பிராமணர் ஒருவர் அடிகளாருக்குத் துணை புரிந்தார். முத்துக்குளித்துறைப் பகுதியில் பணிபுரிந்த சேசுசபைக் குருக்கள் இக்கல்லூரியில் தமிழ் பயின்றனர். தங்கள் தமிழறிவை விருத்தி செய்து கொள்வதற்காகக் கோவாவிலிருந்தும் சில மாணவர்கள் இங்கு வந்து பயின்றனர் (பிரான்சிஸ், 1989 : 135-136).

இக்கல்லூரி ஒரு சங்கம் போன்றும் செயல்பட்டுள்ளது. ‘புனித அந்தோணியார் அம்மானை’ என்ற நூலைப் பதிப்பித்த அந்தோனிராசு, இந்நூலின் அவையடக்கத்தில் இடம் பெற்றுள்ள,

---

* பர்தா (Pardau) 16ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் புழக்கத்திலிருந்த நாணயம். தங்கத்திலும், வெள்ளியிலும் அச்சிடப்பட்டது. தங்க பர்தா 350 போர்ச்சுக்கீசிய ‘ரீஸ்’ நாணயத்திற்கு சமமானது. வெள்ளி பர்தா 300 போர்ச்சுக்கீசிய ‘ரீஸ்’ நாணயத்திற்கு சமமானது.

"சேசுவின் கூட்டத் திருச்சபையில் உள்ளவரும்
நேசமொடு கல்வி நிறைந்த கிறீஸ்தவரும்
பொங்கு திரைவாழும் புதுக்காயல் மாநகரில்
சங்கந் திரண்டு தமிழ்ப்படுத்தி வைத்தகதை
எம்மைப் புரந்து இயல்பாகக் காத்துவந்த
செம்மல் போட்டுக்கால் தேசத்தோர் தன்மரபில்
வந்துதித்த வள்ளல் வரிசைக் கொடிமுகிலான்
செந்தமிழ் வாணருக்கும் தேசத்தி லுள்ளவர்க்கும்
அந்நகரி தன்னிலுள்ள அரிய கிறீஸ்த்தவர்க்கும்
மன்னவர்க் கும்நீதி மறையோதும் மாதவத்தோன்
அந்தோனி யென்னும் அருங்குருவின் காதைதன்னைச்
சந்தோஷ மாகத் தலத்தோர்கள் கொண்டாட
அம்மானையாக அவனிதன்னிற் பாடுமென
எம்மா லியன்றபடி யான்கூறக் கேட்டருள்வீர்
இச்சபை யிலுள்ள யாவருஞ் சந்தோஷமுற
அச்சமற இக்கதையை அம்புவியில் பாடுகிறேன்"

என்ற வரிகளின் அடிப்படையில் "அண்டிறீக்கு அடிகளார், அந்தோனி என்னும் புலவரைத் தேர்ந்தெடுத்து அடியார் வரலாற்றில் அமைந்த புனித அந்தோணியார் வரலாற்றை அம்மானையாக ஆக்குமாறு கோரினார். அந்தோனி என்னும் அப்புலவரும் அடிகளாரின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்த அந்தோனியார் அம்மானையை ஆக்கினார்." (பக் vi) என்ற முடிவுக்கு வருகிறார். ஆயினும் இதை உறுதிப்படுத்த மேலும் வலுவான சான்றுகள் தேவை. எனினும் அண்ட்ரிக் அடிகளார் உருவாக்கிய அமைப்பின் தாக்கம் இந்நூல் உருவாகக் காரணமாக இருந்துள்ளது என்று கருதுவதில் தவறில்லை.

குருத்துவக் கல்லூரி

பரதவர்களின் நிதியுதவியுடன் 1588இல் குருத்துவக் கல்லூரி ஒன்றை அடிகளார் நிறுவினார். இங்கு பயிலும் மாணவர்களுக்கு லத்தீன்,

போர்ச்சுக்கீசு மொழிகளும் இறையியல், இசை, வழிபாட்டு முறைகள் ஆகியனவும் கற்றுக் கொடுக்கப்பட்டன.

தோழமை ஒப்புரவுச் சபை

பிரான்ஸ் நாட்டிலுள்ள கேம்பிரை (Cambrai) பகுதியில் பணிபுரிந்த சேசு சபையினரின் 1569, 1570 ஆண்டுக் கடிதங்களை அடிகளார் படிக்க நேர்ந்தது. பெண்களைக் கொண்ட ஒப்புரவு அமைப்புகளை அங்குள்ள குருக்கள் உருவாக்கியதையும் அவற்றின் பணிகள் சிறப்பாக அமைந்ததையும் அக்கடிதங்கள் குறிப்பிட்டன. முத்துக்குளித்துறையிலும் அறப்பணியில் ஆர்வம் மிக்க மக்களைக் கொண்டு அத்தகைய பிறரன்புச் சபை ஒன்றை உருவாக்க வேண்டுமென்று அவர் திட்டமிட்டார். 1572ஆம் ஆண்டில் 'தோழமை ஒப்புரவுச் சபை' (Confraternity of Charity) என்ற அமைப்பை உருவாக்கினார். இச்சபையின் விதிமுறைகளை வைத்து 1578இல் சனவரி இரண்டாம்நாள் ரோமுக்கு அனுப்பினார். 1586 ஜூலை 5இல் அதில் சில திருத்தங்களைச் செய்தார் (Wicki, 1967 : 4)).

இவ்வமைப்பின் விதிமுறைகளைப் பதின்மூன்று இயல்களாக அவர் எழுதியிருந்தார். முதல் இயலின் தொடக்கத்தில் கடவுளின் மீதும் அண்டையிலுள்ளோர் மீதும் அன்பு செலுத்துவதை அடிப்படையாகக் கொண்ட ஒப்புரவு அமைப்பை உருவாக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். இறை நம்பிக்கை உள்ளவர், இறை நம்பிக்கை இல்லாதவர் என அனைவரிடமும் அன்பு பாராட்ட வேண்டுவது அதன் உறுப்பினர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கிறித்துவின் முன்னிலையில் 'அடிமை என்றும், உரிமக் குடிமகன் என்றும் இல்லை' (கலாத்தியர் 3 : 28). என்று திருத்தூதர் கூறியமையால் தகுதி உள்ள ஆண் பெண் அடிமைகளையும் இவ்வமைப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்று மூன்றாவது இயலில் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாவது இயலில், அயலார் மீது அன்பு செலுத்துவதை வலியுறுத்துகிறார். மேலும் மத்தேயுவின் நற்செய்தியில் (25:35:37) யேசுவின் கூற்றாய் இடம்பெற்றுள்ள, "பசியாய் இருந்தேன், எனக்கு

உண்ணக் கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன், எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். அன்னியனாய் இருந்தேன், என்னை வரவேற்றீர்கள். ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினீர்கள். நோயுற்றிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள். சிறையில் இருந்தேன், என்னைக் காண வந்தீர்கள்." என்ற வரிகளைக் குறிப்பிடுகிறார். கடற்பயணத்தில் விபத்துகளில் சிக்கும் கப்பலின் பொருட்களை, இந்து, இஸ்லாமியர் என்ற வேறுபாடின்றி மீட்டுத் தருவதையும், கொள்ளை நோய் பரவும்போது உதவுவதையும் இவ்வியலில் குறிப்பிடுகிறார்.

பத்தாவது இயலில், குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பது குறித்தும், முறையாக ஆடை அணிவிப்பது குறித்தும் பேசுகிறார்.

தற்போது முத்துக்குளித்துறைக் கடற்கரைப் பகுதியிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயங்களில் "கொம்பேரி சபை" என்ற பெயரில் செயல்படும் அமைப்பானது அடிகளார் உருவாக்கிய தோழமை ஒப்புரவுச் சபையின் தொடர்ச்சிதான் என்று அடியார் வரலாறு நூலைப் பதிப்பித்த இராசமாணிக்கம் அடிகளார் (1967 : LX V) கருதுகிறார்.

அடிகளாரின் மறைவு

இவ்வாறு சமூகப் பணியையும், சமயப் பணியையும் 52 ஆண்டுகள் ஒருசேர நிகழ்த்தி வந்த அடிகளார் 1600 ஆம் ஆண்டு பிப்ரவரி 6ஆம் நாள் புன்னைக்காயலில் காலமானார். முத்துக்குளித் துறையின் தலைமைக் குருவாக 47 ஆண்டுகள் பணியாற்றிய இவர், காலமானபோது அவரது வயது 80. 1601ஆம் ஆண்டிற்கான சேசு சபை ஆண்டு மடலில் அடிகளாரைக் குறித்து எழுதப்பட்ட பின்வரும் பகுதிகள் அவர் மீது முத்துக்குளித்துறை மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன:

> தம்முடைய சிரமமான பணிகளுக்குப் பரிசாக இந்த ஆண்டு இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்ற உன்னதமான குருவானவர் ஹென்றி ஹென்றிக்கஸ் இந்த வீட்டில் (புன்னைக் காயலில்) வாழ்ந்தார். இங்கு தான் அவர் இறந்தார். இங்கிருந்து மூன்று

பாகம் தொலைவில் உள்ள தூத்துக்குடிக்கு அடக்கம் செய்வதற்காக அவருடைய உடலைக் கொண்டு சென்றார்கள். அவருடைய உடலுடன் ஏழு தோணிகளில் ஆட்களும் சென்றனர். அவருடைய உடலைத் தங்களுடைய ஜெபமாலைகளால் தொட்டு அவற்றை நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ள அலை மோதிய மக்கள் கூட்டத்தை விலக்கி உடலைக் கரை கொண்டு செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. அவருடைய மரணச் செய்தியைக் கேள்விப் பட்டவுடன் மற்ற குருவானவர்களுக்கு ஆறுதல் கூற அப்பகுதியின் முக்கியமான கிறிஸ்தவர்கள் வந்தார்கள். அவர்களுடைய பக்தி அளவில்லாதது. அவர்கள் அவரை ஒரு புனிதராக கருதுகிறார்கள். அவருடைய பெயரில் திருப்பலிகள் நிறைவேற்ற குருவானவர்களைக் கேட்கிறார்கள். அவர் 80ஆவது வயதில் மரணமடைந்தார். இதில் 55 ஆண்டு சேசு சபைக்கும், 25 ஆண்டுகள் முத்துக் குளித்துறையில் சபையின் அதிபராகவும் ஏனைய ஆண்டுகளைக் கிறிஸ்தவச் சமுதாயத்திற்குப் பணி செய்வதிலும் கழித்தார். முக்கிய புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் ஆண்டின் திருவிழாக்களையும் தமிழில் மொழிபெயர்த்த அவருடைய பணிகள் சிறப்பானது. இந்தப் பணி பல நாடுகளில் (சிறப்பாக) பேசப்படுகிறது. மேலும் பாவ சங்கீர்த்தனத்திற்காக ஒரு பெரிய புத்தகத்தையும், மறைக்கல்விக்கான ஒரு புத்தகத்தையும் மொழி பெயர்த்துத் தொகுத்தார். மலையாளத்திலும் மறைக்கல்விக்கு ஒரு புத்தகத்தைச் சிறந்த மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு தொகுத்தார். இவற்றை இந்த நாட்டின் மொழியிலேயே நமது சிறந்த குருவானவர்களில் ஒருவரை வைத்து அச்சு வெட்டி அச்சடித்தார். இதனால் வெனிசிலிருந்து அதற்கான எழுத்துக்களையோ அச்சுக்களையோ கொண்டு வருவது தேவையில்லாமல் போயிற்று. இந்தப் புத்தகங்கள் கிறிஸ்தவர்களின் கைகளில் மட்டுமல்லாது உள்நாட்டு இந்துக்களின் கைகளிலும் உள்ளன. இவர்கள் இவற்றைக் கண்டு அவற்றின் அச்சுத் திறனை மட்டுமல்லாது அந்தப் புத்தகங்களில் உள்ள புதிய கருத்துக்களையும் அவற்றில் புதைந்துள்ள புதிர்களையும் எண்ணி வியக்கிறார்கள். அவற்றைக் கவிஞர்கள் உரைநடையில் விளக்கி எழுதுகிறார்கள். இங்குள்ள

நடிகர் அவற்றை உரைநடையில் (நாம் கவிதை வடிவில் எழுதுவது போல் அல்லாது) எழுதி நாடகமாக அரங்கேற்றுகிறார்கள். அவர்களுடைய மொழியில் கவிதையாக எழுதினால் அவற்றை இசைக்கு உட்படுத்திப் பாடலாகப் பாட வேண்டும். அவ்வாறு பாடினால் மக்களால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. எனவே அவர்கள் துயர நாடகங்களையும் (tragedies) எல்லோரும் புரிந்து கொள்வதற்காக உரைநடையிலேயே எழுதுகிறார்கள்.

மேலும் 1601ஆம் ஆண்டின் கடிதத்தில் தூத்துக்குடியைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு மரணமடைந்த நம்முடைய உன்னத குருவானவர் ஹென்றி ஹென்றிக்கஸ் தூத்துக்குடியின் இந்தத் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்தக் கடற்புரத்திற்கு வந்த குருவானவர்களில் ஒருவர் அவர். இந்தக் கிறிஸ்தவச் சமுதாயத்திற்கு அவர் ஒரு கிறிஸ்துவின் சீடரைப் போன்று இருந்தார். இங்குள்ள கிறிஸ்தவர்கள் அவர் மேல் கொண்டுள்ள பக்தியை என்னால் விவரிக்க இயலாது. புனித அந்தோணியாரிடமும் மற்ற புனிதர் களிடம் வேண்டுவது போன்று அவருக்குக் காணிக்கைகளுடன் திருப்பலி நிறைவேற்றி அவருடைய உதவியை வேண்டி அவர்கள் அடிக்கடி வருகிறார்கள். மற்ற இடங்களிலிருந்து வருபவர்கள் இங்கு வழங்கப்படும் மெழுகுத் திரிகளை அவருடைய கல்லறையில் ஏற்றுகிறார்கள். ஒரு நாள் நான் தேவாலயத்திற்குச் சென்றபோது அவருடைய கல்லறையில் மெழுகுத்திரிகளை ஏற்றி அவரது உதவியை வேண்டி பக்தியுடன் ஜெபம் செய்து கொண்டிருந்த பெண்களைக் கண்டேன். இது வழக்கமாக இங்கு நடைபெறும் செயல். அவருடைய புனிதத்தைப் பற்றி அவர்களுடைய எண்ணமும் அவர் மேல் அவர்கள் கொண்டுள்ள பக்தியும் அவ்வளவு அதிகமானது. அவரிடம் எந்த உதவியையும் பெறாத இஸ்லாமியரும் இந்துக்களும் இவ்வளவு பற்றுதல் வைத்திருக்கும் போது, அவரால் வளர்த்து உருவாக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்வதில் எந்த வியப்பும் இல்லை. இதற்காக நாம்

கடவுளைப் போற்ற வேண்டும். புன்னைக்காயலில் வாக்குறுதி அளிக்கும்போது குருவானவர் ஹென்றிக்கஸ் பெயரில் வாக்குறுதி அளிப்பதை உயர்வாகவும் உறுதியானதாகவும் நம்புகிறார்கள். மேலும் அவர் இறந்த அன்று அருகில் உள்ள காயல்பட்டணத்தில் உள்ள அனைத்து இஸ்லாமியரும் உண்ணா நோன்பு இருந்தனர்; சுற்றி உள்ள பகுதியில் உள்ள இந்துக்கள் தங்களுடைய துயரத்தை வெளிப்படுத்த இரண்டு நாட்கள் அனைத்துக் கடைகளையும் மூடி உண்ணா நோன்பு இருந்தனர். அவருடைய புனிதத்தின் மேல் அனைவரும் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் அந்த அளவிற்குப் பெரியது.

5. அண்ட்ரிக் அடிகளாரின் நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும்போது நூல்களை அச்சாக்கம் செய்வதில் கிறித்தவ மறைபணியாளர்கள் முன்னோடிகளாக இருந்துள்ளமை தெரிய வருகிறது. பரந்துபட்ட பொருளில் நூல் என்பது தமிழர்களுக்குப் புதியதல்ல. குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் தமிழ்மொழிக்கு உண்டு. "நூலெனப்படுவது நுவலுங் காலை" என்று தொடங்கும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா, நூல் என்பதற்கு இலக்கணம் வகுக்கிறது. 'முதல் நூல்', 'வழி நூல்' என நூலை இரண்டு வகையாகப் பகுத்து மொத்தம் 16 நூற்பாக்களில் (95-110) நூலின் இலக்கண மரபைத் தொல்காப்பிய மரபியல் குறிப்பிடுகிறது. நூலில் இடம்பெறக் கூடாத குற்றங்கள், நூலில் இடம்பெற வேண்டிய உத்திகள் ஆகியன இம்மரபியல் நூற்பாக்களில் விரிவாக இடம்பெற்றுள்ளன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த திவாகர நிகண்டு, பனுவல், எண்ணல், அதிகாரம், ஆகமம், ஆரிடம், தந்திரம், பிடகம், கலை, எண் என நூலிற்குரிய பல பெயர்களைச் சுட்டுகிறது.

சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஐம்பெரும் காப்பியங்கள் என்ற இலக்கியமெல்லாம் பனையோலையில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட ஓலைகள், 'ஏடு', 'சுவடி' என்ற பெயர்களில் அழைக்கப்பட்டன. புத்தகம் என்ற சொல்லை நாலடியார் பயன்படுத்துகிறது. நூல்களைச் சேகரித்து வைக்கும் இன்றைய நூலகம் போன்ற அமைப்பும், பிற்காலச் சோழர் காலத்தில் இருந்துள்ளது. ஓலைச் சுவடிகளைச் சேகரித்து வைக்கும் அமைப்பை, '**சரஸ்வதி பண்டாரம்**' என்று அழைத்தனர். மதிப்புமிக்க பொருட்களைச் சேகரித்து வைக்கும் இடமே 'பண்டாரம்' (கருவூலம்) எனப்படும். ஓலைச் சுவடிகளை

மதிப்புமிக்க பொருளாகக் கருதியமையால்தான் அவற்றைச் சேகரித்து வைக்கும் இடத்திற்குச் சரஸ்வதி பண்டாரம் எனப் பெயரிட்டுள்ளனர்.

இத்தகைய பாரம்பரியச் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியில் அச்சாக்கம் செய்யும் முயற்சியைக் கிறித்தவம் தொடங்கி வைத்தமைக்கான காரணம் ஆராய்தற்குரியது.

தமிழ்நாட்டில் கிறித்தவம் பரவிய 16ஆம் நூற்றாண்டில் சைவம், வைணவம் என்ற இரண்டு நிறுவனச் சமயங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தின. பௌத்தமும், சமணமும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையில் பின்பற்றப்பட்டு வந்தன. மிகப் பெரும்பாலான அடித்தட்டு மக்கள் தாங்கள் வாழும் வட்டாரங்களுக்குரிய நாட்டார் தெய்வங்களை வழிபட்டு வந்தனர். நிறுவனச் சமயங்களான சைவ, வைணவச் சமயக் கோவில்களுக்குள் இவர்களில் மிகப் பெரும்பாலோர் நுழைந்து வழிபட முடியாதவாறு தீண்டாமைக் கருத்தியல் வழக்கில் இருந்தது. கோவிலுக்குள் நுழைந்து வழிபடுபவர்களும் பாடல் வடிவில் அமைந்த பக்தி இலக்கியங்களைப் பாட முடியுமே தவிர வழிபாட்டிற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபட முடியாது; அதை இவ்விரு சமயங்களும் வலியுறுத்தவும் இல்லை. வழிபடுவோர் களின் வேண்டுதல்கள் வழிபடுபவர்களுடைய விருப்பப்படியே அமையுமேயன்றி வரையறுக்கப்பட்டவை அல்ல.

ஒரு நிறுவனச் சமயம் என்ற முறையில் கிறித்தவம் தன் வழிபாட்டில் சில விதிமுறைகளைக் கொண்டிருந்தது. வழிபாட்டை நடத்துபவர் (குருக்கள், உதவியாளர்கள்) வழிபடுவோர் என்ற இருதரப்பினருக்கும் சில திட்டவட்டமான விதிமுறைகளை வகுத்திருந்தது. மேலும் கிறித்தவத் தேவாலய வழிபாடு என்பது கூட்டிசையுடன் கூடிய கூட்டு வழிபாட்டு முறையைக் கொண்டது.

எனவே ஒவ்வொரு கிறித்தவம் கூட்டு வழிபாட்டின் போதும், வாழ்க்கை வட்டச் சடங்குகளை ஒட்டிய வழிபாடுகளின் போதும், கூறுவதற்குச் சில அடிப்படை மந்திரங்களைக் கட்டாயம்

அறிந்திருக்க வேண்டும். இது அவர்களது சமய வாழ்வின் அடிப்படைக் கடமையாகும். இதனால்தான் இன்றுவரை கிறித்தவராக ஒருவரை அங்கீகரிக்க நிகழ்த்தப்படும் திருமுழுக்கு, புதுநன்மை என்ற இரு சடங்குகளிலும் அடிப்படை மந்திரங்கள் குறித்த அறிவு சோதிக்கப்படுகிறது. திருமுழுக்கின்போது குழந்தையின் ஞானப் பெற்றோர்களும், புதுநன்மையின்போது புதுநன்மை வாங்கும் குழந்தைகளும் அடிப்படை மந்திரங்களைப் பாராமல் ஒப்பிக்க வேண்டும். இதுபோன்று திருமணத்திற்கு முந்தைய இரண்டு அல்லது மூன்றாவது நாளில் மணமக்களிடம் அவர்களது விவிலிய அறிவைச் சோதித்தறியும் முறையில் குரு வினாக்களை எழுப்பி விடை கேட்பார். இது தமிழ்நாட்டின் சைவ, வைணவ சமயங்களில் இல்லாத ஒன்று. விருப்பம் போல் சென்று தங்கள் குறைகளை மனத்திற்குள் முறையிடும் முறைதான் இங்கு உண்டு.

ஆனால் கிறித்தவம் இதிலிருந்து வேறுபட்டிருப்பதை மேலே குறிப்பிட்டோம். முத்துக்குளித்துறைப் பரதவர்கள் தீண்டாமை எல்லைக்குள் வராதவர்கள். கன்னியாகுமரிப் பகவதி அம்மன், திருச்செந்தூர் முருகன், உத்திரகோசமங்கைச் சிவன், மதுரை மீனாட்சி ஆகிய தெய்வங்களை வணங்கி வந்தவர்கள். ஆயினும் சமய மந்திரங்களைக் (வடமொழி மந்திரங்கள்) கூறும் உரிமை இவர்களுக்கும் கிடையாது. கத்தோலிக்கர்களாக மதம் மாறிய பரதவர்களுக்குக் கத்தோலிக்கச் சமய அடிப்படை மந்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் அவசியம் கத்தோலிக்கக் குருக்களுக்கு இருந்தது. எழுத்தறிவு, பரவலாக பரதவர்களிடையே இல்லாமையாலும் தமிழ் மொழியை எழுதி வாசிக்கும் ஆற்றல் பெற்றக் குருக்கள் இல்லாமையாலும் மந்திரங்களைக் குரு உரக்கச் சொல்ல அதை கேட்கும் மற்றவர்கள் திரும்பக் கூறி மனப்பாடம் செய்து கொள்ளும் முறையைப் பின்பற்றினர்.

தமிழ் எழுதப்படிக்கத் தெரியாத குருக்கள் மந்திரங்களைப் படித்துக் கூறுவதற்காகத் தமிழில் மொழிபெயர்த்த மந்திரத்தைப் போர்ச்சுக்கீசிய வரிவடிவில் அச்சிட்டு வெளியிட்டார்கள். இது முற்றிலும் குருக்களின் உபயோகத்திற்கானது. இந்நூலைக் குறித்த



Cartilha que cõtẽ breuemẽt-
ho q̃ todo christão deue aprẽder
pera sua saluaçam. A qual el rey
dom Johã terceiro deste nome
nosso senhor mandou imprimir
ẽ lingoa Tamul e Portugues
cõ ha decraraçam do Tamul por
cima de vermelho.

கார்ட்டிலா நூலின் முகப்பு

நன்றி : Tamil Culture, 1958, Vol. VII

செய்திகளைத் தனிநாயக அடிகள் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கார்ட்டிலா (1554)

தனி நாயகம் அடிகள், போர்ச்சுக்கல் நாட்டு லிஸ்பன் நகரில்,

De Cartilha de litura doctrina in lingur
Tamule Portugues

என்ற நூலை 1954ஆம் ஆண்டில் கண்டார். இது (தனிநாயகம், 1958 : 292 - 293) போர்ச்சுக்கீசிய வரி வடிவில் அச்சிடப்பட்ட செப நூல் ஆகும். தமிழின் ஒலி வடிவைப் போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதி அச்சிட்டுள்ளனர். தமிழின் ஒலி வடிவத்தைப் பெரிய எழுத்திலும் அதற்கு இணையான போர்ச்சுக்கீசிய எழுத்தைச் சிறிய வடிவத்திலும் அச்சிட்டிருந்தனர். தமிழெழுத்து கரு நிறமாகவும், போர்ச்சுக்கீசியச் சொல் செந்நிறமாகவும் அமைந்திருந்தது. மொத்தம் 38 பக்கங்கள் கொண்ட Cartilha என்ற இந்நூல் 1554 பிப்ரவரி 11ஆம் நாள் லிஸ்பனில் அச்சாகியுள்ளது. "இரு நிறங்களையும் திறமையான எழுத்துக்களையும் கொண்ட நூலை ஐரோப்பிய அச்சக வரலாற்றிலேயே காண்பது அரிது" என்று தனி நாயகம் அடிகளார் இந்நூலைப் பாராட்டியுள்ளார். இது பொது மக்களின் பயன்பாட்டை நோக்கமாகக் கொள்ளாமல் கத்தோலிக்கக் குருக்களுக்காக அச்சிடப்பட்டுள்ளது. தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத போர்ச்சுக்கீசியக் குருக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ள மந்திரங்களைத் தமிழ் உச்சரிப்பில் கூற இந்நூல் துணைபுரிந்தது. சான்றாக, இந்நூலில் போர்ச்சுக்கீசிய வரி வடிவில் எழுதப்பட்ட விசுவாச மந்திரம் வருமாறு:

> "ஆகாசமும் பூமியும் படைச்சவன் சர்வமும் ஆனவனே, பிதாவே தம்பிரானே விசுவாசம். அவ்வண்ணம் என்னடே கர்த்தாவே யேசு கிறிஸ்தோ அவ்வனடே புத்ரனே ஒருவனே. சுத்தமான சித்தத்தினொடெய கருணே கொண்டு கெற்பம் ஆயி: கன்னியாஸ்திரி மரியத்தில் பெறந்தவன்: போஞ்சியோ பிலாத்தோ விதித்த விதிகொண்டு வெசெனப்பட்டு: குருசினில் தூக்கிச் செத்தான்: குழில் வைத்து . . ." (இராசமாணிக்கம், 1963 : 15)

தம்பிரான் வணக்கம் (1578)

கார்ட்டிலா நூலையடுத்துத் தமிழ் மொழியிலேயே கத்தோலிக்கச் சமய மந்திரங்களை அச்சிடும் பணியை அண்ட்ரிக் அடிகளார் தொடங்கி வைத்தார். அண்ட்ரிக் அடிகளார் முதலில் அச்சிட்ட தமிழ்நூல் 'தம்பிரான் வணக்கம்' என்ற 16 பக்கங்களைக் கொண்ட நூலாகும். 1577ஆம் ஆண்டில் கோவாவில் தமிழ் எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன என்று தெரிய வருகிறது. ஆயினும் அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி அச்சான நூல்கள் குறித்து எதுவும் தெரியவில்லை. பின்னர் 1578ஆம் ஆண்டு கொல்லத்தில் தமிழ் எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி 1578ஆம் ஆண்டில் 'தம்பிரான் வணக்கம்' நூலை அண்ட்ரிக் அடிகளார் அச்சிட்டுள்ளார். 'கிறித்துவப் படிப்பினை' (DOCTRINA CHRISTAM) என்ற தலைப்பில் மார்க்கோசி சொரிசி பாதிரியார் (Marcos Jorge) போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதிய நூலின் தமழாக்கமே இந்நூலாகும். அண்ட்ரிக் அடிகளார் பீட்டர் மானுவல் என்ற குருவுடன் இணைந்து இந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் அவர் பணிபுரிந்த முத்துக்குளித்துறைப் பகுதியில் வாழும் பரதவர்கள் பேச்சுமொழியிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலில் 'பத்துக் கட்டளைகள்', 'திருச்சபையின் கட்டளைகள்', 'பாவ மன்னிப்பு', 'அருள்நிறைந்த மரி' போன்ற கத்தோலிக்கக் கிறித்தவர்களின் அடிப்படையான சமய விதிகளும், மந்திரங்களும் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் மொழிநடைக்குச் சான்றாக, 'மங்கள வார்த்தை செபம்' என்ற பெயரில் தற்போது வழங்கும் செபத்திற்கான அண்ட்ரிக் அடிகளாரின் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> TகிறாசைT* நிறைந்த மரியாளே, தம்பிரான் உன்னை இலட்சிக்க. கர்த்தர் உன்னிடத்திலே பெண் சாதிகளில்** சுத்தமானவள் நீயே. உன்னுடைய வயிற்றில் கனியாகிய யிசேசுவுஞ் சுத்தமானது. சுத்தமான மரியாள், தம்பிரானுடைய மாதாவே, பிழையாளிகளாய்

* அருள், கருணை என்ற பொருள் தரும் GRACA போர்த்துக்கீசியச் சொல்

** பெண்களில்

இருக்கிற எங்களுக்கு வேண்டி, இப்போதும் எங்கள் இறுதி காலத்திலும் இரந்து கொள். - ஆமென்.

இப்பகுதியின் தற்போதைய மொழிநடை வருமாறு:

"அருள்நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியஷ்ட மரியாயே, சர்வேசுவரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும் - ஆமென்."

பத்துக் கட்டளைகள் குறித்த அடிகளாரின் மொழிபெயர்ப்பையும் தற்போதைய மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் வாயிலாகத் தமிழ் உரைநடை 16ஆம் நூற்றாண்டில் எவ்வாறு இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

பல சமயக் கலைச் சொற்களை அண்ட்ரிக் அடிகளார் புதிதாக உருவாக்கியுள்ளார். அதோடு பல சொற்களைப் போர்ச்சுக்கீசிய ஒலி வடிவிலேயே தமிழில் தந்துள்ளார்.

அண்ட்ரிக் அடிகளாரின் மொழிபெயர்ப்பு	தற்போதைய மொழிபெயர்ப்பு
1. முதலாவது எல்லாத்திரும் பாற்கத் தம்பிரானை நேசித் திருப்பது.	1. உனக்குக் கர்த்தாவான சர்வேசுவரன் நாமே, நம்மைத் தவிர வேறெ சர்வேசுவரன் உனக்கு இல்லாமல் போவதாக.
2. இரண்டாவது தம்பிரான் திரு நாமத்தைக் கொண்டு வீணே சத்தியம் செய்யாமலிருப்பது.	2. சர்வேசுவரனுடைய திருப் பெயரை வீணாகச் சொல்லாமலிருப்பாயாக.
3. மூன்றாவது 'நாயறாட்கைளும்'* பெரு நாட்களும் சுத்தமாய்க் கொண்டாடியிருப்பது	3. சர்வேசுவரனுடைய திரு நாட்களைத் தூய்மையாய் அனுசரிக்க மறவா திருப்பாயாக.

* ஞாயிற்றுக் கிழமை

4. நாலாவது பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பது.	4. பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.
5. அஞ்சாவது கொலை செய்யாமலிருப்பது.	5. கொலை செய்யாதிருப்பாயாக.
6. ஆறாவது மறுமுக னோக்காமலிருப்பது	6. மோக பாவம் செய்யாதிருப்பாயாக.
7. ஏழாவது களவாணாமலிருப்பது.	7. களவு செய்யாதிருப்பாயாக
8. எட்டாவது 'பொய்ச்சாட்கி'* சொல்லாமலிருப்பது.	8. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.
9. ஒன்பதாவது ஒருத்தன் பெண் சாதிக்கு இச்சைப்படாதிருப்பாயாக.	9. பிறர் தாரத்தை விரும்பாமலிருப்பது.
10. பத்தாவது ஆதனம் வசுத்துகளுக்கு அவேட்கைப் படாமலிருப்பது.	10. பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக.

கிரீசித்தியானி வணக்கம் 1579

1579ஆம் ஆண்டு கொச்சியில் அண்ட்ரிக் அடிகளாரின் இரண்டாவது நூலான 'கிரீசித்தியானி வணக்கம்' அச்சானது. மார்க்கோஸ் ஜார்ஜ் என்பவர் போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதிய Docrina Christam என்ற நூலின் தமிழாக்கமே இந்நூலாகும். இந்நூல் வினா-விடை வடிவில் அமைந்துள்ளது. கிறித்துவத்தின் அடிப்படை உண்மைகளைக் கூறுகிறது. இந்நூலை உருவாக்க வேறு சில தமிழறிஞர்களின் துணையை அவர் நாடிப் பெற்றுள்ளார். இதை நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> மார்க்கோசு சொரிசிப் பாதிரியார் புறத்துக் கால்ப் பாஷையிலே இந்தப் பொத்தகம் உண்டாக்கினாப் போலே அதை நம்முடைய T கொம்பாஞ்ஞியை T யிலுள் பட்ட அண்டிறீக்கிப் பாதிரியார் உங்கள் தமிட் பாஷையிலே பிறித்து எழுதவுஞ் செய்தார். அவரும்

* பொய் சாட்சி

கிரிசித்தியானி வணக்கத்தின் முகவுரையும் தொடக்க பக்கமும்



நன்றி : Tamil Culture, 1958, Vol. VII

> நன்றாய்ப் பிறித்தெழுதும்படிக்குத் தமிள் நன்றாய் இணங்கத்தக்க சில வாத்தைசாவை தீர்த்துக்கொண்டு இடறுகள் வாராமல் அனேகமெல்லாந் தெண்டித்தார். அப்படியே நம்முடைய T கொம்பாஞ்ஞியை T யிலுள்பட்ட வேறொரு பாதிரியார் அச்சிலே நன்றாய்ப் பதிக்கிறதுக்குப் பெருகத் தெண்டிக்கவுஞ் செய்தார். பாதிரிமார் இப்படித் தெண்டித் திருக்கையிலேயும் இந்தப் பொத்தகத்திலே இடறுகள் இல்லையென்று சொல்லப்போகாது.

இந்நூலின் பெயர்க்காரணம் குறித்து இராசமாணிக்கம் அடிகளார் (1963:1-2) பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

> "கிரீசித்தியானி என்ற சொல்லுக்குக் கிறிஸ்தவன் என்று பொருள். செபம் அல்லது வழிபாடு என்று வணக்கம் பொருள் தரும். ஆகவே கிரீசித்தியானி வணக்கம் என்பது கிறிஸ்தவன் செய்யும் வழிபாட்டைச் சுட்டிக்காட்டும். மூல நூலில் 'கிறிஸ்தவ படிப்பினை' என்றிருக்க அதை விட்டுக் கிரீசித்தியானி வணக்கம் என்று தலைப்பிட்டதுக்குக் காரணம் தெரியவில்லை. 'படிப்பினை' வெறும் அறிவுறுத்தல் மட்டும் சுட்ட 'வணக்கம்' அல்லது வழிபாடு அக்கொள்கையைச் செயல்முறையில் கடைப்பிடிப்பதைக் காட்டுவதால் வணக்கம் என்ற சொல் படிப்பினை என்ற சொல்லைக் காட்டிலும் சிறந்ததாக ஆசிரியருக்குத் தோன்றியிருக்கலாம்."

இந்நூலில் இடம்பெற்றுள்ள போர்ச்சுக்கீசிய மொழிச் சொற்களை வாசகர்கள் வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் வகையில் அதற்கு முன்னும் பின்னும் 'T' என்ற அடையாளத்தை அண்ட்ரிக் அடிகளார் அமைத்துள்ளார்.

> "தமிள் வாத்தை யல்லாத சொல்லென்று அறியத்தக்கதாக முன்னும் பின்னும் T T இப்படிக் கொத்த இரண்டடையாளங் குறித்திருக்கிறது."
> (மேலது : R)

இந்நூலை அச்சிடுவதற்கு முத்துக்குளித்துறைப் பரதவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள். இதன் பொருட்டு நூலின் முகவுரையில்,

> உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்குச் சொற்கத்துக்குப் போறவழி படிப்பிக்கத்தக்க பல பல பொத்தகங்கள் அச்சிலே உண்டாக

> வேணுமென்று அனேக முதல் அச்சுண்டாக்கச் சிலவளித்தீர்கள். ஆகையினால் இந்தப் பொத்தகம் உங்களுக்கு நன்கொடையாக வரவிட்டோம்.
>
> அனேக முதல் சிலவளித்து அச்சுண்டாக்கி வித்ததினாலே சங்கையும் கீர்த்தியும் லோகோர் முன்பாகப் பெற்றீர்களே.

என்று பாராட்டியுள்ளார்.

நூலின் அமைப்பும் மொழிநடையும்

நூற்றுப்பத்தொன்பது பக்கங்களைக் கொண்ட இந்நூலில் நூற்றுப் பன்னிரண்டு பக்கங்கள் நூலின் தலைப்பிற்குரிய பொருளை நுவல்கின்றன. ஏனைய ஏழு பக்கங்களிலும் விளம்பரமும், முகவுரையும் இடம் பெற்றுள்ளன. வாத்தியார் - சீஷன் என்ற இருவருக்குமிடையில் வினா விடை வடிவில் நிகழும் உரையாடலாக இந்நூல் அமைந்துள்ளது. வாத்தியார் கேட்கும் கேள்விகளுக்குச் சீடன் பதிலளிக்கிறான். நூலின் தொடக்கத்தில் 'வாத்தியார்', 'சீஷன்' என்று குறிப்பிடும் ஆசிரியர் பின்னர் நூல் முழுவதும் வாத்தியாருக்கு 'வ' என்றும், சீஷனுக்கு 'சீ' என்றும் குறித்துள்ளார். பன்னிரண்டு அதிகாரங்களாக இந்நூல் பகுக்கப் பெற்றுள்ளது.

முதல் அதிகாரத்தில் கிரீசித்தியானி (கிறித்தவம்) என்றால் என்ன பொருள்? என்பதை ஆசிரியர் விளக்குவது வருமாறு:

> வ. கிரிசித்தியானி என்றதுக்குப் பயனென்ன?
>
> சீ. இசேசுக் கிரீசித்து மாறகத்தை விச்சுவதித்து அதின் படியே துணிந்து நடக்கிறவனாக்குங் கிரிசித்தியானி என்றது.

இதுபோன்றே, 'கிரிசீத்து என்று பேர்ப்படுவானேன்' (கிறித்து என்ற பெயர் வருவானேன்) என்ற வாத்தியாரின் கேள்விக்குச் சீடன் அளிக்கும் பதில் வருமாறு:

> சீ. கிரீசித்து என்ற வார்த்தையின் பயன் அறியத்தக்கதாகச் சில வர்த்தமானஞ் சொல்ல வேண்டியிருக்கிது. அதாவது சூதமார் வேதம் நடக்கிற காலத்திலே, யாதொருத்தனை இராசாவாக வைக்கும் பொழுது, முந்த அந்த வேதத்தின்படியே அவன் தலையிலே

எண்ணை வார்ப்பார்கள். T சசெடுதோத்திகளுக்கும் பொறேப் பெத்தை கூ களுக்கும் அவ்வண்ணமே செய்து வருவார்கள். அப்படி எண்ணை வாத்துக் கொண்டவர்கள் T கிரேகு Tப் பாஷைசயிலே, கிரிசீத்து என்று பேர்ப்படுவார்கள். புறத்துகால்ப் பாஷைசயிலே Tயுஞ்சீது Tவென்று சொல்லப்படும். தமிழ்ப் பாஷையிலே நன்றாய்ச் சொல்லிக் கூடாது. 'வாத்துக் கொண்டவன்' என்று சொன்னாலும் கிரீசித்து என்ற சொல்லுக்குத் திடன் போதாது. நம்முடைய நாயன் இசேசுவினிடத்திலே மனுதனாகிய மட்டுக்குச் சுத்தமான யசிப்பீரித்துவின் T கிறாசை T வெகுவாக வந்ததினாலே இராசாக்களுக்கெல்லாம் விசேஷமாக மேற்பட்ட இராசாவாம் படியேயுஞ் T சசெடுதோத்தி T களுக்கெல்லாம் மேற்பட்ட T சசெடுதோத்தி T யாம்படியேயும் T பொறோப்பெத்தை T களுக்கெல்லாம் மேற்பட்ட T பொறோப்பெத்தை T யாம்படியேயுங் கிரீசித்து வென்று பேர்பட்டதொழிந்து மற்றப்படியல்ல.

கிரீத்து என்ற சொல்லுக்குத் தமிழில் விளக்கம் தர அண்ட்ரிக் அடிகளார் படும் சிரமத்தை, அடிகளாரின் விளக்கத்தை நம் காலத்தியத் தமிழ்நடையில் பின்வருமாறு குறிப்பிடலாம்.

"கிறிஸ்து என்ற வார்த்தையின் பொருள் அறியத்தக்கதாகச் சில செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது யூதர்களின் வேதம் நடக்கிற காலத்திலே யாதொருவனை மன்னனாக்கும்போது, முன்பு அந்த வேதத்தின்படி அவன் தலையிலே எண்ணெய் தடவு வார்கள். குருக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் அவ்வண்ணமே செய்வார்கள். அப்பிடி எண்ணெய் தடவிக் கொண்டவர்கள் கிரேக்க மொழியில் கிறிஸ்து என்று அழைக்கப்படுவார்கள். போர்ச்சுக்கீசிய மொழியில் பூசுதல் என்று சொல்லப்படும். தமிழ் மொழியில் நன்றாய்ச் சொல்ல முடியாது. வார்த்துக் கொண்டவன் என்று சொன்னாலும் கிறிஸ்து என்ற சொல்லுக்கு ஈடாகாது. நம்முடைய நாயன் இயேசுவினிடத்திலே மனிதராக இருந்தாலும் தூய ஆவியானவரின் அருள் மிகுதியாக வந்ததினால் ழன்னர்களுக்கெல்லாம் குருவாக ஆகும்படியும், தீர்க்கத்தரிசிகளுக்கெல்லாம் மேற்பட்ட தீர்க்கத்தரிசி ஆகும்படி கிறித்து என்று பெயர் இட்டது ஒழிந்து மற்றப்படியல்ல."

சிலுவையைக் குறிக்க, குருசு (Cruz) என்ற போர்ச்சுக்கீசிய மொழிச் சொல்லையே அடிகளார் தம் நூலில் பயன்படுத்தியுள்ளார். கிறிஸ்தவர்களின் அடையாளமான சிலுவையைக் குறித்துச் சில அடிப்படைச் செய்திகளை அண்ட்ரிக் அடிகளார் இரண்டாம் அதிகாரத்தின் தொடக்கத்தில் குறிப்பிடுகிறார்:

> வாத்தியார்: பிள்ளாய், நீய் சொல்லு, கிரிசித்தியானியுடைய அடையாளம் எது?
>
> சீஷன் : சுத்தமான குருசு
>
> வ. அதேன்?
>
> சீ. நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்துக் குருசிலே அறையுண்டு நம்மை மீண்டபடியினாலே.
>
> வ. ஆரை மீழுவார்கள்?
>
> சீ. அடிமைப்பட்டவர்களை.
>
> வ. ஆனால் அடிமையாய் இருந்தோமா?
>
> சீ. ஓம், பாதிரியாரே.
>
> வ. ஆற்கு?
>
> சீ. நாம் செய்த தோழ்சத்துக்கும் பேய்க்கும்.
>
> ....
>
> ....
>
> வ. எப்போதெல்லாம் இந்தக் குருசு அடையாளம் வரைந்து கொள்ளுகிறது?
>
> சீ. நாம் இயாதாம் ஒரு பிறபுத்தி செய்யத் துடங்கிற போதெல்லாம், அப்படியே, யாதாமொரு இடுக்கத்தில் அகப்படுகிற போதும், படுக்கையில் உறங்கி எழுந்திருக்கும்போதும், வீட்டை விட்டுப் பிறப்பிடும்போதும்T இகிரேசைக் T குள்ளே புகுதும் போதுந் தின்னும் போதும், நித்திரை செய்யும் போதும், தும்மும்போதுங், கொட்டாவி விடும்போதுங், குருசு வரைந்து கொள்ள வேணும்.

இரண்டாம் அதிகாரத்திலிருந்து ஆறாம் அதிகாரம் வரை கத்தோலிக்கக் கிறித்தவர்களின் அன்றாட வாழ்வில் பயன்படும்

'சிலுவை மந்திரம்', 'பரலோக மந்திரம்', 'அருள்நிறைந்த மந்திரம்', 'கிருபை தயாபத்து மந்திரம்' என்ற மந்திரங்களுக்கு விளக்கம் தருகிறார். அண்ட்ரிக் அடிகளாரின் விசுவாச மந்திர மொழிபெயர்ப்பு வருமாறு:

> வானமும் பூமியும் படைத்த சறுவத்துக்கும் வல்ல பிதாவான தம்பிரானையே விச்சுவதிக்கிறேன். அவனுடைய மகன் ஒருவன் நம்முடைய இசேசூக் கிரீசித்தையே விச்சுவதிக்கிறேன். இவன் சுத்தமான இசுப்பீரீத்துவினாற் சனித்துக் கன்னிமரியாள் வயிற்றில் நின்று பிறந்தான். போஞ்சியுப் பிலாத்தின் கீட் பாடுபட்டுக் குருசிலே யறையுண்டு செத்தடக்கப்பட்டான். பாதாளங்களிலிறங்கி மூன்றானாட் செத்தவர்களிடையில் நின்று உயிர்த்தான். வானங்களில் ஏறிச் சறுவத்துக்கும் வல்ல பிதாவாகிய தம்பிரான் வலப்பக்கத்தில் இருக்கிறான். அவ்விடத்தில் நின்று இருக்கிறவர்களுக்கும் செத்தவர் களுக்கும் நடுத்தீர்க வருவான். சுத்தமான இசுப்பீரித்துவையே விச்சுவதிக்கிறேன். கத்தோலிக்க வாகிய சுத்தமான யிகிரெசையு ம் சுத்தமானவர்கள் கூட்டமும் உண்டென்று விச்சுவதிக்கிறேன். பிழை களும் பொறுத்தறுளும் செத்தவர்கள் உயிர்த்தறுளும் என்றென் றைக்கும் உள்ள ஆயித்தும் உண்டென்று விச்சுவதிக்கிறேன் ஆமென்.

இதே மந்திரம் தற்போது பின்வருமாறு அமைந்துள்ளது.

> பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.
>
> அவருடைய ஏக மகனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்.
>
> இவர் தூய ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து கன்னிமரியிடமிருந்து பிறந்தார். போஞ்சுபிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.
>
> பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.
>
> பரலோகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்.

இவ்விரண்டு மொழிபெயர்ப்பிற்கும் இடையிலான வேறுபாட்டில் முக்கிய இடம்வகிப்பது பேச்சு மொழியே. அண்டிரிக் அடிகளாரின் மொழிபெயர்ப்பில் பேச்சு மொழியின் செல்வாக்கு இடம்பெற, தற்போதைய மொழிபெயர்ப்பில் பேச்சு மொழி யிலிருந்து விடுவித்துக் கொண்ட எழுத்து மொழி இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

உடலுக்கான எழில் என்ற தலைப்பில் இந்நூலில் இடம்பெற்றுள்ள செய்தி வருமாறு:

முதலாவது கிலேசக்காறரைச் சென்று மினவுகிறது.

இரண்டாவது பசித்தவர்களுக்குப் பசி ஆற்றுகிறது.

மூன்றாவது தவிச்சவர்களுக்குத் தாபம் தீர்க்கிறது.

நாலாவது சிறைப்பட்டிருக்கிறவர்களை மீளுகிறது.

அஞ்சாவது உடுகூறை இல்லாதவற்கு உடுகூறை கொடுக்கிறது.

ஆறாவது அகுதி பரதேசிகளுக்கு விடுதி கொடுக்கிறது.

ஏழாவது செத்தவர்களை அடக்கிறது.

அண்ட்ரிக் அடிகளாரின் இம்மொழிபெயர்ப்பை இன்று பயன்படுத்தும் மொழிபெயர்ப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் உரைநடையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம். இதுபோன்றே யேசு அறிவித்த எட்டுப் பேறுகள் குறித்த அவரின் மொழிபெயர்ப்பையும் தற்போது பயன்படுத்தப்படும் மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அடிகளார் மொழி பெயர்ப்பு	தற்போதைய மொழிபெயர்ப்பு
1. மனதிலே மிடியராயிருக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள்; அதே தெனில் அவர்கள் வானங் களில் இராச்சியத்துக் குடையவர்கள்.	ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

2. அமைந்து நடக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அதேதெனில் அவர்கள் பூமியை ஆண்டிருப்பார்கள்.	கனிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
3. அழுகிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அதேதெனில் அவர்கள் சந்தோழ்சப் பட்டிருப்பார்கள்.	துயருருவோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
4. நியாயம் நடக்க வேணுமென்று பசிதவன முண்டாயிருக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அதேதெனில் அவர்கள் பசி தவனம் தீந்து சம்பூரண மாயிருப்பார்கள்.	நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்
5. இரக்கமுள்ளவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள்; அதேதெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.	இரக்கமுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
6. மன சுத்தமாயிருக்கிற பேர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள்; அதேதெனில் அவர்கள் தம்பிரானைக் காண்பார்கள்.	தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
7. உறவுக்குத் தெண்டிக் கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள்; அதேதெனில் அவர்கள் தம்பிரானுடைய மக்களென்று பேர்ப்படுவார்கள்.	அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் என்று அழைக்கப்படுவர்

8. நியாயத்துக்கு வேண்டிப் பாடுபடுகிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள்; அதேதெனில் அவர்கள் வானங்களில் இராச்சியத்துக் குடையவர்கள்.	நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

இதுபோன்றே 'தேவ திரவிய அனுமானங்கள்' (அருள் அடையாளங்கள்) ஏழினைக் குறித்த, அவரது மொழிபெயர்ப்பு போர்ச்சுக்கீசிய மொழிச் சொற்களின் ஒலிவடிவமாகவே அமைந்துள்ளது. இதையும் தற்போது பயன்படுத்தும் கத்தோலிக்கச் சமயச் சொற்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அண்ட்ரிக் அடிகளார் வழங்கும் சொற்கள்	தற்போது பயன்படுத்தும் சொற்கள்
வவுத்தீசிமுர்	திருமுழுக்கு
கிரிசிமாரித்தல்	உறுதி பூசுதல்
சந்தீசிமோ சக்கிறமெந்து	திவ்விய நற்கருணை
கொம்பெசாரித்தல்	பாவமன்னிப்பு
எசித்திரேம் அவுஞ்சம்	நோயில் பூசுதல்
ஒடுதென்	குருத்துவம்
மத்திரிமோனியுர்	திருமணம்

அண்ட்ரிக் அடிகளாரின் இரண்டாவது நூலான 'கிரீசித்தியானி வணக்கம்' தமிழ் உரைநடை மற்றும் மொழிபெயர்ப்பின் வளர்ச்சி குறித்த ஆய்விற்குத் துணை புரிகின்றது. அவரது முதல் நூலான 'தம்பிரான் வணக்கமும்' இரண்டாவது நூலான கிரீசித்தியானி வணக்கமும் சமய நூல்களாக மட்டுமின்றி ஓர் 'எதிர்ப் பண்பாட்டை'யும் உருவாக்கியுள்ளன. எவ்வாறெனில் சமய மந்திரங்கள் அனைத்துச் சாதியினராலும் பயின்று உச்சரிக்கப்படும் நிலை அன்றில்லை. சமயக் குருக்களும், மேட்டிமைச் சாதியினரும் மட்டுமே இதற்கு உரியவர்களாக இருந்தனர். அவை பெரும்பாலும்

வடமொழியிலேயே அமைந்திருந்தன. மந்திரங்களையும், அவற்றின் பொருளையும் கேட்டறியும் உரிமையற்றிருந்த மக்கள் பிரிவினருக்குக் கோபுரத்தின் மீது ஏறிநின்று அவற்றை உரக்கக்கூறி விளக்கிய காரணத்தாலேயே இராமானுஜர் போற்றப்படுகிறார். இத்தகைய சமூக அமைப்பில் சமய மந்திரங்களை, அச்சிட்டு அனைவருக்கும் வழங்கிய அண்ட்ரிக் அடிகளாரின் பணி, மரபு மீறிய செயல் என்பதில் ஐயமில்லை.

பேச்சுத் தமிழ் இலக்கணம்

எந்த ஒரு மொழியிலும் பேச்சுமொழி, எழுத்து மொழி என்ற இரு பிரிவுகள் உண்டு. ஒரு மொழியைப் பேசுபவர்கள் வாழும் நிலப்பகுதி, மேற்கொள்ளும் தொழில் ஆகியனவற்றின் அடிப்படையில் பேச்சு மொழியானது சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கும். நம் நாட்டைப் பொறுத்த அளவில் பேச்சு மொழியில் வேறுபாடுகள் உருவாகச் சாதியும் காரணமாக உள்ளது. இவ்வாறு வேறுபடும் பேச்சு மொழியைக் கிளை மொழி (Dialect) என்று மொழியியலாளர் குறிப்பர். கிளை மொழி குறித்த சிந்தனை தொல்காப்பியருக்கும் உண்டு. "சேரி மொழியால் செவ்விதிற் கிளந்து" என்று செய்யுளியல் நூற்பாவில் (239) அவர் குறிப்பிடுவது கிளை மொழியைத்தான் என்று கருத இடமுண்டு. "சேரி மொழி என்பது பாடி* மாற்றங்கள்" என்று பேராசிரியரும், "பலருக்கும் தெரிந்த வழக்குச் சொல்" என்று நச்சினார்க்கினியரும் பொருளுரைப்பர்.

தொல்காப்பியர் தம் சொல்லதிகாரத்தில் (நூற்பா 397) 'இயற்சொல்', 'திரிசொல்', 'திசைச் சொல்', 'வடசொல்' என நான்கு வகையாகச் சொற்களைப் பகுத்துள்ளார். இவற்றுள் இயற்சொல் என்பதைப் பொதுமொழி (Standard Language) என்றும், திசைச் சொல் என்பதைக் கிளை மொழி என்றும் கொள்ளலாம். திசைச் சொல் என்பதற்கு,

> செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
> தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி

---

* பாடி - ஊர்

என்று வரையறை செய்கிறார் (நூற்பா 400). இந்நூற்பாவிற்கு அவ்வந்நிலத்துத் தாங் குறித்த பொருள் விளக்குவதல்லது அவ்வியற் சொற்போல எந்நிலத்துந்தம்பொருள் விளக்கா வென்றவாரும்" என்று உரையெழுதும் சேனாவரையர் திசைச் சொல்லிற்குத் "தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்ற மென்றும், தம்மாமி யென்பதனைத் தந்துவையென்றும் வழங்குப பிறவுமன்ன" என்று எடுத்துக்காட்டு தருகிறார்.

இவ்வாறு கிளை மொழி, பேச்சு மொழி குறித்த சிந்தனை தொல்காப்பியரிடமும், தொல்காப்பிய உரையாசிரியர்களிடமும் இடம்பெற்றிருந்தாலும் இவை குறித்த விரிவான இலக்கணம் தமிழில் எழுதப்படவில்லை. அன்றையச் சூழலில் அது தேவையற்றது என்பதும் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதாற்குப் பேச்சுத் தமிழ் இலக்கணம் தேவையான ஒன்று.

போர்ச்சுக்கீசிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அடிகளார் முத்துக்குளித்துறையில் பரதவர்களிடையே பணிபுரிந்ததால் அவர்களின் பேச்சு மொழியை அறிந்து கொள்ளும் அவசியம் அவருக்கிருந்தது. கத்தோலிக்கச் சமயக் கருத்துக் களையும் மந்திரங்களையும் பரதவர்களுக்குப் போதிப்பதற்கும், அவர்களிடம் பாவ மன்னிப்புக் கேட்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் அவர்களின் பேச்சு மொழியைப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் அவருக்கிருந்தது. வீரமாமுனிவரைப் போன்று தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவரில்லை. அவருக்கு அது தேவையுமில்லை. அவரது பணிக்குத் தேவையான அளவுக்கு அவர் பேச்சுத் தமிழையும், எழுத்துத் தமிழையும் கற்றறிந்திருந்தார். கத்தோலிக்கர்களின் சமய வாழ்வில் பயன்படும் மந்திரங்களைப் பரதவர்களின் பேச்சு மொழியிலேயே எழுதி அச்சிட்டார். இந்த வகையில் அவருக்குப் பின்னால் வந்த கத்தோலிக்கக் குருக்களுக்கு அவரே முன்னோடி.

முத்துக்குளித்துறையில் பணிபுரிய வரும் போர்ச்சுக்கீசிய குருக்களின் இடர்ப்பாட்டைப் போக்கும் வகையில் பரதவர்களின்

பேச்சுமொழியை அவர்கள் கற்றுக் கொள்ள உதவும் பேச்சுத் தமிழ் இலக்கண நூலை எழுதும் தகுதி அவருக்கிருந்தது. ஏற்கனவே இக்னிஷியஸ் லயோலாவுக்கு 31.10.1548இல் எழுதிய கடிதத்தில்,

> "குருவா்னவர்கள் இம்மொழியை எளிதில் கற்றுக் கொள்வதற்காக ஒரு வகையான இலக்கணத்தை எழுத அய்யா பிரான்சிஸ் கட்டளை யிட்டுள்ளார். ஆண்டவரின் உதவியால் இதை நிறைவேற்றுவேன். தமிழில் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமாய்ப் பேசினாலோ மொழிபெயர்ப்பாளரின்றி நேரிடையாக பேசினாலோ பயன்படக் கூடிய இலக்கண விதிகளையும் வினைத் திரிபுகளையும் வேற்றுமை உருபுகளையும் அந்த இலக்கணத்தில் சேர்ப்பேன்."

என்று எழுதியுள்ளார்.

13 நவம்பர் 1549இல் இக்னிஷியஸ் லயோலாவிற்கு எழுதிய கடிதத்தில் இலக்கண நூலை எழுதி முடித்து விட்டதாகவும், அதன் திருந்தாப் படியை இணைத்துள்ளதாகவும் எழுதி உள்ளார். குறையில்லாதபடி அதை அச்சிட வேண்டுமென்றால் அதில் சில பகுதிகளை நீக்கிவிட்டு சிலவற்றைப் புதிதாகச் சேர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Jeanne H. Hein, 1977 : 136-137).

இக்கடிதம் எழுதிய பின்னர் 17 ஆண்டுகள் அதைச் செம்மையாக்கும் பணியில் அடிகளார் ஈடுபட்டார். 1566இல் அவர் எழுதிய கடிதத்தில் அப்பணி நிறைவுற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். வேறு எப்பணியிலும் ஈடுபடாது ஓராண்டு இந்நூலைக் கற்றுக் கொள்ளும் குருக்கள் பாவ மன்னிப்புக் கூறுவதைப் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பேச்சு மொழியில் தேர்ச்சி பெற்று விடுவார்கள் என்றும் அதே கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், இந்நூல் அச்சாகவில்லை. போர்ச்சுக்கீசிய மொழியில் A Arte da Lingua Malabar என்ற தலைப்பிலான இந்நூலின் கையெழுத்துப் படியை 1954ஆம் ஆண்டில் தனிநாயக அடிகள் (1954 : 220) லிஸ்பன் தேசிய நூலகத்தில் கண்டறிந்தார். இப்பிரதி 1548இல் இக்னிஷியஸ் லயோலாவுக்கு அடிகளார் அனுப்பிய பிரதியா அல்லது வேறு பிரதியா என்பது தெரியவில்லை. பரதவர்களின் பேச்சு மொழிக்குப் போர்ச்சுக்கீசிய மொழியில்

எழுதப்பட்ட இவ்விலக்கண நூலானது முதன் முதலாகத் தமிழின் கிளை மொழி ஒன்றுக்கு எழுதப்பட்ட இலக்கண நூல் என்ற சிறப்பைப் பெறுகிறது. மிக்கேல் மாணிக்கம் என்ற சேசு சபைத் துறவி, அடிகளாரின் இந்நூல் குறித்து,

> 'கிறித்தவத் தமிழ் அல்லது பாதிரித் தமிழ் என்று பின்னர் அழைக்கப் பட்ட ஒரு கிளை மொழி பற்றிய தரவுகளை முதன் முதலில் தொகுத்து வழங்கியவர் ஹென்றிக்கஸ். ஹென்றிக்கஸின் இலக்கணத்தில்தான் ஒரு புதிய கிளைமொழியின் உருவாக்கத்தைக் காண்கிறோம். இந்தக் கிளைமொழியின் வரலாற்றை உள்ளடக்காமல் தமிழ் மொழி பற்றிய எந்த வரலாறும் முழுமை பெறாது.'

என்று மதிப்பிட்டுள்ளார் (Jeanne H. Hein, 1977 : 147). கத்தோலிக்கம் பரவிய 16ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தைப் புரிந்து கொள்ள இந்நூல் உதவுவது குறித்து,

> இது ஒரு வெளிநாட்டவர் தமிழ் பேசுவதற்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கண நூலாக இருந்தாலும் தென் இந்தியாவைக் குறித்த போர்ச்சுக்கீசியரின் பதிவுகளும் இவற்றில் இருப்பதால் இந்த நூல் வரலாற்றியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்களுக்கும் பயன்படும். விஜயநகரப் பேரரசு வலுவிழந்தமையால் அந்தப் பேரரசுக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் ஏற்பட்ட நிலையற்ற தன்மை, வளமான முத்துக்குளித்துறையின் உரிமைக்காக, இஸ்லாமியருக்கும் பரதவருக்கும் இடையே நிகழ்ந்து கொண்டிருந்த போட்டி ஆகியனவற்றை இந்நூல் விளக்குகிறது. மேலும் இந்தியாவுக்கும் தூர கிழக்குக்கும் உள்ள கடல் மற்றும் வாணிபப் பாதையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர கிறிஸ்தவ ஐரோப்பாவின் ஒரு பகுதியினருக்கும் இஸ்லாமியருக்கும் இடையே நடந்த போட்டியையும் விளக்குகிறது. ஹென்றிக்கஸின் இலக்கணம் இந்த சிக்கலான நிகழ்வுகளை பின்புலத்தில் கொண்டிருந்தாலும், மேற்கத்திய குருவானவர்களுக்கும் புதிதாகக் கிறிஸ்தவர்களான முத்துக்குளித்துறைப் பரவர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாறிக் கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

என்று ஜீன் ஹெச் ஹெயின் (1977 : 128) எழுதியுள்ளது குறிப்பிடத்

தக்கது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலைப் போர்ச்சுக்கீசிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட இருப்பதாகவும் ஹெயின் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அது வெளிவந்த விபரம் தெரியவில்லை.

பார்வைக்குக் கிட்டாத அடிகளாரின் நூல்கள்

பின்வரும் நூல்களைப் பற்றிய குறிப்புகள் அடிகளாரது கடிதங் களிலும் அவரது சமகாலத்தவரின் கடிதங்களிலும் காணப் படுகின்றன. அவை குறித்த விவரங்கள் வருமாறு: தாம் எழுதப் போகும் ஒரு நூலைக் குறித்து 1586இல் அச்சிட்டு வெளியிட்ட அடியார் வரலாறு என்ற நூலில், "கிரிசித்தியானி மாற்கத்திலுள்ள உண்மையும் நெறியும் மற்ற மாற்கங்களிலுள்ள பொய்களும் நெறிகேடுகளும் உலோகர் நன்றாய் அறிய வேணுமென்று ஒரு பொத்தகம் தம்பிரான் உதவிகொண்டு எழுதப் போறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 'Contra as Fabulas dos Gentios' (புற இனத்தாரின் பொய்யான நம்பிக்கைகளுக்கு எதிரான விவாதங்கள்) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. Criacao do mundo em lingua Malabar (மலபார் மொழியில் உலகின் படைப்பு), Vida de Christo nosso Senhor em lingua Malabar (மலபார் மொழியில் கிறித்துவின் வரலாறு) என்ற நூல்களையும் அவர் எழுதியுள்ளார். இவை தவிர Vocabulario da lingua Malabar என்ற தலைப்பில் தமிழ் - போர்ச்சுக்கீசிய அகராதி ஒன்றையும் உருவாக்கியுள்ளார். அவரது கொம்பேசீயானாயரு, அடியார் வரலாறு என்ற இரண்டு நூல்களைக் குறித்த செய்திகள் புன்னைக்காயல் அச்சகம் என்ற அடுத்த இயலில் குறிப்பிடப்படுவதால் இங்கு அவை குறிப்பிடப் படவில்லை.

6. புன்னைக்காயல் அச்சகம்

கிரீசித்தியானி வணக்கம், தம்பிரான் வணக்கம் என்ற இரு நூல்களை அடுத்துத் தமிழில் வெளியானது 'அடியார் வரலாறு' என்ற நூலாகும். மேற்கூறிய இரண்டு நூல்களும் தமிழின் தொடக்கக் கால அச்சு நூல்கள் என்ற பெருமைக்கு உரியன என்றாலும் அவை தமிழ்நாட்டு எல்லைக்கு வெளியே அச்சானவை. தமிழ்நாட்டிற்குள்ளேயே உருவான முதல் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட நூல் என்ற பெருமை அடியார் வரலாறு என்ற நூலுக்கே உரியது. இந்நூல் அச்சிடப்பட்ட அச்சகம் இன்றையத் தூத்துக்குடி மாவட்டத்தில் பொருநை ஆறு கடலோடு கலக்கும் இடத்திலுள்ள புன்னைக்காயல் என்ற சிற்றூரில் உருவானது.

புன்னைக்காயல்

காயல் என்பது கழிமுகப் பகுதியைக் குறிக்கும். பொருநை ஆறானது கடலில் கலக்கும்போது இரு பிரிவாகப் பிரிந்து கழிமுகத் திட்டு ஒன்றை உருவாக்கிவிட்டுக் கடலில் கலக்கிறது. கிழக்கிலுள்ள கடலை நோக்கிச் செல்லும் பொருநை ஆறு வடபுறமாகப் பிரிந்து செல்லும் பகுதி பழைய காயல் என்ற பெயரில் அமைந்த ஊராகும். தென்பகுதியில் பிரிந்து செல்லும் பொருநை ஆற்றின் கழிமுகப் பகுதியில் உள்ள ஊர் புன்னைக்காயல் ஆகும். இத்தாலியச் சுற்றுப் பயணி மார்க்கோபோலோ காயல் என்ற துறைமுகத்தைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். அவர் குறிப்பிடும் காயல் பழைய காயல் என்றும், அது தூர்ந்த பின் புதிதாக உருவான துறைமுகப் பகுதியே பின்னால் உருவான காயல் என்ற பொருளில் பின்னைக்காயல் என்று அழைக்கப்பட்டுப் பின்னர் புன்னைக்காயலென மருவிற்று என்ற கருத்து உண்டு. நாட்டார் சொற்பிறப்பியலாக உருவான இவ்விளக்கத்திற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. புன்னை மரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்த காயல் பகுதி புன்னைக்காயல்

என்று அழைக்கப்பெற்றது என்ற கருத்தும் உண்டு. 16வது நூற்றாண்டில் புன்னைக்காயல் ஒரு துறைமுகமாக விளங்கியுள்ளது (தற்போது மீன்பிடித்தல் மட்டுமே நிகழும் கடற்கரைச் சிற்றூராக உள்ளது).

சாலைப் போக்குவரத்து வளர்ச்சியுறாத அக்காலத்தில் தோணி, மற்றும் வள்ளத்தின் வாயிலாக நிகழும் நீர்வழிப் போக்குவரத்தே எளிதாக இருந்தமையாலும் ஓரளவிற்குக் கடலோரக் கிராமங்களுக்கு நடுவில் இருந்தமையாலும் போர்ச்சுக்கீசியர்களும் சேசு சபையினரும் தொடக்கக் காலத்தில் புன்னைக்காயலைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். இங்கு தங்கியிருந்த அண்ட்ரிக் அடிகளார் புன்னைக்காயலில் அச்சகம் ஒன்றை உருவாக்கினார். இவ்வச்சகத்திற்கு முத்துக்குளித்துறைப் பகுதியைச் சார்ந்த பரதவர்கள் நானூறு குருசேடாக்கள்* நிதி வழங்கியுள்ளார்கள்.

முதல் அச்சகம்

ஜாண் டி பாரியா என்ற சேசு சபைக்குரு கோவாவில் உருவாக்கிய தமிழ் உலோக அச்செழுத்துக்களை கி.பி. 1577ஆம் ஆண்டில் கோவாவிலிருந்து புன்னைக்காயலுக்குக் கொண்டுவந்தார். இதுகுறித்து Oriente Conquistado என்னும் நூலில் பிரான்சிஸ்கோ டி சூசா பின்வருமாறு கூறுகிறார்:

> சேசு சபையின் 1578ஆம் ஆண்டுக்கான வரலாற்றுக் குறிப்புகள் அனைத்திலும் நம் எண்ணத்தை மிகவும் கவர்வது சாமி ஜாண் டி பாரியா அவர்களின் அரிய முயற்சியினாலும், பொறி நுட்பத்தினாலும் முத்துக் குளித்துறையில் அவர் உருவாக்கியுள்ள முதல் தமிழ் அச்சகமாகும். அச்சுப் பிரசுரத்திற்கு ஏற்ற தமிழ் அச்சு எழுத்துக்களை உலோகத்தில் வார்த்து, புனிதர்களின் வரலாறு, பாவ

* கோவாவில் அச்சிடப்பட்ட போர்ச்சுக்கீசிய தங்க நாணயம். மெனேயல் என்றும் இது அழைக்கப்பட்டது. இந்நாணயத்தின் முன்புறத்தில் சிலுவையும், பின்புறத்தில் வானக் கோளங்கள் இயங்குவதைக் காட்டும் வகையில் மாதிரிக் கோளங்களும் அச்சடிக்கப் பட்டிருந்தன (பரமேஸ்வரி லால்குப்தா, 1978 : 227-28)

> சங்கீர்த்தனக் கையேடு, ஞானோபதேசம் இன்னும் சில அரிய நூல்களை அவர் அச்சிட்டுள்ளார் (வெனான்சியுஸ், 1978 : பக். 4)

புன்னைக்காயல் அச்சகம் குறித்த விரிவான செய்திகள் கிட்டாத சூழலில் 1936ஆம் ஆண்டில் தாம் எழுதிய கிறித்தவமும் தமிழும் என்ற நூலில், புன்னைக்காயல் அச்சகத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இங்கு அச்சிடப்பட்ட புத்தகங்கள் இன்னவென்று தெரியவில்லை. இவர் உண்டாக்கிய எழுத்து மர அச்செழுத்தாக இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது என மயிலை சீனி வேங்கடசாமி (2000 : 47) குறிப்பிட்டுள்ளார். ஆனால் உலோக எழுத்துக்களே புன்னைக்காயல் அச்சகத்தில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி அச்சான முதல் புத்தகம் கொம்பெசியொனாயரு என்ற பெயரில் அமைந்த 'பாவ சங்கீர்த்தனக் கையேடு' ஆகும்.

கொம்பெசியொனாயரு

தாம் செய்த பாவங்களை ஒத்துக் கொண்டு அதற்குப் பரிகாரம் தேடுவது கத்தோலிக்கர்களின் சமய வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறது. பாவங்களைத் தலையான பாவங்கள், சாவான பாவங்கள் என இரண்டாகப் பகுத்துள்ளனர். தான் செய்த பாவங்களை ஒரு கத்தோலிக்கர் இரண்டு வழிகளில் ஒத்துக் கொண்டு அதற்குப் பொறுத்தல் (பரிகாரம்) தேடலாம். ஒன்று, திருப்பலி பூசையின் போது வழிபடுபவர்கள் அனைவரும் தாம் செய்த பாவங்கள் என்ன என்று குறிப்பிடாது பொதுவாகக் கேட்பது. இது ஒரு வெளிப்படையான நிகழ்வாகும். மற்றொன்று, பாதிரியாரிடம் தாம் செய்த பாவங்கள் என்ன என்று குறிப்பிட்டு ஆண்டவரிடம் பொறுத்தல் கேட்பது. செய்த பாவங்களுக்கேற்ற பரிகாரங்களை மேற்கொள்ளப் பாதிரியார் வழிகாட்டுவார்.

எனவே ஒவ்வொரு கத்தோலிக்கரும் பாவங்கள், பாவ மன்னிப்பு தொடர்பாகச் செய்ய வேண்டிய செபங்கள் ஆகியன குறித்த அடிப்படை அறிவைப் பெற்றிருப்பது அவசியம். இதன் பொருட்டே இந்நூலை அடிகளார் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

Confessionairo என்ற போர்ச்சுக்கீசிய மொழிச் சொல்லின் ஒலி வடிவமாகவே இந்நூலின் தலைப்பு அமைந்துள்ளது. இந்நூலின் மேல் அட்டையின் தலைப்பில் போர்ச்சுக்கீசிய மொழிச் சொல்லும் அடிப்பகுதியில் அதன் தமிழ் ஒலி வடிவமும் இடம்பெற்றுள்ளன. நடுவில் யேசு சபையின் சின்னம் ஒரு வட்டத்திற்குள் இடம்பெற்றுள்ளது. 9 x 13.5 செ.மீ அளவுள்ள இந்நூல் 107 தாள்களைக் கொண்டது (Kesan, 1985:150-154).

1850 சனவரி 10-ஆம் நாள் கொச்சியிலிருந்து கஸ்பார் அல்வாரஸ் என்ற சேசுசபைத் துறவி, சேசுசபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் 'முத்துக்குளித்துறை வட்டாரத்தில் புன்னைக்காயல்தான் சேசுசபையின் தலைமை இல்லமாகும்: இங்கு பாவசங்கீர்த்தனக் கையேடு ஒன்று தமிழில் அச்சிடப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார் (வெனான்சியுஸ், 1978 : 5). ஆனால் இந்நூலின் ஒளிநகலைப் பார்வையிட்டதின் அடிப்படையில் 1880 மே 31-இல் கொச்சியில் இந்நூல் அச்சாகியுள்ளதாகக் கேசவன் (1985 : 9) குறிப்பிடுகிறார். கேசவன், வெனான்சியுஸ் ஆகிய இருவரும் தம் கூற்றுக்குச் சான்றுகளைக் காட்டும் நிலையில் இந்நூலின் முதல் பதிப்பு 1578-இல் புன்னைக்காயலிலும் இரண்டாவது பதிப்பு 1580-இல் கொச்சியிலும் அச்சாகியுள்ளது என்று கருதலாம்.

அடியார் வரலாறு (1586)

தமிழ்நாட்டு எல்லைக்குள் இரண்டாவது தமிழ் நூலாக அச்சிடப்பட்ட நூல் 'அடியார் வரலாறு' ஆகும். இது ஸ்பானிய மொழியில் கத்தோலிக்கப் புனிதர்களின் வரலாற்றைக் கூறும் 'Flos Sanctorum' என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும். ஆயினும் மூல நூலில் இருந்து விலகாமல் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பல்ல. தாம் பணியாற்றும் மறைத்தளத்தில் வாழும் பெரும்பான்மை யினரான பரதவர்களை மனத்தில் கொண்டு ஆங்காங்கே அவர்களுக்கு அறிவுரைகள் கூறும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. அண்ட்ரிக் அடிகளாரின் முந்தைய மூன்று படைப்புக்களையும் விட அதிகப் பக்கங்களைக் கொண்டது (669 பக்கங்கள்). "முத்துக்குளித்துறையில் வாழும் மலபார் கிறிஸ்தவ

மக்களுக்காக அச்சிடப்படுவதால் இந்நூல் முழுவதும் தமிழ் என்று சொல்லப்படும் மலபார் எழுத்துக்களில் அச்சாகியிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாற்பத்தொன்பது புனிதர்களின் வரலாறு இந்நூலில் இடம் பெற்றுள்ளது. அற்புதச் செயல்களை நிகழ்த்தியவர்கள், துறவறச். சபைகளை நிறுவியவர்கள் எனப் பல்வேறு வகைப்பட்ட புனிதர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளனர்.

அடியார் வரலாறும் விவிலியமும்

கிறித்தவச் சமயத்தின் அடிப்படை நூல் விவிலியம். இது ஒரு தனி நூலல்ல. 72 நூல்களின் தொகுப்பாகும். புத்தகங்கள் என்ற பொருளைத் தரும் Bibilia என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகவே பைபிள் என்ற சொல் உருவாகியுள்ளது. அடிகளார் பிபிலியா என்ற கிரேக்கச் சொல்லையே விவிலிய என்றழைக்கிறார் (இராச மாணிக்கம், 1967 : LX).

அடிகளார் காலத்தில் விவிலியம் முழுமையாக மொழி பெயர்க்கப்படவில்லை. ஆயினும் இந்நூலில் ஆங்காங்கே விவிலியத்தை மொழிபெயர்த்துள்ளார். பேதுரு, பவுல் ஆகியோர் வரலாற்றைக் கூறும்போது விவிலியத்தில் இடம்பெறும் 'அப்போஸ்தலர் நடபடிகள்' என்ற நூலைப் பயன்படுத்தியுள்ளார். யேசுவின் பாடுகளைக் குறித்து அவர் எழுதியுள்ள பகுதி விவிலியத்தின் மொழிபெயர்ப்பைப் போன்றே அமைந்துள்ளது. இப்பகுதியில் அவர் கொடுத்துள்ள பின்வரும் தலைப்புகளைப் பார்த்தாலே விவிலியத்தை விட்டு விலகாது இப்பகுதியை அவர் அமைத்துள்ளது புலனாகும்.

யேசு சிலுவையில் அறையுண்டதையும், மீண்டும் உயிர்த் தெழுந்து வந்ததையும் சில அத்தியாயங்களாக எழுதியுள்ளார். இந் நிகழ்வுகளின் சுருக்கத்தையே தலைப்புகளாகக் கொடுத்துள்ளார்.

> நம்முடைய நாயன் இசேசுக்கிரீசித்துத் தோட்டத்திலேயிருந்து,
> அவற்கு உதிரத் துள்ளிகளாக வேர்த்துவிட்டதும் வருமாறு

நம்முடைய நாயன் தோட்டத்திலே ஒதி விதனப்பட்டதினால் அவற்கு உதிரமாய் வேற்றுவிட்ட முகாந்திரமாக விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்துத் தோட்டத்திலே பிடிப்பட்டதும் பிடிப்பட்டபொழுது உண்டான வர்த்தமானங்களும் வருமாறு.

நம்முடைய நாயன் பிடிபட்ட முகாந்திரமாகவும், பிடிபட்டதிற்பின்பு உண்டான வர்த்தமானங்கள் முகாந்திரமாகவும் விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்துவை (அனாசு) முன்பே கூட்டிப் போனதும், அவரிடத்தில் அவரைக் கன்னத்தில் அடித்ததும், பின்பு அவரைக் (கயிப்பாசு) முன்பேயும் (பிலாத்துசு) முன்பேயும் (எரோதேசு) முன்பேயும் கூட்டிப் போனதும் அவரை அடித்ததும் வருமாறு.

நம்முடைய நாயனைக் கன்னத்திலே அடித்ததுக்கும், முகத்திலே துப்பினதுக்கும், வேறே அனேகஞ் சங்கையீனங்களை வருத்தி வித்ததுக்கும் விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயனைத் தூணிலே கட்டி அடித்ததுக்கு விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் தலையிலே முள்ளாலே முடி வைத்ததும் அவர் குருசு சுமந்து கொண்டு போனதும் வருமாறு.

நம்முடைய நாயன் தலையிலே முள்ளாலே முடி வைத்ததுக்கும் அவர் தம் அறையுண்ண என்றிருக்கிற குருசைச் சுமந்ததுக்கும் விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் இரண்டு கள்ளருக்கு நடுவே குருசிலே அறையுண்டதும், அவடத்தில் ஏழு வசனங்கள் சொன்னதும், குருசிலே துஞ்சினதும் வருமாறு.

நம்முடைய நாயன் குருசிலே அறையுண்டதுக்கும், அவர் சில வசனங்கள் சொன்னதுக்கும், சீவனில்லாத படைப்புக்கள் செய்ததுக்கும், நாம் நம்முடைய சரீரங்களிலுள்ள உறுப்புக்களினால் தோழ்சங்கள் செய்ததுக்கும் நம்முடைய நாயன் தம்முடைய

சரீரத்திலுள்ள உறுப்புக்களில் எங்கும் பாடுபட்டதுக்கும் விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் செத்ததிற்பின்பு அவரை நெரியத்தாலே விலாவிலே குத்தினதும், குருசைவிட்டு அவரை இறக்கினதும் குளியிலே அடக்கினதும் வருமாறு.

நம்முடைய நாயன் பாடுபட்டதுக்கு வேண்டிச் சு. மரியாள் விதனப்பட்ட முகாத்திரமாகவும், அவரைக் குளியிலே அடக்கவேணுமென்று குருசைவிட்டு இறக்கினபோது அவள் பேசின மொழிகள் முகாந்திரமாகவும் விசாரிக்கும் விசாரங்களாவது.

நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்துப் பெருக மோக்கிஷ்சத்தோடே உயிர்த்தது வருமாறு

நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்து வானங்களில் ஏறினது வருமாறு

(இசுப்பீரித்து + அப்போசுத்துலு) மார்பேரிலேயும் சீஷ்சர் பேரிலேயும் வந்தது வருமாறு.

இவ்வாறு யேசுவின் சிலுவைப்பாடுகளையும், அவர் விண்ணுலகம் சென்றதையும் இந்நூலில் அண்ட்ரிக் அடிகளார் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதிகள் பெரும்பாலும் விவிலியத்தைச் சார்ந்தே அமைந்துள்ளன. அதே நேரத்தில் மக்களுக்கு விளக்குவதற்காக இவராகச் சில விளக்கங்களையும் தந்துள்ளார். விவிலியத்தின் முதல் தமிழ் மொழிபெயர்ப்பாக மேற்கூறிய பகுதிகள் அமைந்துள்ளன. இந்த வகையில் விவிலியத்தின் முதல் தமிழ் மொழிபெயர்ப்பைத் தொடங்கி வைத்த பெருமை அண்ட்ரிக் அடிகளாரையே சாரும்.

அடியார் வரலாற்றில் இடம்பெறும் சமூக, வரலாற்றுச் செய்திகள்

இவ்வாறு முற்றிலும் ஒரு சமய நூலாக அமைந்த அடியார் வரலாறு இந்நூல் உருவான காலத்தியச் சமூக வரலாற்றுச் செய்திகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது. நூலின் முன்னுரையில், ‘புதிய கிறித்தவர்களுக்குப் பொருத்தமான இவற்றைப் பொறுக்கி

எடுத்தோம்' என்று குறிப்பிடும் ஆசிரியர் தாம் பணிபுரிந்த பரதவ மக்களை மனதில் கொண்டே இந்நூலை இயற்றியுள்ளார். கத்தோலிக்கர்களாக மதம் மாறிய பரதவர்கள் கிறித்தவப் பெயர்களை இடாமல் பழைய சமயப் பெயரிலேயே ஒருவரை ஒருவர் அழைத்து வந்துள்ளனர். ஏறத்தாழ அரை நூற்றாண்டிற்கும் மேலாகியும் இந்நிலை தொடர்ந்துள்ளது. 1586இல் வெளியான இந்நூலில், பழைய சமயப் பெயர்களை விட்டொழித்துக் கிறித்தவப் பெயர்களை இடும்படிப் பரதவர்களுக்குப் பின்வருமாறு அறிவுரை கூறுகிறார். கடற்கரைப் பேச்சு மொழியில் அமைந்த அப்பகுதி வருமாறு:

"கிரீசித்தியானி மாற்கத்திலே யாதொருத்தனைக் கிரீசித்தியானி மாற்கம் புகுதுவிக்கும் பொழுது பேரிடுவார்கள் என்று சொல்லியிருக்கிது. இது முகாந்திரமாக இந்தத் தேசத்திலுள்ள கிரீசித்தியானிகளைக் கயத்தவும் (கசக்க, கழற்ற) குற்றப்படுத்தவும் பெருக ஞாயமுண்டு. அதேதெனில் நம்முடைய நாயன் இசேசுக் கிரீசித்துப் பிறந்த 1533 பரமென்ற (பரவர் என்ற) சாதியில் உள்ளவர்கள் கிரீசித்தியானி மாற்கம் புகுந்துள்ளார்கள். கிரீசித்தியானி மாற்கம் புகுந்து இத்தனை வருஷசம் சென்றிருக்கச் செய்தேயும், மிக்க பேர்கள் எல்லாம் கிரீசித்தியானி மாற்கம் புகுந்த பேர் சொல்லாமல்ச் தமிள்ப்பேர் (அஞ்ஞானி) சொல்லிக் கூப்பிடுவார்கள். சிலர் இன்று முதலும் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிள்ப் பேர் இடுவார்கள். தமிளருக்கும் சூதருக்கும் சோனகருக்கும்* தங்கள் மார்க்கத்தின் படியே வெவ்வேறே பேரிடுவார்கள். கிரீசித்தியானி மாற்கம் புகுந்தவர்கள் தங்கள் மக்களுக்குத் தமிழ்ப் பேர் இடும் போதென்கிலும், தங்களைத் தமிள்ப் பேர் சொல்லிக் கூப்பிடப் பாத்திருக்கிறவர்கள் என்கிலும், தாங்கள் தமிளரொழிந்து கிரீசித்தியானிகள் அல்லவென்னறு நடபடிகளினாலே அறிவிக்கிறார்கள். கிரீசித்தியானிகளாய்க் கிரீசித்தியானிகள் முறையின்படியே பேர்கள் சொல்லிக் கூப்பிடுங்கோள். உங்கள் வாழ்வுகளிலே யித்தனை நாளாய்க் கிரீசித்தியானி மாற்கம் புகுந்த

---

* இஸ்லாமியருக்கும்

> பேர் பருமாறிச்சில்லை* என்கிலும் மேலைக்குப்** பருமாறத் தக்க கட்டளையிடுங்கோள். அப்படியே உங்களை யாதொருதர் தமிள்ப் பேர் சொல்லிக் கூப்பிட்டதே யுண்டானால் ஏன் என்ன வேண்டாம்.***

இவ்வாறு கிறித்தவப் பெயர்களை இட்டு அழைக்கும்படி அறிவுரை கூறும் அடிகளார் தேவாலயத்தில் ஆரவாரம் செய்யாமலும் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளாமலும் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். பிப்ரவரி மாதம் நிகழும் மாதாவின் திருவிழாவின்போது கிறித்தவர்கள் மெழுகுவர்த்திகளைப் பாதிரியார்களிடம் கொடுத்து மந்திரித்து வாங்குவர். பின்னர் எரியும் மெழுகுவர்த்திகளைக் கையில் பிடித்தவாறு ஊர்வலமாகச் செல்வர். இந்நிகழ்ச்சி மதம் மாறிய பரதவர்களுக்குப் புதியது. எனவே எந்தவித ஒழுங்கு முறையும் இல்லாமல் தேவாலயத்தில் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு இரைச்சலோடு மெழுகுவர்த்தியைப் பாதிரியாரிடம் கொடுத்து மந்திரித்து வாங்கியுள்ளார்கள்.

இதை ஒழுங்குபடுத்தும் வகையில் அண்ட்ரிக் அடிகளார் பின்வருமாறு அறிவுரை கூறுகிறார்.

> "இந்தப் பெருநாளையிலே ஓதின மெழுகுதிரிகள் இந்தத் தேசத்திலுள்ள கிரிசித்தியானிகள் வாங்கும் பொழுது உண்டான குளப்பமும் கெம்புகிற சத்தமும் அழவல்ல. அதினால் பாதிரிமார் பெருக நாணிப்பார்கள். வேறே இடங்களிலே இருந்தாலும் இப்படி கெம்புகிறதும் அமைச்சல் இல்லாமலிருக்கிறதும் மனுதருக்கடுத்தல்ல என்றால் (இகிரேசை)யிலே இப்படி செய்யும்பொழுது பெரும் பழுது புறத்துக்காறரும் அவர்கள் பெண்சாதிகளும் மெழுகுதிரிகள் வாங்கும்பொழுது அமைச்சலோடே வாங்கிற தொழிந்து கெம்பி வாங்கார்கள். புறத்துக் காறரைப் போலே அமைச்சலாம்படியே மெழுகுதிரி வாங்க உங்களுக்குப் புத்தி வருகிதில்லையே! கெம்பாமல் அமைச்சலோடே வாங்கத்தக்கதாகச் சில சில பேர்கள் கூடி அந்த

---

* வழங்கவில்லை

** இனிமேல்

*** ஏனென்று கேட்கவேண்டாம்

மெழுகுதிரிகள் ஒன்றாய்க் கட்டி யொருதன் பேராலே அதிலே ஒரு சீட்டெழுதி மெழுகுதிரிகள் வைக்கிற (மேசை) மேலே வைக்க வேணும். ஓதிக் கூடினால், ஒன்றில் அமைந்து உங்கள் மெழுகுதிரிகள் வாங்குங்கோள். ஒன்றில் நீங்கள் இருக்குந் தலங்களிலே இருக்க அந்த மெழுகுதிரிகள் உங்களுக்குத் தரப் பாதிரியார் கட்டளையிடுவார்.

இந்தப் பெரு நாளையிலே குழப்பமில்லாமல் அமைச்சலோடே மெழுகுதிரிகள் வாங்க வேணுமென்ற கட்டளை. இட்டிருக்குமாப் போலே தென்னனோலை ஓதின பெரு நாளையிலே பாதிரியார் ஓதின சாம்பல் கொண்டு நெத்திகளிலே குருசு வரையும் பொழுதுங் குழப்பமில்லாமலுங்கெம்பாமலும் அமைச்சலோடே இருக்க வேணும்.''

புதிய சமயத்தின் வழிபாட்டு முறைகளை இவ்வாறு கற்றுக் கொடுக்கும் அண்ட்ரிக் அடிகளார், அவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக வாழவேண்டும் என்பதிலும் அக்கறை காட்டுகிறார். தோணிகள் விபத்தில் சிக்கும் பொழுது உதவி செய்வதற்கு மாறாக அவற்றிலுள்ள பொருட்களைக் கொள்ளை யடிக்கும் செயலை மேற்கொள்ள வேண்டாமென்று அறிவுரை கூறுகிறார். மேலும் 'மறு பிறவி', ''புண்ணியத் தீர்த்த மாடல்' போன்ற முந்தைய சமய நம்பிக்கைகளைக் கைவிடும்படியும் அறிவுரை கூறுகிறார்.

வெகுசனக் கத்தோலிக்கம்

நிறுவனத் திருச்சபையின் வழிபாட்டு மரபுகள் ஒருபுறமிருக்க மற்றொரு பக்கம் வெகுசன வழிபாட்டு முறைகளுக்கும் கத்தோலிக்கத்தில் இடம் உண்டு. இதை 'வெகுசனக் கத்தோலிக்கம்' (Popular Catholicism) என்பர். வெகுசனக் கத்தோலிக்கத்தில் குருசுகளை (சிலுவைகளை) ஆங்காங்கே நிறுவி வழிபடுவதும் உண்டு. பரதவர்கள் தாங்கள் வாழும் கடற்கரைப் பகுதியில் ஆங்காங்கே குருசுகளை நட்டு வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை அடியார் வரலாறு எடுத்துரைக்கிறது. சான்றாகப் பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

> "கிரிசித்தியானி மாற்கம் புகுந்த பரவர் இருக்கும் சில ஊர்களிலே சில குருசுகள் நாட்டினதிற்பின்பு அந்த ஊராரும் அயலூர்களிலுள்ள கிரிசித்தியானிகளும் அந்தக் குருசுகளைத் தெரிசிக்கவும் அதுகளுக்கு நேற்றிக்கடன் குடுக்கவும் போனவர்கள் மெத்தவுண்டு. அதேதெனில், அந்தக் குருக்கள் (குருசுகள்) முகாந்திரமாகத் தம்பிரான் கிரிசித்தியானிகளுக்குப் பெருக உதவிச் செய்த படியினாலே இப்படி உலோகர் மெத்தச் சென்ற தொழிந்து மற்றப் படியல்ல. சலாபத்தில்க் (முத்துக் குளித்தல்) கிரிசித்தியானிகள் குருசுகள் உண்டாயிருக்கிற சில தலங்களில்ப் போய்த் தெரிசித்த தினாலே அவர்களுக்குத் தம்பிரான் செய்த சகாயங்கள் மெத்தவுண்டு."

வெகுசனக் கத்தோலிக்கத்தில் புனிதர்களுக்கு முக்கிய இடமுண்டு. எனவேதான் புனிதர்களின் வரலாற்றைக் கூறும் அடியார் வரலாற்றைப் பரதவர்களுக்காக அண்ட்ரிக் அடிகளார் அச்சிட்டுள்ளார். தமிழக நாட்டார் சமயத்தில் (Folk Religion) இடம்பெறும் பல்வேறு நாட்டார் தெய்வங்களுக்குத் தனித் தனியான ஆற்றல்கள் உண்டு என்பது இன்றளவும் நிலவும் நம்பிக்கை. சான்றாக, பேய்களை விரட்டும் ஆற்றல் உடைய தெய்வங்களாக இசக்கியம்மனும், சுடலை மாடனும் விளங்குகின்றனர். அம்மை நோயைத் தருபவளாகவும் போக்கு பவளாகவும் மாரியம்மன் விளங்குகிறாள். நிறுவனத் திருச்சபையில் ஒரே கடவுள்தான் உண்டு. மதம் மாறிய பரதவர்களுக்கு உளவியல் நிலையில் ஒரு இடைவெளியை இது ஏற்படுத்தியதால் அதை ஈடுசெய்யும் முறையில் புனிதர்கள் இடம் பெறுகின்றனர். அதே நேரத்தில் கத்தோலிக்க இறையியல் கோட்பாட்டின் அடிப்படையில் புனிதர்கள், வணக்கத்திற்கு உரியவர்கள் அல்லர். அவர்கள் வாயிலாக இறைவனிடம் வேண்டிக் கொள்ளத்தான் முடியும். இதை ஏற்கனவே 'கிரீசித்தியானி வணக்கம்' நூலில் அடிகளார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (பக். 23-24) 'சுத்தமானவர்கள்' என்ற பெயரால் புனிதர்களைக் குறிப்பிடும் அடிகளார் தமிழக நாட்டார் தெய்வங்களைப் போல் அவர்கள் வழிபாட்டுக்குரியவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை

என்பதையும் போப்பாண்டவரினால் புனிதர்கள் என்று ஏற்றுக் கொண்ட பிறகுதான் அவர்கள் புனிதர்கள் என்ற வரிசையில் இடம்பெறுகிறார்கள் என்பதையும் உணர்த்துகிறார்:

> முறையில்லையென்று சொல்லி, அவனைச் சுத்தமானவன் ஆம்படியே எல்லாக் கிரிசித்தியானிகளும் வணங்க வேணுமென்று சு* (பாப்ப) கட்டழையிடும்பொழுது, அதைக் (கனொனிசாரிக்கிற) தென்று சொல்லப்படும்.

மேலும், ஒவ்வொரு புனிதரிடமும் என்ன நோக்கம் ஈடேற வேண்டுதல் செய்ய வேண்டும் என்பதையும் ஒவ்வொரு அடியாரின் வரலாற்றின் இறுதியில் குறிப்பிடுகிறார். சான்றாக, சில வருமாறு:

> கொள்ளை நோய் உண்டாயிருக்கும் போதெல்லாம் சு. (செவ சித்தியம்)** தம்பிரானோடே இரந்து கொண்டு அதை யல்லவாக்கத் தக்கதாகக் கிரிசித்தியானிகள் அவரைப் பெருக இட்டமாழுவார்கள் அவருந் தம்பிரானோடே யிரந்துகொண்டு அனேக முறை அவர்களுக்குத் தம்பிரான் உதவி செய்ததுண்டு.

◆ ◆ ◆

> கிரிசித்தியானிகள் தாங்கள் போட்டுவிட்ட வசுத்துக்கள் மீளக் காணவேணுமென்று விசேஷசமாகச் சு. அந்தோனியை இட்டமாழுவார்கள். சு. அந்தோனி*** தம்பிரானோடே இரந்தது கொண்டு போய்விட்ட வசுத்துக்கள் மீள உடையவர்களுக்குக் கிடக்கையினால், இப்படியே கிரிசித்தியானிகள் அவரை இட்டமாழுவார்கள். நாமும் நம்முடைய வசுத்துக்கள் போய்விடும் பொழுது அந்த வசுத்துக்கள் காணவேணுமென்று அவரை இட்டமாழுகிறது நல்லது. ஆகிலும் நம்முடைய ஆற்புமங்களுக்கு வேண்டி அவரை இட்டமாழுகிறது ஏற நல்லது.

◆ ◆ ◆

---

* சுத்தமானவர் என்ற சொல்லின் குறுக்கமாகவே 'சு' என்ற சொல்லை நூலில் பல இடங்களில் அடிகளார் பயன்படுத்துகிறார்.

** புனித செபஸ்தியார்

*** புனித அந்தோணியார்

கிரிசித்தியானிகள் தங்களுக்குக் கண்நோக்கோடு வந்த நேரங்களிலே அந்த நோக்கோடு அமரத்தக்கதாகச் சு. (உலுசியாள்)* தம்பிரானோடே இரந்துகொள்ள வேணுமென்று அவளை இட்டமாழுவார்கள். அப்படியே அவளை யிட்டமாழ்ந்தால், அனேக முறை கண்ணோக்காடுகள் அமரும். நாம் இப்படிக் கொத்த நோக்காடுகள் வந்த நேரங்களிலே, அவளை யிட்டமாழுகிறது நல்லது.

பரதவரின் மனவருத்தம்

கத்தோலிக்கர்களாக மதம் மாறிய பரதவர்கள் தாங்கள் மதம் மாறியது குறித்து வருந்தியதாக 'அடியார் வரலாறு' நூலில் குறிப்பிடும் அண்ட்ரிக் அடிகளார் அவர்கள் மதம் மாறுவதற்கு முன்னர் இருந்த நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி அவர்களைக் கண்டிக்கிறார்.

"பரவருஞ் சோனகரும் தூற்றுக் குடியில்ப் படை பொருதவிடத்தில்ச் சோனகர் படை கெட்டுப் போனதினாலே அவர்கள் வயிராக்கியத் தினாலே (பகை) பரம் (பரவர்) என்ற சாதியைக் கொன்று அறமாற (பறித்துக் கொள்ள) வேணுமென்ற இராசாக்களுக்குக் கைக்கூலி குடுத்து அனேகம் பிறபுத்தி செய்தார்கள். அந்தக் காலத்திலே பரவருடைய சம்பான் (வள்ளம்) தோணி, நிலமை (மீன்பிடி உடைமை) உற்பத்திகளில் மிக்கதெல்லாம் பறிபோச்சு. அப்படியே அகத்திலே யிருக்க இடமில்லாதே போச்சு. அவர்கள் பட்ட பாடுகள் நன்றாய் நினைக்கும் பொழுது அழத்தக்க இடமொழிந்து மற்றப்படியல்ல. என்றால் அவர்கள் கிரிசித்தியானி மாற்கம் புகுந்ததிற் பிறகு, சுகத்திலே இருக்கவும், முன்னிலும் பாற்கச் சங்கையோடேயிருக்கவும் (பெருமைக்குரிய) முதலாளிகளாகவும் இடமுண்டாச்சு. இப்படி உண்டாயிருக்கச் செய்தேயும், சில பரவர் கிரிசித்தியானி மாற்கம் புகுந்ததுக்கு வேண்டி விதனம் காட்டி 'ஏன்னத்துக்கு இந்த மாற்கம் புகுந்தோம்?' என்று சொல்லுவார்கள். செய்த நன்றியறியாமல் இருக்கிறது பாரமான தோழ்சம்."

* புனித லூசியாள்

மனவருத்தத்திற்கான காரணம்

பரதவர்கள் இவ்வாறு வருந்தியமைக்குக் காரணம் போர்ச்சுக் கீசியர்களால் அவர்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல்தான். முத்துக்குளிக்கும் பரதவர்கள் தாங்கள் எடுத்த முத்தில் பத்தில் ஒரு பங்கைப் பாண்டிய மன்னனுக்கு வரியாகச் செலுத்திவிட்டு எஞ்சிய ஒன்பது பங்கைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர். இச்செய்தியை மார்க்கோபோலோ குறிப்பிடுகிறார் (நீலகண்ட சாஸ்திரி, 1972: 163). ஆனால் போர்ச்சுக்கீசியர்கள் முத்துக்குளித்துறையில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பின்னர் இந்நிலைமை மாறியது. எடுத்த முத்தை நான்கு பங்குகளாகப் பிரித்தனர். அவற்றுள் ஒரு பங்கு போர்ச்சுக்கீசிய மன்னனுக்குக் கப்பமாகச் சென்றது. அரேபிய மூர்களின் தாக்குதல்களிலிருந்து முத்துக்குளிப்பின்போது பாதுகாப்புக் கொடுப்பதற்காகத் தூத்துக்குடி நகரிலிருந்த போர்ச்சுக்கீசிய கேப்டனுக்கு ஒரு பங்கு சென்றது. பரதவர்களின் ஆன்ம நலனைக் கவனித்துக் கொள்ளும் சேசுசபைக் குருக்களுக்கு ஒரு பங்கு சென்றது. எஞ்சிய ஒரு பங்கைத்தான் பரதவர்கள் தங்களுக்குள் பிரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாகத்தான் ‘என்னத்துக்கு இந்த மாற்கம் புகுந்தோம்?’ என்று வருந்தியுள்ளார்கள்.

சில அறிவுரைகள்

பரதவர்களின் பாரம்பரியப் பழக்கவழக்கங்களை கைவிடும்படி இந்நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார். இறந்த வீட்டில் ஒப்பாரி பாடி அழுவது தமிழ்நாட்டின் பாரம்பரிய வழக்கம். இதிலிருந்து விடுபடும்படி பின்வருமாறு அறிவுரை கூறுகிறார்:

> யாதொருவர் செத்ததுக்காக ஒப்பாரி சொல்லி அழுகிற பெண்சாதிகள், ஒப்பாரி சொல்லியழுகிற நேரங்களில்ச் செத்தவர்களுக்கு வேண்டி அனேக முறை (கிரீயே லேசோமும் ஆவே மரிய)வும் ஓதித் தம்பிரானோடேயிரந்து கொள்ளுகிறது தம்பிரானுக்கு ஏற்ற கருமமாயிருக்கும். செத்தவர்களுடைய ஆற்புமங்களுக்கும் உதவும்.

> செத்தவர்கள் கருமம் பேசி வாறோமே யாது முகாந்திரமாக ஒரு புத்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது; சில பெண் சாதிகள் தங்கள் புருழ்ரென்கிலும்* பெற்றார் பிறந்தாரென்கிறுஞ் செத்தால் விதனப்பட்டிருக்கிறது அழவல்ல.

சமய மாற்றம் அதிலும் இறுக்கமான நிறுவனச் சமயம் பாரம்பரிய அடையாளங்களை அழித்துவிட்டு சமய அடையாளங்களை வழங்கும் என்பதற்கு அடிகளாரின் இக்கூற்று சான்றாகும்.

வளம் மிகுந்த பரதவர்கள் தம்மிடம் பணிபுரிவோர்களிடமும் வாணிபம் செய்யும்போதும் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் அறிவுரை கூறுகிறார்:

> சம்பான் ஓட்டிகளாயிருக்கிறவர்கள்** குளியாட்கள் வசத்திலே வளதொடை ஈந்தது பதிந்தது என்கினும் முத்தென்கினும் வேறே யாதொன்றென்கினும் வாங்கும்பொழுது ஞாயத்தின்படியே வாங்கவேணுமொழிந்து ஞாயக்கேடாக வாங்க வேண்டாம். அப்படியே கல்ஒழிக்க வேணுமென்று பொய்ச்சத்தியம் செய்ய வேண்டாம். இப்படி பொய்ச்சத்தியஞ் செய்கிறது சாவான தோழ்சத்துக்கு ஏதுவாகிறதன்றியே ஒழித்த குளியாட்கள் பேரிலேயுள்ள பணம் சம்பானோட்டிகள் வாங்கினாலும் வாங்கா திருக்கிலும் சம்பானோட்டிகள் தான் உத்தரிக்க வேணும். குளியாட்களும் சம்பானோட்டிகளுக்கு மண்டகக்கற்கு நாத்தின் படியே*** குடுக்கத்தக்கதெல்லாம் குடுக்க வேணும்.

திருநீற்றுப் புதனன்று மந்திரித்த சாம்பலைக் கிறிஸ்தவர்களின் நெற்றியில் சிலுவை அடையாளமாகப் பாதிரியார் வரைவார். புதிதாக மதம் மாறிய பரதவர்கள் தங்களின் பண்டைய வழக்கமான திருநீறு பூசுதல் வழக்கத்திற்கு இணையாக இதை நினைத்து விடக் கூடாது என்று எச்சரித்து இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுவது வருமாறு:

---

* புருஷரென்கிலும்

** வள்ளங்களின் உரிமையாளர்கள்

*** ஞாயத்தின்படியே

> நல்ல கிரிசித்தியானிகள் தங்கள் நெத்திகளிலே ஓதின சாம்பல் இடுவித்துக் கொள்ளுகிற நினைவோடே எல்லோரும் இடுவிக்க வேணுமொழிந்து, எருச்சுட்ட சாம்பலைத் தமிழர் தங்கள் நெத்திகளிலே பூசுகிற நினைவின்படியே இடுவிக்க வேண்டாம். கிரிசித்தியானி மாற்க்கத்திலுள்ள வர்த்தமானங்களும் தமிழ் மாற்கத்திலுள்ள வர்த்தமானங்களும் பலமுறை பாதிரிமார் உங்களுக்கு அறிவித்ததினாலே கிரிசித்தியானி மாற்கத்திலுள்ள உண்மையும், நெறிநாயமும் தமிழ் மாற்கத்திலுள்ள பொய்களும், ஞாயக்கேடுகளும் நீங்கள் அறியத்தக்கதாகக் காலமாச்சு.

இந்நூலின் இன்றைய பயன்பாடு

இன்றையத் தமிழ்க் கத்தோலிக்கர்களின் சமய வாழ்வில் 'அடியார் வரலாறு' நூலுக்கு எவ்விதப் பயன்பாடும் இல்லை. ஆயினும் 'மொழியியல்', 'சமூக வரலாறு' என்ற இரண்டு அறிவியல் துறையினருக்கும் பயன்படத்தக்க பல அரிய செய்திகளை இந்நூல் தன்னுள் கொண்டுள்ளது. சமயக் கருத்துக்களையும் அச் சமயத்தைப் பின்பற்றும் மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை குறித்த அறிவுரைகளையும் இணைத்துக் கடற்கரைப் பரதவர்களின் பேச்சுத் தமிழில் உருவான இந்நூல் தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது. இதனால் சமய எல்லையைத் தாண்டி இந்நூலுக்கு ஒரு தனியிடம் தமிழ் இலக்கிய வரலாற்றில் உண்டு.

> அடியார் வரலாறு ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். அது ஒரு மொழிபெயர்ப்பு நூலாகவே தெரியவில்லை. போர்ச்சுக்கீசியச் சொற்கள் அதிகமாக இருப்பது மாத்திரமே அது ஒரு மொழிபெயர்ப்பு என்பதை நினைவூட்டுகிறது.
>
> இந்தவகை வசனநடை இலக்கியத்துக்கு அவருக்கு முன்னு தாரணங்கள் ஏதும் இல்லையென்பதைப் பார்க்கிறபோது, அவரது முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

என்று சரோஜினி பாக்கியமுத்து (1990:34) மதிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாட்காட்டிச் சீர்திருத்தம்

அடியார் வரலாற்று நூலின் இறுதியில் அண்டிரிக் அடிகளார் மேற்கொண்ட நாட்காட்டிச் சீர்திருத்தம் இடம் பெற்றுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த குருக்களுக்குத் தமிழ் நாட்காட்டி தெரியாது. அதுபோன்றே புதிதாகக் கத்தோலிக்க மறையைத் தழுவியப் பரதவர்களுக்கு ஐரோப்பிய நாட்காட்டி தெரியாது. இதனால் கத்தோலிக்கச் சமயம் சார்ந்த விழாக்களைக் கொண்டாடுவதில் இவ்விரு பிரிவனருக்கும் இடையே குழப்பம் ஏற்பட்டது. இதைத் தீர்க்கும் வகையில் அடிகளார் நாட்காட்டிச் சீர்திருத்தம் ஒன்றை உருவாக்கினார். இதன்படி தைத்திங்கள் ஆண்டின் முதல் மாதமாகி, சனவரி மாதத்திற்கு இணையாக்கப் பட்டது. சனவரி ஒன்றும், தை ஒன்றும் ஒன்றாக ஆக்கப்பட்டன. மாசி மாதம் பிப்ரவரிக்கு இணையாக்கப்பட்டு 28 நாட்களைக் கொண்டதாகியது. பிப்ரவரியைப் போன்றே நான்கு ஆண்டு களுக்கு ஒருமுறை இருபத்தொன்பது நாட்களைப் பெற்றது. மேற்கூறிய வரிசை முறையில் மார்கழி இறுதி மாதமாகியது. கிறித்தவர்கள் "கொண்டாடத்தக்க பெருநாட்களும், நோற்கத்தக்க நோன்புகளும்" என்ற தலைப்பில் தை மாதம் தொடங்கி மார்கழி மாதம் முடிய வரும் பெரு நாட்களும், நோன்புகளும் அண்டிரிக் அடிகளார் உருவாக்கிய நாட்காட்டியின் படியே குறிப்பிடப் பட்டுள்ளன. இதன்படி மார்கழி மாதத்தில், கிறிஸ்துமஸ் விழா மார்கழி 25ஆம் நாள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. "உருஉ நம்முடைய நாயன் இசேசுக் கிரிசித்துப் பிறந்த பெருநாள்" என்று அண்டிரிக் அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

அண்ட்ரிக் அடிகளார் மறைவுக்குப் பின்னரும் அவரது நாட்காட்டிச் சீர்திருத்தம் தமிழ்நாட்டில் கத்தோலிக்க மக்களிடையே நிலைபெற்றிருந்துள்ளது.

> "மார்கழி மாசம் இருபத்தஞ் சாந்தேதி
> மாதா மரியம்மாள் பெற்றெடுத்த
> நீதிசேசு நம்மை நேர்வழி நடத்தப்
> பாதிராத் திரியிலே பிறந்தாரடி"

என்ற நாட்டார் பாடல் இதற்குச் சான்றாகும். வீரமாமுனிவர் தமது 'தேம்பாவணி' காப்பியத்தில் யேசுவின் பிறப்பைக் குறிப்பிடும் போது **'மாதம்' மார்கழி வைகல் ஐயைந்தாய்** என்றே குறிப்பிடுகிறார். தற்போதும் அண்டிரிக் அடிகளார் பணிபுரிந்த பரதவ மக்களின் பேச்சு வழக்கில் அடிகளாரின் நாட்காட்டிச் சீர்திருத்தம் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக ஆகஸ்ட் ஐந்தாம் நாள் நிகழும் தூத்துக்குடி பனிமயமாதா திருநாளை 'ஆவணி ஐந்து திருநாள்' என்று குறிப்பிடும் வழக்கம் பரதகுல முதியவர்களிடம் இன்றும் உள்ளது (உண்மையில் ஆகஸ்ட் நடுவில் தான் ஆவணி மாதம் பிறக்கிறது). யாழ்ப்பாணக் கடற்கரைப் பகுதிகளிலும் இவ்வழக்கு உள்ளதாகத் தெரிகிறது. அண்டிரிக் அடிகளார் மறைவுக்குப் பின்னர் இந்நாட்காட்டி முறை அதிகாரப் பூர்வமாக வழக்கில் இருந்ததற்கு மற்றொரு சான்றும் உள்ளது. பரதவர்களின் சாதித் தலைவரான கபிரியேல்-டி-வாஸ் என்பவர் 1808ஆம் ஆண்டு காலமானார். இவரது கல்லறைக் கல்வெட்டின் மேற்பகுதி போர்ச்சுக்கீசிய மொழியிலும், கீழ்ப்பகுதி தமிழ் மொழியிலும் அமைந்துள்ளது. கல்வெட்டின் மேற்பகுதியில் உள்ள போர்ச்சுக்கீசிய மொழிப் பகுதியில் இவர் காலமான மாதம் ஜனவரி என்றும், இறந்த நாள் 21 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதியில் தை மாதம் 21ம் நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அடிகளாரின் நாட்காட்டிச் சீர்திருத்தத்தின்படியே தமிழ்ப் பகுதி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே 19ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் அடிகளாரின் நாட்காட்டி வழக்கிலிருந்துள்ளமை தெரிய வருகிறது.

7. அடிகளார் பயன்படுத்திய சில சொற்கள்

தமது நூல்களில் போர்ச்சுக்கீசிய மொழிச் சொற்களையும் முத்துக் குளித்துறைப் பகுதியில் வாழ்ந்த பரதவர்களின் பேச்சுவழக்குச் சொற்களையும் அடிகளார் பயன்படுத்தியுள்ளார். சில சொற்களை அவரே உருவாக்கியும் உள்ளார். அவற்றுள் சில சொற்களைக் குறித்த செய்திகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

அப்பம்

கிறித்தவர்களின் சமய வாழ்வில் இடம்பெறும் ஒரு முக்கியச் சொல் அப்பம். யேசு நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்று, ஐந்து அப்பங் களையும் மீனையும் பலுகிப் பெருகச் செய்தது. 'திவ்ய நற்கருணை' என்ற சடங்கில் யேசுவின் உடலாக அப்பம் இடம்பெறுகிறது. அன்றாடம் செபிக்கும் செபத்தில் "அன்றன்றைக்கு உள்ள அப்பத்தை அன்றன்று எங்களுக்குத் தாரும்" என்ற வரிகள் இடம் பெறுகின்றன. அப்பம் என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் Bread ஆகும். இங்கு ரொட்டி என்பது பொதுவாக உணவைத்தான் குறிக்கிறதே ஒழிய, ரொட்டி என்ற ஒரு குறிப்பிட்ட உணவு வகையை அல்ல. தமிழர்களுக்கு ரொட்டி அறிமுகமாகாத காலத்தில் அண்ட்ரிக் அடிகளார் ரொட்டி என்ற சொல்லுக்கு ஈடாக அப்பம் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். அவருடைய தம்பிரான் வணக்கம் நூலில் **"அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தா"** என்று மொழி பெயர்த்துள்ளார். அதே நேரத்தில் நற்கருணைச் சடங்கில் பயன்படும் அப்பத்தைக் குறிக்க "கோதும்பு அப்பம்" என்ற சொல்லை அடியார் வரலாறு நூலில் பயன்படுத்தியுள்ளார். அப்பம் என்ற சொல் பரவலாகத் தமிழ்நாட்டில் அறிமுகமாகி யிருந்துள்ளது. பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுக்களிலும் விஜயநகர கால கல்வெட்டுக் களிலும் 'அப்பப்பெருந் திருவமுது,

அப்பமுது' என்ற பேர்களில் அப்பம் இடம்பெற்றுள்ளதை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். தற்போது அப்பம் என்ற சொல்லுக்கு மாற்றாக உணவு என்ற சொல்லையே பயன்படுத்து கிறார்கள்.*

அலைவாய்க்கரை

கடற்கரையைக் குறிக்கும் சொல்லாக அலைவாய்க்கரை என்ற சொல்லை அடிகளார் பயன்படுத்துகிறார். சில நேரங்களில் பெசிக்கரை என்ற போர்ச்சுக்கீசிய சொல்லையும் பயன் படுத்துகிறார். கடற்கரையில் உள்ள திருச்செந்தூரை அலைவாய் என்ற சொல்லால் அகநானூறும் (266), திருமுருகாற்றுப்படையும் (125) குறிப்பிடுகின்றன. இன்றும் கூட நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையில் வாழும் பரதவர்கள் அலைவாய்க்கரை என்ற சொல்லை 'அலாக்கரை', 'அலவாக்கரை' என்று பேச்சு மொழியில் பயன்படுத்துகின்றனர். அடிகளார் காலத்துக்குப் பின் 7-1-1730ஆம் ஆண்டு சேதுபதி செப்பேடு ஒன்றில் அலைவாய்க்கரை என்ற சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது (இராசு, 1994 : 316).

குருசு

குருசு என்ற சொல் சிலுவையைக் குறிக்கும் Cruz என்ற போர்ச்சுக்கீசியச் சொல்லின் ஒலி மொழிபெயர்ப்பாகும். சிலர் கருதுவது போல் Cross என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபல்ல. இம்மொழிபெயர்ப்பின் செல்வாக்கு இன்றும் முத்துக்குளித்துறைக் கடற்கரைப் பகுதிகளில் உள்ளது. குரூஸ் அந்தோணி, குரூஸ் மரியான் என்ற பெயர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. பீடமொன்று அமைத்து அதன்மீது சிலுவையை நட்டு உருவாக்கும் வழிபாட்டுத் தலத்தை 'குருசடி' என்றே அழைக்கின்றனர். முதுகில் சிலுவை அடையாளத்துடன் கூடிய நண்டு ஒன்றை Cruzifera என்று விலங்கியலார் குறிப்பர். பரதவர்கள் இதைக் 'குருசு நண்டு' என்றே அழைக்கின்றனர்.

---

* 'எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்.'

சிந்தாத்திரை

நல்ல கடற்பயணம் என்ற பொருளைத் தரும் சிந்தா யாத்திரை என்ற சொல்லை சிந்தாத்திரை என்று அடிகளார் பயன்படுத்தியுள்ளார். இதே பொருளில் 'பாயி விரித்து ஓடித் திரிந்து சிந்தா யாத்திரையாய் இந்தக் கரையாகிய சென்னபட்டணம், நாகூர், நாகப்பட்டணம் என்ற துறைகளில் ஓடி வந்தபின்' என்று 1838, ஜூன் 26 நாளிட்ட தஞ்சை மராத்தி மோடி ஆவணம் குறிப்பிடுகிறது (பாலசுப்ரமணியம், 1989:6,7). இன்றும் தூத்துக்குடி நகரில் கடலோடிகள் வணங்கும் மாதாவுக்குச் 'சிந்தாத்திரை மாதா' என்ற பெயர் வழக்கிலுள்ளது. இம்மாதா தன் கைகளில் கப்பல் ஒன்றை ஏந்திய வண்ணமாகக் காட்சியளிக்கிறாள். பரதவர்களின் அம்பாப் பாடல்களிலும் 'சிந்தாமகள் உறுதியுண்டு' என்ற சொல் இடம்பெறுகிறது.

சோனகர்

அராபியர்களைக் குறிக்கச் சோனகர் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். 'தமிழ்நாட்டில் இஸ்லாம்' என்ற தலைப்பிலான இரண்டாவது அத்தியாயத்தில் அராபியர்களைக் குறிக்கச் சோனகர் என்ற சொல் வழக்கிலிருந்ததைக் கண்டோம். அடிகளார் காலத்திலும் இவ்வழக்கு தொடர்ந்துள்ளது.

தம்பிரான்

தம்பிரான் என்ற சொல் பொதுவாகச் சைவ மடத்துத் துறவியைக் குறிக்கும். கடவுளென்ற பொருளும் இச்சொல்லுக்கு உண்டு. திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்) வேதாராணியீஸ்வரர் கோவிலில் இடம்பெற்றுள்ள கி.பி. 1465ஆம் ஆண்டு கல்வெட்டில் அங்குள்ள இறைவன் 'திருமறைக் காடுடைய தம்பிரானார்' என்று குறிப்பிடப்படுகிறார் (S.I.I. Vol. XVII, கல்வெட்டு எண் 531:3). சேலம் மாவட்டம் திருச்செங்கோடு, பிரம்மபுரி யீஸ்வரமுடையார் கோயிலில் இடம்பெற்றுள்ள 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (1530, 1538) இரு கல்வெட்டுக்களிலும் 'பிரம்மபுரி யீசுவரர் தம்பிரானார்' என்று

இக்கோயிலின் இறைவன் குறிப்பிடப்படுகிறார் (கிருட்டிணன்,2001: 106-109). அரச குடும்பத்தினரையும் பெரும் நிலக்கிழார்களையும் குறிக்கும் சொல்லாகத் 'தம்பிரான்' என்ற சொல் மலையாளத்தில் இடம்பெறுகிறது. இதன் பெண்பாற் சொல்லாகத் தம்புராட்டி என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. விசயநகர மன்னர் கிருட்டிண தேவராயரை 'இராசாக்கள் தம்பிரான்' என்ற பட்டப் பெயரில் மேற்கூறிய திருச்செங்கோடு கல்வெட்டு குறிப்பிடுகிறது (மேலது 106). கடவுள் என்ற பொருளிலேயே தம்பிரான் என்ற சொல்லை அடிகளார் தமது நூல்களில் பயன்படுத்தியுள்ளார்.

அடிகளருக்குப் பின் 17ஆம் நூற்றாண்டில் தத்துவ போதகர் (டி. நோபிலி) என்ற சேசு சபைத் துறவி, தம்பிரான் என்ற சொல்லை நீக்கிவிட்டு **சர்வேஸ்வரன்** என்ற சொல்லைப் பயன்படுத்தினார். சீகன் பால்க் என்ற சீர்திருத்தக் கிறித்தவச் சபைத் துறவியும் சர்வேஸ்வரன் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பப்ரிஷியஸ் என்ற சீர்திருத்தக் கிறிஸ்தவ சபைக் குரு **பராபரன்** என்ற சொல்லைப் பயன்படுத்தினார். 19ஆம் நூற்றாண்டில் இம்மூன்று சொற்களுக்கும் மாற்றாகத் **தேவன்** என்ற சொல்லைச் சீர்திருத்தக் கிறித்தவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர் (சரோஜினி பாக்கியமுத்து, 1990 : 179).

தமிழர் – தமிழ் மார்க்கம்

கிறித்தவர் அல்லாதவர்களைக் குறிக்க Pagans, Gentile என்ற ஆங்கிலச் சொற்களைக் கிறித்தவத் திருச்சபை முன்னர் பரவலாகப் பயன்படுத்தி வந்தது. தற்போது பெரும்பாலும் இதைத் தவிர்த்து, கிறித்தவர் அல்லாதவர் என்ற பொருள் தரும் Non Christians என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். ஏனெனில் Pagan என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஞானமற்றவன் என்பது பொருள். அஞ்ஞானி என்ற சொல் சிறிதுகாலம் வழக்கிலிருந்து அதுவும் கைவிடப்பட்டது (பெந்தேகோஸ்தே பிரிவினர் மட்டும் தெரு முனைக் கூட்டங்களில் அஞ்ஞானி என்ற சொல்லை இன்று பயன்படுத்துகின்றனர்!). அஞ்ஞானி என்ற சொல் பண்பாடற்ற சொல் என்று கருதியதால் புறச் சமயத்தினர், புற இனத்தார் என்ற

சொற்களைக் கத்தோலிக்கம் பயன்படுத்துகிறது. கிறித்தவர் அல்லாதவர்களை வேறுபடுத்திச் சுட்டும் பழக்கம் விவிலியத்திலேயே இடம் பெற்றுள்ளது.

புறஇனத்தார் என்ற சொல்லுக்கு இணையாகத் தமிழர் என்ற சொல்லையும் சைவ வைணவச் சமயங்களைக் குறிக்கத் தமிழர் மார்க்கம் என்ற சொல்லையும் அடிகளார் பயன்படுத்துகிறார்.

புறச் சமயத்தினர் என்ற பரந்த பொருளில் தமிழர் என்ற சொல்லை அவர் பயன்படுத்துவதற்குச் சான்றாக, சில பகுதிகளைக் குறிப்பிடலாம். செபஸ்தியார் வரலாற்றைக் கூறும் பகுதியில் அவர் தமிழர் என்ற சொல்லைப் பயன்படுத்துவது வருமாறு.

> அந்தக் காலத்திலே இரட்டைப் பிள்ளைகளாய் உடன் பிறந்த (மார்க்கு)வும், (மரிசிலியானு)வுங், கிரீசித்தியானி மாறகத்தை விச்சுவதிக்கிறதுக்காக வேண்டி, அவர்களைத் தமிளர் பிடித்துச் சிறையிலே போட்டார்கள். அவர்களுக்குச் சு(செவசித்தியம்) யிந்தப் பூமியில் அழிந்துபோற பிரசங்களை நிந்திக்கவும் நீளியாத ஆச்சினைகளுக்குப் பயப்படாமலிருக்கவுங் கிரீசித்தியானி மாறகத்தை விச்சுவதித்து உறுதியோடேயிருக்கவும் நாள்தோறும் இப்படியே நல்ல புத்திகள் சொல்லிக் குடுப்பார். அவர்களும் அப்படியே தமிளர் வணங்குகிற தெய்வங்களை வணங்கமாட்டோம் என்றதுக்காக வேண்டி அவர்களைக் (குற்மாசியு)வென்ற (கப்பித்தான்) அனேகம் அடியடிப்பித்ததிற் பின்பு அவர்களுடைய தலைகளை வெட்டக் கட்டழையிட்டான் (அடியார் வரலாறு, பக். 13).

யேசு அறையுண்ட சிலுவையைக் கண்டெடுத்ததைக் குறிப்பிடும் போது "காட்டின இடத்திலே "தமிளர் வணங்கிற தெய்வங்கள் உண்டாயிருந்திது" என்கிறார் (மேலது 124).

எவுசேனியாள் "தமிழர் வணங்கிற தம்பிரான்களை" வணங்காதிருந்தால் அவளை கொன்று போடவென்று மன்னன் கட்டளையிட்டதாகக் குறிப்பிடுகிறார். (மேலது 361)

ரோம் நகரில் தொம்மை (தாமஸ்) உபதேசித்ததை "கிரிசித்தியானி மாறகத்திலுள்ள உண்மைகளும் தமிழர்

மாற்கத்திலுள்ள பொய்களும் அவர்களுக்கு அறிவித்தார்" என்று குறிப்பிடுகிறார் (மேலது 507).

முத்துக்குளித்துறையில் வாழும் பரதவர்களை ஆண்டவர் தன்னுடைய எல்லைக்கு வரவழைத்துக் கொண்டார் என்பதை,

> "இந்த இராச்சியங்களில் எத்தனை கோடானகோடி தமிழர், தமிழர் மாற்கத்தின்படியே நடக்கச் செய்தே மீன் பிடிக்கிற உங்களையல்லோ தம்பிரான் தன்னுடைய மாற்கத்திலே வருவித்துக் கொண்டான்.

என்று குறிப்பிடுகிறார்.

புற மதத்தினர் என்ற பொருளில் அடிகளார் பயன்படுத்திய தமிழ் தமிழர் என்ற சொல் அதே பொருளிலேயே 1916ஆம் ஆண்டிலும் வழக்கிலிருந்துள்ளது. 10.02.1916 சுதேசமித்திரன் இதழில் புதுச்சேரியைக் குறித்து வெளியான கட்டுரை ஒன்று,

> இந்த ஊரிலே தமிழன் என்றால் இந்து என்று அர்த்தம். சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவன் கிறித்தவ மதத்தைச் சேர்ந்து விட்டால் பிறகு அவனை தமிழன் என்று சொல்வதில்லை. விபூதி நாமம் போட்டவர்களுக்கு மாத்திரமே தமிழன் என்று பெயர். (செட்டியார் எ.கே. 1968)

என்று குறிப்பிடுகிறது. நெல்லை தூத்துக்குடி மாவட்டக் கடற்கரைச் சிற்றூர்களில் வாழும் கத்தோலிக்கப் பரதவர்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர் அல்லாதவர்களைக் குறிக்க **'தமிழாதி'**, **'தமிழாள்'** என்ற சொற்களை இன்றும் பயன்படுத்துகின்றனர். அண்ட்ரிக் அடிகளார் பயன்படுத்திய தமிழன் என்ற சொல்லின் தாக்கம் இன்றளவும் தென்மாவட்டக் கடற்கரைப் பகுதியில் உள்ளது.

பேதுரு – தொம்மை

யேசுவின் முதல் நான்கு சீடர்களில் சீமோன் என்பவரும் ஒருவர். சீமோனும் அவரது சகோதரர் பிலவேந்திரரும் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது "என் பின்னே வாருங்கள் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்று கூறி அழைத்துச்

சென்றார். சில காலம் கழித்து சீமோனிடம் "உன் பெயர் பாறை" (மத்தேயு 16:18) என்றார்.

பாறை என்பதைக் கிரேக்க மொழியில் "பேத்ரோஸ்" என்றும், லத்தீன் மொழியில் "பெத்ருஸ்" என்றும் ஆங்கில மொழியில் "பீட்டர்" என்றும் குறிப்பிடுவர். கத்தோலிக்கர்களின் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்புகளில் இராயப்பர் என்றே பீட்டர் குறிப்பிடப்பட்டார். ராய் என்ற தெலுங்குச் சொல், பாறை என்ற பொருளைத் தரும். பாறை என்று தமிழில் சொன்னால் நன்றாக இராது என்று கருதியே ராய் என்ற தெலுங்குச் சொல்லைப் பயன்படுத்தி இராயப்பர் என்றனர். ஆனால் அண்ட்ரிக் அடிகளார் பீட்டர் என்பதைப் பேதுரு என்றே குறிப்பிட்டுள்ளார். சீர்திருத்தக் கிறித்தவர்கள் அடிகளாரின் மொழிபெயர்பை ஒட்டியே பேதுரு என்ற சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். அண்மையில் வெளிவந்த விவிலியப் பொது மொழிபெயர்ப்பில் பேதுரு என்ற சொல்லே இடம் பெற்றுள்ளது.

யேசுவின் சீடர்களுள் ஒருவரான தாமஸ் என்பவரைத் தொம்மை என்ற பெயரால் அடியார் வரலாற்றில் அடிகளார் குறிப்பிடுகிறார். இன்றும் முத்துக்குளித்துறைக் கடற்கரைப் பகுதியில் தாமஸ் என்ற பெயரைத் 'தொம்மை' என்றும், புனித தாமஸைத் 'தொம்மையார்' என்றும் குறிப்பிடும் வழக்கம் உள்ளது.

மலபார்

"கிரீசித்தியானி வணக்கம்" என்ற நூலின் தொடக்கத்தில் போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதிய குறிப்பில் "*மலபார் என்ற தமிழில்*" என்று அடிகளார் எழுதியுள்ளார். அடியார் வரலாறு நூலிற்குப் போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதிய முன்னுரையிலும் "முத்துக்குளித்துறையில் வாழும் *மலபார் கிறிஸ்தவ மக்களுக்காக* அச்சிடப்படுவதால் இந்நூல் முழுவதும் *தமிழ் என்று சொல்லப்படும் மலபார் எழுத்துக்களில்* அச்சாகி இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று மலபார் என்ற சொல் கேரளத்தில் ஒரு பகுதியைக் குறிக்கும் சொல். ஆனால் மலபார் என்ற சொல் சோழ மண்டலக்

(Coramandal) கடற்கரையைக் குறிக்கும் சொல்லாக முன்னர் வழங்கியுள்ளது.

முதலில் அராபியர்கள் 'ம அபர்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். இன்றையக் கொல்லம் தொடங்கி நெல்லூர் வரையிலான கடற்கரைப் பகுதிகளையே 'ம அபர்' என்ற சொல்லால் குறித்தனர். துவார சமுத்திரத்திற்கும் மதுரைக்கும் இடையிலுள்ள பகுதியையே மாபர் என்று மார்க்கோபோலோவும் அரேபியர்களும் குறிப்பிட்டனர். அராபியப் பயணியான வஸ்ஸாப், குலசேகரப் பாண்டியனை ம அபரின் ஆட்சியாளனாகக் குறிப்பிடுகிறார். ம அபர் என்ற சொல்லே மலபார் என்று தொடக்ககால ஐரோப்பியர்களால் ஒலிக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு, தமிழர், தமிழ் என்று மூன்றையும் குறிக்கும் சொல்லாக மாறியது. இதன் காரணமாகவே அடிகளார் மலபார் என்ற சொல்லைத் தமிழைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார்.

ராகுத்தம்மார்

தமிழ்நாட்டு இஸ்லாமியர்களுள் ஒரு பிரிவினர் இராவுத்தர் (ராவுத்தர்) என்றழைக்கப்படுகின்றனர். இவர்களது பெயருக்குப் பின் ராவுத்தர் என்ற பட்டம் இடம்பெறுகிறது. அச்சுத தேவராயரின் பதினாறாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் ராவுத்தர் ஒருவர் கணக்கராகப் பணியாற்றியதை, 'கணக்கப்பிள்ளை ராவுத்தனாயன் எழுத்து' என்று குறிப்பிட்டுள்ளது (S.I.I. Vol. XVII, கல்வெட்டு எண் 264). Raut என்ற உருதுச் சொல்லின் அடிப்படையில் ராவுத்தர் என்ற சொல் உருவானதாகவும், குதிரை வீரன் என்ற பொருளும் இச்சொல்லுக்கு உண்டு என்றும் சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகன் குறிப்பிடுகிறது. குதிரை வீரன் என்ற பொருளில், ராவுத்தர் என்ற சொல் பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்ததை உ.வே. சாமிநாத அய்யர் (1991A:108-113) குறிப்பிடுகிறார்.

குதிரைச் சேவகனாக வந்த சிவனை ***'ராவுத்தராயன்', 'குதிரையிராவுத்தன்'*** என்று திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகிறது. மாணிக்கவாசகர் முன் குதிரை வீரனாகச் சிவன்

வந்ததைத் திருப்பெருந்துறைப் புராணம்,

> "கோட்டமில் லாமா ணிக்காவா சகர்முன்
> *குதிரைரா வுத்தனாய்* நின்று
> வாட்டமில் லாத்தன் கருணையா ரமுதம்
> வளர்பெருந் துறையரன் புரிந்து"

என்று குறிப்பிடுகிறது. 'திருப்பெருந்துறைச் சிவாலயத்தில் குதிரை ஸ்வாமி மண்டபம், அல்லது குதிரை இராவுத்தர் மண்டபம் என ஒரு மண்டபம் உள்ளது. அங்கே சிவபிரான் குதிரைவீரராக உள்ள திருவுருவம் ஒன்று விளங்குகிறது" (சாமிநாத அய்யர், 1991A:110). சில நாட்டார் தெய்வங்களின் அருகில் குதிரையுடன் நிற்கும் துணைத் தெய்வங்களை 'ராவுத்தர் சாமி' என்று குறிப்பிடும் பழக்கம் இன்றும் உள்ளது.

இவ்வாறு குதிரை வீரனை இராவுத்தன் என்ற சொல்லால் குறிக்கும் பழக்கம் வழக்கில் இருந்தமையால் அடிகளாரும் குதிரை வீரர்களைக் குறிக்க 'ராகுத்தம்மார்' என்ற சொல்லைத் தமது 'அடியார் வரலாறு' நூலில் பயன்படுத்தியுள்ளார்.

8. தமிழ் அச்சுத் தந்தை

உலகின் பெரும்பாலான சமயங்களைப் போன்றே கிறித்தவத்திற்கும் இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று, ஒடுக்கப்பட்டவர் சார்பில் செயல்படும். மற்றொன்று, ஆளுவோரின் குரலாக ஒலிக்கும். உலகின் பெரும்பாலான நாடுகளில் காலனியத்தின் ஓர் அங்கமாகவே கிறித்தவம் பரவியது. இதனால் தான் ஆப்பிரிக்க விவசாயி ஒருவர்,

> "அவர்கள் எங்களிடம் வந்தபொழுது, அவர்களிடம் பத்துக் கட்டளைகள் இருந்தன. எங்களிடம் நிலம் இருந்தது; இப்போது பத்துக் கட்டளைகள் எங்களிடம்; நிலம் அவர்களுடையது." (வார்கா, 1966)

என்று கூறியுள்ளார். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், புனித தாமஸுக்குப் பின்னர் பரவிய கத்தோலிக்கம், போர்ச்சுக்கீசிய காலனியத்தின் துணையுடன்தான் பரவியது. வரலாற்றாசிரியர், பணிக்கர் "ஒரு கையில் வாளையும், ஒரு கையில் சிலுவையும் கொண்டு போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிற்குள் வந்தனர்" என்று குறிப்பிடுவார்.

ஆயினும், மறைப் பணியாளர்கள் அனைவருமே காலனிய நோக்குடன் செயல்பட்டவர்கள் என்று கூறிவிட முடியாது. கிறித்தவத் தகவுகளாகிய துயறுருவோருக்கு உதவுதல் என்பதில் ஈடுபாடு கொண்ட மறைப்பணியாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உதவிக்கு வந்தனர். ரோம் நாட்டில் பரவிய ஆதிக் கிறித்தவத்தைப் போன்றே தமிழ்நாட்டில் பரவிய தொடக்கக் காலக் கத்தோலிக்கம் ஒடுக்கப்பட்டோரின் சார்பில் நின்றது. ஆயினும், காலனிய ஆட்சியாளர்களின் உதவியுடன் செயல்பட வேண்டியிருந்ததால், ஓர் எல்லைக்கு மேல் இவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் பக்கம் நிற்க முடியவில்லை. சில நேரங்களில் காலனியச் சார்பு நிலையை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவர்களுக்கு இருந்தது.

சவேரியாரும், அண்ட்ரிக் அடிகளாரும் போர்ச்சுக்கீசியக் காலனியத்துடன் நெருக்கமான தொடர்பு கொள்ள வேண்டிய நிலையிலேயே இருந்தனர். ஆயினும், பல நேரங்களில் சவேரியார் முத்துக்குளித்துறைப் பரதவர்களின் நலனை முன்னிலைப்படுத்தி, போர்ச்சுக்கீசிய அதிகாரிகளுடன் முரண்பட்டதற்கு அவருடைய கடிதங்களில் சான்றுகள் உள்ளன.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையை மேற்கொள்ள வேண்டிய சூழலில், “தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமலேயே” சில ஆக்கப் பணிகளையும் கத்தோலிக்கம் மேற்கொண்டது. அவற்றுள் ஒன்று, நூல்களை அச்சாக்கம் செய்தமையாகும். தமிழ்நாட்டின் பண்பாட்டுச் சூழலுடன் இணைத்துப் பார்த்தால் நூல் அச்சாக்கப் பணி எவ்வளவு புரட்சிகரமானது என்பது புலனாகும்.

தமிழ் நூல்கள்

இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய, இலக்கணப் பாரம்பரியம் கொண்ட தமிழ் மொழியில் பனை ஓலைச் சுவடிகளே அச்சு நூல்களின் பணியை நிரப்பி வந்தன. பனை ஓலையில் எழுதுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. இது குறித்து, மயிலை சீனிவேங்கடசாமி (2001 :90) கூறுவது:

> ‘‘பனையோலைகளில், இரும்பு எழுத்தாணியால் எழுதுவது கடினமான வேலை. ஒரு நூலைப் பிரதி எழுதுவதற்கு, நேரமும் உழைப்பும் அதிகமாகக் கொண்டன. கூலி கொடுத்து எழுதினால், செலவு அதிகம் பிடிக்கும். ஏடெழுதுவோர், கற்றறிந்த அறிஞராக இல்லா விட்டால், அல்லது எழுதும்போது கருத்தைச் செலுத்தி எழுதா விட்டால், அப்பிரதியில், பிழைகளும் பாட பேதங்களும் ஏற்பட்டு விடும். ஓலைச் சுவடிகளில் பிரதிக்குப் பிரதி பாடபேதங்கள் இருப்பதற்குக் காரணம், ஏடெழுதுவோரின் கவலையின்மையும் அறியாமையுமே.’’

இத்தகையச் சூழலில், பொருள் வளம் படைத்தவர்கள் மட்டுமே ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களைப் பயன்படுத்த

முடியும். சான்றாக, கம்பராமாயணம் பன்னிரண்டாயிரம் செய்யுட்களைக் கொண்டது. இவையனைத்தையும் ஓலைச் சுவடியில் எழுதிப் படியெடுப்பது என்பது பல மாதங்கள் பிடிக்கும் பணியாகும். இது தொடர்பாகப் பேராசிரியர் நா. வானமாமலை கூறிய ஒரு செய்தி வருமாறு:

> “தென்திருப்பேரை, ஆழ்வார் திருநகரி, நான்குநேரி, திருக்குறுங்குடி ஆகிய வைணவத் தலங்களில் கம்பராமாயணச் சுவடிகளைப் படியெடுக்கும் தொழிலைச் செய்யும் சில குடும்பங்கள், இருபதாம் நூற்றாண்டின் கால் பகுதி வரை வாழ்ந்து வந்தன. கம்பராமாயணச் சுவடி வேண்டுவோர் இவர்களைச் சந்தித்து, படியெடுக்கச் சொல்லும் போது பணம் அல்லது தானியங்கள் கொடுப்பர். படியெடுத்து முடியும் வரை அவருடைய குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைத் தானிய வடிவிலோ, பண வடிவிலோ தருவர். படியெடுக்கும் பணி முடிந்ததும், படியெடுத்தவருக்குப் புத்தாடை வழங்கிச் சிறப்பித்து அச்சுவடியை கோவிலில் வைத்து வணங்கி எடுத்துச் செல்வர்.” (உரையாடலின் போது இந்நூலாசிரியரிடம் கூறியது)

படியெடுக்கும் பணியைச் செய்பவர்க்கு இவ்வாறு ஊதியம் வழங்கும் ஆற்றலுடையவரே கம்பராமாயண ஒலைச் சுவடியை வைத்துக் கொள்ள முடியும். இத்தகைய சூழலில்தான் சமணர்கள் ‘சாஸ்திர தானம்’ என்ற தானத்தைப் பின்பற்றினர். இதன்படி, ‘செல்வர்களான சமண சமயத்தவர் வீடுகளில், திருமணம் முதலிய சிறப்புக்கள் நடைபெறும்போது, தமது சமய நூல்களைப் பல பிரதிகள் எழுதுவித்து, அப்பிரதிகளைத் தகுந்தவர்களுக்குத் தானமாக வழங்கினார்கள்” (வேங்கடசாமி, 2001 : 91).

ஏட்டுச் சுவடிகள் விலைக்குக் கிடைத்தாலும் அவை விலை அதிகமாக இருந்தன. பீட்டர் பெர்சிவல் என்ற கிறிஸ்தவ குரு “1835ஆம் ஆண்டுக்கு முன்னர், சதுரகராதி ஓலைப் பிரதியைப் பத்துப் பவுன் (நூற்றைம்பது ரூபா) விலை கொடுத்து வாங்கியதாகவும், அந்த அகராதி அச்சிற் பதிப்பிக்கப்பட்ட பிறகு, ஒரு பிரதியை 2½ ஷில்லிங்கு* (1 ரூபா 14 அணா) விலை கொடுத்து

* ஷில்லிங் - இங்கிலாந்து நாட்டு நாணயம்

வாங்கியதாகவும் மர்டாக்கு என்பவர் எழுதியுள்ளார்'' (மேலது). அத்துடன் தேவைப்படும் நூலைப் பெறுவது என்பது கடினமான ஒன்று. இதுகுறித்து, மயிலை சீனிவேங்கடசாமி (2001:91) கூறும் செய்திகள் இன்றையச் சூழலில் நமக்கு வியப்பை அளிக்கும்.

> ''அச்சுப் புத்தகம் இல்லாத காலத்தில், ஒரு நூல் வேண்டியிருந்தால், அந்நூல் வைத்திருப்பவரிடம் சென்று, அந்நூலைப் பெற்றுப் பிரதி எழுதிக் கொள்ளவேண்டும். முதலில் யாரிடம் அந்த நூல் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். பிரதி உள்ளவர், அதனை இரவல் கொடுக்கமாட்டார். இரவல் கொடுத்தால் திரும்பி வராது என்னும் அச்சத்தினால். ஆகவே, அவர் வீட்டுக்குச் சென்று, பிரதி எழுதிக் கொள்ள வேண்டும். பிரதி எழுதுவதற்கு, நேரமும் உழைப்பும் அதிகமாகச் செல்லும். இந்த கடினமான வேலைக்கு அஞ்சி, புலவர், தம்மிடம் உள்ள ஒரு நூலை மற்றவருக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக தமக்கு வேண்டிய வேறு நூலைப் பெற்றுக் கொள்வதும் உண்டு.''

இத்தகைய இடர்ப்பாடுகள் மட்டுமின்றி, சமயக் காழ்ப்புணர்ச்சியினால் நூல்களை அழிப்பதும் எளிதாக இருந்தது. இடைச் செருகல்கள் நிகழ்த்துவதற்கும் வாய்ப்பாக இருந்தது. ''சுவடிகளில் எழுத்துக்கள் செவ்வெனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு அல்லது ஊமத்தை இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைச் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள்'' என்று சாமிநாத அய்யர் (1991:133) குறிப்பிடுவார். ஓலைச் சுவடியைப் பேணுவதற்கு மேற்கொள்ள வேண்டிய சிரமமான வழிமுறைகளை அவரது இக்கூற்று உணர்த்துகிறது.

அச்சாக்கம் செய்த புதுமை

மேற்கூறிய இடர்ப்பாடுகளிலிருந்து தமிழ் மொழியை அச்சுக்கலை விடுவித்தது. அதுமட்டுமின்றி, சாதியமும் தீண்டாமையும் மேலோங்கி இருந்த தமிழ்ச் சமூகத்தில் கல்வியென்பது பரவலாக்கப்படாமல் குறிப்பிட்ட சில சாதியினரின் பிடிக்குள்

இருந்தது. அறிவொளி அனைவரிடமும் பரவாமல் மிக விழிப்புடன் பார்த்துக் கொண்டனர். ஆனால், நூல் அச்சாக்கம் இத்தடைகளை உடைத்துக் கல்வியை அனைத்துத் தரப்பினரும் பெற உறுதுணையாய் இருந்தது. ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் பெரும்பாலும் புலவர்களிடமும் வளம்படைத்த தனி மனிதர்களிடமும் மடங்களிடமும் முடங்கிக் கிடந்தன. ஆனால் அச்சு நூல் சற்றுப் பரவலாக அனைவரிடமும் சென்றடைந்தது. இதனால்தானோ என்னவோ ஒரு நூலை அச்சிடுவதை "அச்சுவாகனம் ஏற்றி" என்று 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் குறிப்பிட்டுள்ளனர். தமிழக நாட்டார் தெய்வங்களும் சைவ வைணவத் தெய்வங்களும் தமது இருப்பிடமான கோவில்களைவிட்டு, மக்கள் தரிசிக்கும் வகையில் தேர், சப்பரம் போன்ற வாகனங்களில் ஏறி உலாவரும் நிகழ்வு உண்டு. நூலும் சில எல்லைகளைத் தாண்டி பொதுமக்களிடம் பரவலாக உலா வருவதை மனதில் கொண்டே அச்சு வாகனம் ஏற்றி என்று குறிப்பிட்டனர் போலும்.

"கிறித்தவம் எனும் சர்வதேசிய மதத்தின் தாக்கம் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் எத்தகைய புதிய வளர்ச்சிப் பரிமாணங்களை ஏற்படுத்திற்றென்பதை நோக்குதல் வேண்டும்" என்று கூறும் கா. சிவத்தம்பி *(1994:82)* தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் கிறித்தவம் ஏற்படுத்திய மாற்றத்தைப் பின்வருமாறு கணிக்கிறார்:

> முதலாவதும், மிகமுக்கியமானதும், இலக்கியம் பற்றிய எண்ணக் கருவில் ஏற்பட்ட மாற்றமாகும். தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் இலக்கியத்தின் 'பெறுநர்' வட்டம் மிகக் குறுகியதே. உயர் இலக்கியத்தின் 'பெறுநர்' வட்டமும் அடிநிலை இலக்கியத்தின் பெறுநர் வட்டமும் வெவ்வேறாக ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றன வாகக் கூட இருந்தன. நவீன தமிழ் இலக்கியத்தில் இந்த இருகிளைப்பாடு, சனநாயகவாக்கம் (Democratization) காரணமாக கருத்து நிலையில் அகற்றப்பெறுகிறது. கிறித்தவம் முன்னர் நிலவிய பெறுநர் வட்ட இறுக்கத்தைத் தளர்த்தியது. இது ஒரு பெருஞ்

> சாதனையாகும். மதக் கோட்பாடுகள், முறைமைகள் அம்மதத்தைப் பின்பற்றுவோர் யாவராலும், முழு திருக்கூட்டத்தாலும் (Congregation) விளங்கிக் கொள்ளப்பட வேண்டுமென்பது கிறித்தவ வாதம். அது விவிலியத்தை வாசிக்கின்ற எழுத்தறிவுள்ள (புரட்டஸ்தாந்திகள்) கூட்டமாக இருக்கலாம் அல்லது அதனை வாசிப்பதை அத்தியாவசியமாக்காத (கத்தோலிக்கக்) கூட்டமாக இருக்கலாம். ஆனால் இருநிலைகளிலும் 'கூட்டம்' முக்கியமாகிறது. சமய விளக்கம் கூட்டம் நோக்கியதாக இருத்தல் வேண்டும் என்பது இங்கு முக்கியமாகிறது. இது இந்து மதத்திற்கு முக்கியமாகச் சைவ மதத்திற்குப் புறம்பான ஒரு கோட்பாடாகும். விமோசனமார்க்கம் தனிநிலைப்பட்டதென்பது ஒரு புறமிருக்க வழிபடுவோர் எல்லோரையும் ஒரு கூட்டமாகக் கருதும் வழக்கம் சைவத்தில் ஒருகாலமிருந்ததெனினும் பின்னர் வற்புறுத்தப்படவில்லை.
>
> இலக்கியம் பற்றிய இக்கருத்துநிலை மாற்றம் (Ideological change) படிப்படியாக நவீன இலக்கியத்திற்கு எம்மை இட்டுச் செல்கிறது. இவையே நவீன இலக்கியங்களாகிவிடவில்லை. நவீன இலக்கியத்தின் வருகைக்கான தயார்நிலை தமிழில் ஏற்பட்டு விடுகின்றது.

சிவத்தம்பியின் இந்தக்கணிப்பு அடிகளாரின் எழுத்து மற்றும் அச்சுப் பணிகளுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

அண்ட்ரிக் அடிகளாரின் நூல்கள் சமயம் சார்ந்த நூல்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவர் சார்ந்த கத்தோலிக்கச் சமயத்தைத் தழுவியவர்களை அதில் நிலைப்படுத்தவும் சமய உண்மைகளை அவர்கள் புரிந்து கொள்ளவும்தான் அவர் முன்னர் குறிப்பிட்ட நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். ஆயினும் சமய எல்லையைத் தாண்டி அனைவரும் படித்துப் பார்க்கும் ஆர்வத்தை அந்நூல்கள் தூண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு புதிய அறிவியல் கண்டுபிடிப்பைச் சமூகத்தில் அறிமுகப்படுத்தி விட்டால் அது அடுத்தடுத்துப் பரவி, அடுத்த வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்வதைத் தடுக்க முடியாது. அடிகளாரின் அச்சாக்கப் பணியும் அத்தகையதுதான். ஆயினும் கி.பி. 1658இல்

நிகழ்ந்த டச்சுக்காரர்களின் படையெடுப்பும் அதன் விளைவாக முத்துக்குளித்துறைப் பகுதியில் போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்கம் மறைந்தமையும், அடிகளாரின் அச்சாக்கப் பணி தொடர முடியாமல் செய்துவிட்டது.

இந்தியாவின் முதல் அச்சு நூல்

உலக நாடுகளில் நூல் அச்சாக்கம் நிகழ்ந்த காலத்துடன் அண்ட்ரிக் அடிகளாரின் அச்சுப் பணியை ஒப்பிட்டுப் பார்த்தால் அவரது பணியின் சிறப்பு புலனாகும்.

நாடு	நூல் அச்சான ஆண்டு
சீனா	1584
ஜப்பான்	1590
பிலிப்பைன்ஸ்	1593
ருஷ்யா	1563
கான்ஸ்டான்டிநோபில்	1727
கிரீஸ்	1821

தனிநாயக அடிகளார் குறிப்பிடும் (1958:291) இச்செய்திகள், வளர்ச்சியடைந்த நாடுகளாக இன்று விளங்கும் நாடுகளுக்கு முன்னதாகவே 1578இல் தமிழ் மொழியில் அச்சாக்கம் நிகழ்ந்துள்ளதை உணர்த்துகின்றது. மேலும் இந்திய மொழிகளில் தமிழ் மொழிதான் முதன் முதலாக அச்சானது என்ற சிறப்பையும் அண்ட்ரிக் அடிகளார் தமிழ்மொழிக்கு வழங்கியுள்ளார். இவற்றினடிப் படையில் தமிழ் மொழியின் அச்சுத் தந்தை* என்று அண்ட்ரிக் அடிகளாரைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

* அடிகளாரைக் குறிக்க 'தமிழ் அச்சுத் தந்தை' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் அண்மையில் காலமான அருட்திரு இராசமாணிக்கம் என்ற சேசு சபைத் துறவியாவார்.

துணை நூற்பட்டியல்

தமிழ்

அந்தோணி இராசு, ஆபி., 1992, *புனித அந்தோணியார் அம்மானை*, திருச்சி, ஆரோக்கியம் பதிப்பகம்.

அருணாசலம், 1969, *தமிழ் இலக்கிய வரலாறு*, 14ஆம் நூற்றாண்டு, மாயூரம்.

இராகவன்,வி.எஸ்.வி. 1977, *பிளினி*, சென்னை, மணிவாசகர் நூலகம்.

இராசமாணிக்கம், ச.(பதிப்பாசிரியர்) 1963, *வணக்கம்*, தூத்துக்குடி, தமிழ் இலக்கியக் கழகம்.

இராசமாணிக்கம். ச, (பதிப்பாசிரியர்) 1917, *அடியார் வரலாறு*, தூத்துக்குடி, தமிழ் இலக்கியக் கழகம்.

சதாசிவ பண்டாரத்தார், 1971, *பிற்காலச் சோழர் வரலாறு* (மூன்றாம் பகுதி), அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சம்பந்தன், மா.சு. 1997, *அச்சும் பதிப்பும்*, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

சம்பந்தன், மா.சு., 1999, *எழுத்தும் அச்சும்*, சென்னை, காமராஜ் பதிப்பகம்.

சரோஜினி பாக்கியமுத்து, 1990, *விவிலியமும் தமிழும்*, சென்னை, குருகுல் லூத்திரன் இறையியல் கல்லூரி.

சாமிநாதையர், உ. வே. 1991, பண்டைக்காலத்துப் பள்ளிக் கூடங்கள் *நல்லுரைக் கோவை* (முதற் பாகம்), சென்னை, உ.வே. சா. நூல் நிலையம்.

---------- 1991A, இராவுத்தர், *நல்லுரைக் கோவை* (இரண்டாம் பாகம்), சென்னை, உ. வே. சா. நூல் நிலையம்.

சிவத்தம்பி, கா. 1994, தமிழிற் கிறித்தவ இலக்கியப் பாரம்பரியம், *தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும்*, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்.

சுந்தரமூர்த்தி, இ., சண்முகம் பிள்ளை, மு. (பதிப்பாசிரியர்) 1990, *திவாகரம்*, தொகுதி 2, சென்னை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சுப்ரமணியன், பா. (பதிப்பாசிரியர்) 1989, *தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணர் தமிழாக்கமும் குறிப்புரையும்*, (தொகுதி 2), தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகம்.

செட்டியார், ஏ.கே. 1968, *தமிழ்நாடு பயணக் கட்டுரைகள்*, சென்னை, ஏசியன் டிராவல்ஸ்.

தமிழ்நாடன், 1995, *தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்*, தஞ்சாவூர், எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

பரமேச்சுவரி லால் குப்தா, 1978, *நாணயங்கள்*, புதுடில்லி, நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா.

பிரிட்டோ வின்சென்ட், சே.ச. (பதிப்பாசிரியர்), 2002, *தூய சவேரியார் கடிதங்கள்*, பாளையங்கோட்டை, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

பிள்ளை, கே.க. 1981, *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்*, சென்னை, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்.

மாதவன், வே. இரா, 2000, *சுவடிப்பதிப்பியல்*, தஞ்சாவூர், பாவை வெளியீட்டகம்.

முகம்மது, உவைஸ். 1986, *இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு*, தொகுதி 1, மதுரை.

வார்கா, இ. 1996, *இருபதாவது நூற்றாண்டு முதலாளித்துவம்* (மொழிபெயர்ப்பு நூல்), சென்னை.

வெனான்சியுஸ், எஸ். 1977, புன்னைக்காயல் மருத்துவமனை, *ஞானதூதன்*, நவம்பர் 1977.

வெனான்சியுஸ், எஸ். , 1978, தமிழ் அச்சுப் பிரசுர 400-வது ஆண்டு விழா, *ஞானதூதன்,* பிப்ரவரி 1978.

வேங்கடசாமி, மயிலை சீனி, 1964, *பௌத்தமும் தமிழும்,* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

----------- 2001, *கிறித்துவமும் தமிழும்,* சிதம்பரம், மெய்யப்பன் தமிழாய்வகம்.

----------- 2001, *பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்,* சிதம்பரம், மெய்யப்பன் தமிழாய்வகம்.

ஆங்கிலம்

Antony D'Coasta, SJ. 1999, *The Call of the Orient,* Mumbai.

Castets. J, 1926, *Fr. Enrique Enriquez,* Trichi, Indian Catholic Truth Society.

Champaklakshmi, R. 1999, *Trade Ideology and Urbanization,* Madras, Oxford University Press.

Ferroli, SJ. 1939, *The Jesuits in Malabar,* Vol. I. Bangalore.

Francis. A., 1989, *Evangelization of the Pearl Fishery Coast Under Fr. Henrique Henriquez (Unpublished M.Phil Thesis)*, Madurai.

George Schurhammer, 1952, The First Printing in Indi Characters, Spring, *Harvard University Library Bulletin,* Vol. VI, No.2.

George Schurhammer, S.J., 1997, *Francis Xavier*, Rome, Italy, Gregorian University Press.

Hein, Jeanne H., 1977, Father Henriques' Grammar of Spoken Tamil, 1548, Bangalore, *Indian Church History Review.*

Jeyaseela Stephen, S., 2001, The Portuguese Contribution, To Catholic Tamil Literature In The Sixteenth Century, *Indica*, Special Jubilee Volume, Bombay, Heras Institute of Indian History and Culture.

Joseph Costelloe, S.J., 1993, *The Letters and Instructions of Francis Xavier*, Missouri, The Institute of Jesuit Sources.

Joseph Thekkedath, 1988, *History of Christianity in India*, Volume II, Bangalore, Church History Association of India.

Kaj Baago Compiler, 1969, *A Bibliography*, Bangalore, United Theological College.

Kesavan, B.S., 1985, *History of Printing and Publishing in India*, Volume I, India, National Book Trust.

Krishnaswamy, A. 1964, *Tamil Country under Vijayanagar,* Annamalainagar, Annamalai University Publication.

Mahalingam, 1967, *South Indian Polity,* Chennai, University of Madras.

Nilakanta Sastri, K.A. 1972, *Foriegn Notices of South India from Megasthenes to Ma-huan,* Madras, Madras University.

Rajamanickam, S., 1971, Padre Henrique Henriques, The Father of the Tamil Press *Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies*, Chennai, International Association of the Tamil Research.

Thaninayagam, X., 1954, Tamil Manuscripts in European Libraries, Tamil Culture.

Thaninayagam, S., 1958, Vol: VII, The First Books printed in Tamil, *Tamil Culture*, Chennai.

Venantious Fernando, S., 1977, *The Impact of the Portuguese Padroado on The Indian Pearl Fishery Coast*, Doctoral Thesis, Urban University, Rome, St. Peter's College.

Wicki, Joseph SJ., 1965, 1966, 1967, Father Henrique Henriques, S.J., *Indian Ecclesiastical Studies*, April 1965, Vol: 4, 5, Bangalore.

Wicki, Joseph S.J. 1967, The Contraternity of Charity of Fr. Henry Henriques, Bangalore, *Indian Church History Review.*

கல்வெட்டுக்கள், பட்டயங்கள்:

1967, *பாண்டியர் செப்பேடுகள் பத்து*, சென்னை, தமிழ் வரலாற்றுக் கழகம்.

இராசு, 1994, *சேதுபதி செப்பேடுகள்*, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

கிருட்டிணன், அ. 2001, *சேலம் நாமக்கல் மாவட்ட கல்வெட்டுக்கள்*, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

South Indian Inscriptions, Vol. II (2001), Vol. VIII (1986), Vol. XVII (1988).

பின்னிணைப்பு 1

அடியார் வரலாறு நூலுக்கு அண்ட்ரிக் அடிகளார் ஸ்பானிஷ் மொழியில் எழுதிய முன்னுரை

முத்துக்குளித்துறையில் வாழும் மலபார் கிறிஸ்தவ மக்களுக்காக அச்சிடப்படுவதால் இந்நூல் முழுவதும் தமிழ் என்று சொல்லப் படும் மலபார் எழுத்துக்களில் அச்சாகியிருக்கிறது.

ஆனால் அம்மொழி அறியாத மக்களுங்கூட இந்நூலின் உள்ளுறையை உணரும்பொருட்டு இந்நூல் கூறும் முக்கியமான திருவிழாக்கள் பற்றி இச்சிறிய குறிப்பை இம்மொழியில்* எழுதவேண்டுமென்று நினைத்தேன்.

எல்லாவற்றையும் இப்பொழுது அச்சிட முடியாதபடியால், இப்புதிய கிறிஸ்தவர்களுக்குப் பொருத்தமான இவற்றைப் பொறுக்கி எடுத்தோம்.

செபமாலை டியேகோ என்ற அடிகளார் எழுதிய "புனிதரின் பூச்செண்டு" என்ற நூலிலிருந்தும், விப்பேமோனோ என்ற அடிகளாரது நூலினின்றும்**, சுவாக்கீம் பெரியோனியோ என்பவரது "அப்போஸ்தலர்களின் வரலாறு" என்ற நூலிலிருந்தும் இவை மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்தக் கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுமென்று நமக்குத் தோன்றிய சில அறிவுரைகளை ஒரு சில திருவிழாக்களோடு சேர்த்திருக்கிறேன்.

வணக்கத்துக்குரிய கொச்சி மேற்றாண்டகையும், மேன்மை தங்கிய தணிக்கையாளர்களும் இந்நூலைப் பார்வையிட்டு அச்சடிப்பதற்கு உத்தரவு தந்தார்கள்.

சேசுசபையைச் சேர்ந்த பிற குருக்களோடு நான் இந்தக் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கவும், தேவத் திரவிய அனுமானங்

---

* இஸ்பாஞ்ஞிய மொழி

** நூற்றறுபது பழங்காலப் புனிதர்களின் வரலாறு

களை அளிக்கவும் பெரியோர் கட்டளைக்கிணங்கிச் சென்ற 37 ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கையில் இந்தக் கிறிஸ்தவர்களுக்கு உதவவேண்டுமென்ற ஆசையால் இம்மொழியை மிகவும் கவனத்தோடு பயின்றேன். மிகுந்த உழைப்பின் பயனாகவும், கடவுளின் அருளாலும் இம்மொழிக்கு இலக்கணம் எழுதக்கூடிய அளவுக்கு அதைக் கற்கலானேன்.

மேலும் இந்திய மாகாணத் தலைமை அடிகளின் விருப்பத்திற் கிணங்கி சேசுசபையைச் சேருவதற்கு முன் பெரிய அரசியல் அலுவலாளனாய் இருந்த ஒரு துணைச் சகோதரர் தமது சொந்தக் கையால் அக்கறையோடும் மிகுந்த உழைப்போடும் தமிழ் அச்சுக்களை உண்டாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றார். அதே அடிகளாரின் கட்டளைப்படி நான் அம்மொழியில் சில நூல்களை இயற்றுவதில் ஈடுபட்டேன். அவை பிறகு அங்கீகாரம் பெற்று அச்சாகின.

மேலும் இவ்வாண்டு 86 புனிதரின் வரலாறு கூறும் இந்நூலை அச்சிடுகிறேன். இதை இம்மொழியில் நன்கு பயிற்சியுள்ள தமிழரிடம் காட்டினேன்.

வரலாறுகள் நேர்த்தியாய் அமையும்படி அவற்றை மொழி பெயர்ப்பதில் மூன்று ஆண்டுகளுக்குமேல் செலவழித்தேன். இம்மொழியில் பயிற்சியுள்ள எனக்குத் தெரிந்த வரைக்கும், தமிழர்களின் கருத்துப்படியும், இவ்வரலாறுகள் பிழையின்றித்* தூய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன என்று நம்புகிறேன். இதனால் கடவுளுக்கே புகழ் உண்டாகட்டும். ஏனெனில் இதை அச்சிடும்போது இந்தக் கிறிஸ்தவர்களின் முன்னேற்றம் தவிர வேறு எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

மலபார் (தமிழ்), நம்மொழியின் நெடுங்கணக்கிலிருந்து முற்றிலும் வேறுபடுவதால் மலபார் மொழியில் அச்சிடப்பட்ட புனிதர்களையும் விழாக்களையும் கொண்ட அட்டவணை நமது மொழியிலிருந்து வேறுபட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

---

* இத்தமிழ் மொழிபெயர்ப்பு அருட்திரு. ச. இராசமாணிக்கம் அடிகளாரின் அடியார் வரலாறு நூலில் இடம் பெற்றுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.

அண்மை வெளியீடுகள்

AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY- TEVARAM AND TIVVIYAPPRAPANTAM	200.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ்நாடகம் - நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
திருக்குறள் பூரணலிங்கம் பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
நானும் என் எழுத்தும்	50.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
THE NARRINAI FOUR HUNDRED	175.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
மேலை நோக்கில் தமிழ்க்கவிதை	100.00
SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE	35.00
அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள்	125.00
TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY	200.00
சதகத்திரட்டு தொகுதி - 1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
சதகத்திரட்டு தொகுதி - 2	55.00
[illegible]	25.00
[illegible]ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை - 4	70.00
[illegible]	120.00
[illegible] ஊனமுற்றோர்	45.00
[illegible]	80.00
[illegible]னை - இலக்கிய மேம்பாடு	
[illegible]டிகளாரின் பங்களிப்பு	20.00
[illegible]ில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள்	25.00
[illegible] SPOKEN TAMIL	50.00
[illegible]	40.00
[illegible] பண்பாட்டுப் புரட்சி	25.00
[illegible]த்த தமிழ்	20.00
[illegible]டகம்	50.00
[illegible]ரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழில் விடுதலை இலக்கியம்	20.00
உலக அரங்கில் தமிழ்	30.00
பாரதி இந்தியா	40.00
தெசிணியின் தமிழாக்கப்பாடல் திரட்டு	50.00
உவேசா பதிப்புப்பணியும் பன்முகமாட்சியும்	35.00
தமிழ்மொழியின் வரலாறு	30.00
கோவலன் கதை	50.00

453 தமிழ் அச்சுத்தந்தை அண்டரிக் அடிகளார் 30.00